படைப்பு

ஊற்று: 1 | நதி: 12 | ஏப்ரல் 2019 | திங்களிதழ்

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## "ஒரு எழுத்தாளனாக அடைந்ததைவிட, பத்துமடங்கு வாசகர்களை ஒரு கதைசொல்லியாக அடைந்திருக்கிறேன்"

■ எழுத்தாளர், கதைசொல்லி பவா செல்லதுரை அவர்களுடனான நேர்காணல்



கற்றது தமிழ்
– க.பூரணச்சந்திரன்



எண்வலிச்சாலை
– அண்டனூர்சுரா



கனவுகளின் ஈமக்கிரியை
– யுகபாரதி

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 1 | நதி: 12 | ஏப்ரல் 2019

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தனபால் பவானி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**கொ.வடிவேல்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவரவர் கருத்துக்களே. கதை மற்றும்
கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே,
படைப்பு தகவு மின்னிதழின்
கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - பக். 04
- **“ஒரு எழுத்தாளனாக அடைந்ததைவிட, பத்துமடங்கு வாசகர்களை ஒரு கதைசொல்லியாக அடைந்திருக்கிறேன்”**
  - எழுத்தாளர், கதைசொல்லி பவா செல்லதுரை அவர்களுடனான நேர்காணல் - பக். 05
- **திறனாய்வுச் செம்மல் - கற்றது தமிழ்**
  - க. பூரணச்சந்திரன் - பக். 20
- **தெருக்கூத்து**
  - சக்தி அருளானந்தம் - பக். 23
- **ஜான் பாட்ரிக் மோடியானோ**
  - தா. ஜோ. ஜூலியஸ் - பக். 25
- **செங்கோட்டை ஆவுடையக்காள்**
  - முகம்மது பாட்சா - பக். 36
- **பெ.ஸ்ரீராம் என்னும் தனித்துவ மொழிபெயர்ப்பாளர்**
  - கனிமொழி.ஜி - பக். 40
- **வையத் தலைமை கொண்டு வாழ வேண்டும்**
  - திருச்சி பிருந்தா - பக். 47
- **மகளதிகாரம் என்றொரு கவியதிகாரம்**
  - கோ.லீலா - பக். 49
- **இதயத்தை இ(அ)சைக்கும் ‘மூங்கில் வனம்!’**
  - கோ. பாரதிமோகன் - பக். 52
- **நாஞ்சில் என்னும் தேக்க மரம்**
  - ஐசக் பேசில் எமரால்ட் - பக். 57
- **கண்ணீரால் துயரங்களின் விஷத்தைக் குடித்துவிட முடியாது**
  - பரமக்குடி பா.உஷாராணி - பக். 60

## சிறுகதைகள்


- **என் வலிச் சாலை**
  – அண்டனூர் சுரா – பக். 14
- **பாற்கடல்**
  – லா.ச.ரா. – பக். 31
- **மொழியின் மரணம்**
  – வசீலா சாஹிர் – பக். 44
- **பேரோடை மங்கை**
  – கவிஜி – பக். 62


## கவிதைகள்


- **கனவுகளின் ஈமக்கிரியை**
  – யுகபாரதி – பக். 13
- **போகன் சங்கர்** – பக். 22
- **படைப்புலகம்** – பக். 29
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 7**
  – ஜின்னா அஸ்மி – பக். 43
- **நேசமித்ரன்** – பக். 51






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' பன்னிரண்டாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

அசோகமித்திரன் தமிழின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். எளிமைக்குள் வலிமைகளை வார்த்துத் தந்த படைப்பாளி. தனது சொந்த வாழ்வனுபவங்களை அடிப்படையாகக்கொண்டே புனைவுகள் புனைந்தார். அதனால் அவரது புனைவுகளிலும் உண்மைத்தன்மை மிளிர்ந்தது. அவரது இளவயதுச் சித்தரிப்புகள் நம்மையும் கைப்பிடித்து அழைத்துச் சென்று நிஜாம் காலத்தில் உலவவைக்கும். ஒற்றன் நாவலை வாசிக்கும்போது அயோவா பல்கலைக்கழகத்திற்கு அவர் சென்ற நாட்களில் நாமும் உடன் சென்று வந்திருப்போம். அவரது தனிச்சிறப்பே இதுதான்.. சிறுகுழந்தைகள் போல் நம்மைக் கைப்பிடித்து அழைத்துச்செல்வது.

அவரது படைப்புகளில் வரும் மனிதர்கள் எளிமையானவர்கள்.. வாழ்வை அதன் போக்கில் வாழவிட்டுப் பின்தொடர்பவர்கள். ஆனாலும் எதிர்பாராமல் அவர்கள் சந்திக்கநேரும் சிறு வளைவும் படைப்பை விசுவரூபமெடுக்கவைத்துவிடுகிறது. அவரது தண்ணீர் நாவல் தமிழின் முக்கியமான புதினங்களில் ஒன்று. நீர்மையற்ற சூழல் சித்தரிப்பில் நம்மைக் கரைய வைத்துவிடுவார்.

திரையுலக அனுபவங்கள், செகந்திராபாத் வாழ்க்கை, நகர முடிச்சுகள், மேற்கொண்ட பயணங்கள், சந்தித்த மனிதர்கள் என இவரது படைப்புகளுக்கென்று குறிப்பிட்ட வரையறுத்த சூழல் உண்டு. அதனால், ஊற்றில் தண்ணீர் அள்ளுவதுபோல் இவரது கதைகளில் எளிதாக வரலாற்றை அள்ளிச் சுவைக்கலாம். அது சற்றே முந்திய வரலாறுதானெனினும் அறியாத பக்கங்களுக்குரிய தனிருசி அதிலிருக்கும்.

ஒரு கலைஞனுக்குரிய முழுமையடைந்த வாழ்க்கையை அவர் வாழவில்லை என்றாலும்.. அம்முழுமையின்மையை வெளிப்படையாகத் தன் படைப்புகளில் தெரியப்படுத்தினார். ஒரு மாபெரும் படைப்பாளி தன் படைப்புகளில் சமூகத்தின் மிகச் சாதாரண மனிதனாக உலா வந்தார். அதுதான் நம்மை அவரிடம் நெருக்கமாக்கியிருக்கிறது. தேடப்படும் புலிக்கலைஞனாகத்தான் தன்னை அவர் உணர்ந்திருந்தார்போலும்.

தமிழ் இலக்கியச் சூழலில் மிக அதிகமாய்க் கொண்டாடப்படுபவரும் மிக மெலிதாய் விமர்சிக்கப்படுபவருமாகிய அசோகமித்திரனின் நினைவுதினம் உள்ள மாதம் இது. தன் எழுத்தால் என்றும் நம் நினைவுகளில் வாழ்பவர் அவர். தம்முள் நெருப்பைப் புதைத்துவைத்திருக்கும் அழகிய மலையின் தோற்றம்.. அவரது எழுத்துக்கள். வாசித்துக் கொண்டாடிக்கொண்டே இருக்கவேண்டிய கலைஞர் அவர்.

உலக புத்தக தினத்தை ஒட்டி நிறைய பதிப்பகங்கள் நூல்களைச் சலுகை விலையில் அறிவித்துள்ளன. எப்படியாயினும், அதிகளவு புத்தகங்களை அறிமுகம் செய்துகொள்வோம். தலைமுறைதலைமுறையாகக் கடத்தப்படும் அறிவுதான் மனித இனத்தின் மாபெரும் சொத்து. தம்மினும் தம்மக்கள் அறிவுகொள்ள.. நூல் வாசிப்பிற்கு உரமூட்டுவோம். வாய்மொழியாகவும் ஏட்டுச்சுவடியிலேயுமே ஏராளமான அறிவினைப் புதைத்துவைத்திருந்த தமிழனுக்கு இன்றைய வாசிப்புச் சூழல் பெரும்வாய்ப்பை வழங்கிக்கொண்டிருக்கிறது.. பயன்படுத்திக்கொள்வோம்.. அறிவுபெறுவோம்.

இந்த மாத இதழில் எழுத்தாளரும் கதைசொல்லியுமான பவாசெல்லதுரையின் நேர்காணல் வெளியாகியுள்ளது. இன்னும் சிறுகதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– **ஆசிரியர்**

நேர்காணல்

• ஜானு இந்து



# "ஒரு எழுத்தாளனாக அடைந்ததைவிட, பத்துமடங்கு வாசகர்களை ஒரு கதைசொல்லியாக அடைந்திருக்கிறேன்"

**- எழுத்தாளர், கதைசொல்லி பவா செல்லதுரை அவர்களுடனான நேர்காணல்**

சமகாலத்தில் தமிழில் ஒரு முக்கியமான படைப்பாளி பவா செல்லதுரை. ஒரு மிகச்சிறந்த கதைசொல்லியும்கூட. தனது எழுத்துக்களாலும் கதைசொல்லலாலும் உலகம் முழுக்கப் பரந்துபட்ட வாசகர்களையும், நண்பர்களையும், ரசிகர்களையும் சொந்தமாக்கிக்கொண்டவர். இவரது பத்திற்கும் மேற்பட்ட படைப்புகள் தமிழில் இருந்து மலையாளத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் முக்கியமான நகரங்களில் ஒன்றான தெய்வீகம் கமழும் திருவண்ணாமலையில் இருந்து எழுத்து, கதை சொல்லல், இலக்கியம் என எப்போதும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருப்பவர். சமீப காலங்களில் தமிழ்த் திரையுலகில் தனது இயல்பான நடிப்பால் தனது பன்முகத்தன்மையை நிரூபித்துக்கொண்டிருப்பவர். நமது படைப்பின் "தகவு" இணைய இதழுக்காக ஒரு பேட்டி என்றவுடன் உடனே சம்மதித்தார். அவருடனான ஒரு சுவாரசியமான உரையாடலில் இருந்து...

**ஒரு எழுத்தாளர் கதைசொல்லியாக மாறிய தருணம் பற்றிச் சொல்லுங்களேன்?**

அடிப்படையில் நான் இப்போதும் எழுத்தாளன்தான். இயல்பாக நான் படித்த, ரசித்த கதைகளை அவ்வப்போது நண்பர்களோடு பகிர்ந்துகொள்வது, நான் பேசும் கூட்டங்களில் என்னையறியாமலேயே கதைகளைச் சொல்வது வழக்கமாயிருந்தது. நண்பர்கள் அனைவருமே நீங்கள் கதை சொல்லும் விதம் தனித்துவமாக இருக்கிறது என்று சொல்வார்கள். குறிப்பாக ஜே.பி. என்னும் எனது நண்பர் ஒருநாள், 'எப்பொழுது உன்னோடு பேசினாலும் நான்கைந்து கதைகளாவது சொல்கிறாய், நாம ஏன் ஒரு தனி நிகழ்ச்சி வைத்து ஒவ்வொரு கதையாகச் சொல்லக்கூடாது' எனக் கேட்டார். அப்படி ஆரம்பமானதுதான் இந்தக் கதை சொல்லும் நிகழ்வு.

உண்மையில் மிகவும் சந்தோசமாக உணர்கிறேன். ஏனெனில் ஒரு எழுத்தாளனாக

அடைந்ததைவிட, பத்துமடங்கு வாசகர்களை ஒரு கதைசொல்லியாக அடைந்திருக்கிறேன். எனது புத்தகங்களை மட்டுமல்லாது நான் கதை சொல்லும்போது குறிப்பிடுகின்ற அனைத்து எழுத்தாளர்களின் கதைகளையும் எனது வாசகர்கள் தேடித்தேடி வாசிக்கிறார்கள் என்பதை ஒரு வெற்றியாகவே பார்க்கிறேன். இன்றைய இலக்கியச் சூழலில் இதை ஆரோக்கியமான ஒன்றாகவும் கருதுகிறேன்.

**உங்களுடைய முதல் கதை சொல்லிய நிகழ்வு ஞாபகம் இருக்கிறதா? எங்கு எப்போது நடந்தது?**

நல்லா ஞாபகம் இருக்கு. ரமணாஷ்ரமம் அருகில் Qua-vadis என்ற இடத்தில்தான் எனது முதல் கதை சொல்லல் நடந்தது. எழுத்தாளர் ஷோபா சக்தியின் “விலங்கு பண்ணை” என்கிற எனக்கு மிகவும் பிடித்தமான கதையைத்தான் அன்று சொன்னேன். ஐம்பது வாசகர்கள் கலந்துகொண்ட ஒரு மகிழ்வான நிகழ்வு அது. இந்த வாசகர்கள் எண்ணிக்கை சிறிதுசிறிதாகக் கூடி ஐந்நூறு வாசகர்கள் வரையும்கூட போயிருக்கிறது. வெளியூர்களில் இருந்து 100 முதல் 200 வாசகர்கள் வரை தொடர்ச்சியாக வர ஆரம்பித்தார்கள். அதன் பிறகு இது ஒரு இயக்கமாக மாற ஆரம்பித்தது மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. வாசகர்கள் வெறும் கதை கேட்பவர்களாக மட்டுமே இருக்கிறார்களா அல்லது அதைத் தாண்டியும் எதையேனும் செய்கிறார்களா என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் நாங்கள் பரிசோதனை முயற்சியாகச் சிலவற்றைச் செய்ய ஆரம்பித்தோம்.

உதாரணமாக, பிரபஞ்சன் அவர்களின் கதைகளைச் சொல்லும் கூட்டங்களில் அவருடைய படைப்புகளைப் பார்வைக்கு வைப்பது போன்ற முயற்சிகள். பத்தாயிரம் முதல் இருபதாயிரம் வரை புத்தகங்கள் விற்றன. இதையும் ஒரு வெற்றியாகத்தான் பார்க்க முடிந்தது.

**உங்களுக்கு எப்போது எழுத்தின் மேல் ஆர்வம் ஏற்பட்டது?**

ரொம்பச் சிறிய வயதிலேயே, அதாவது பள்ளிப் பருவத்திலிருந்தே நான் வாசிக்க ஆரம்பித்து விட்டேன். காரணம் என்னுடைய அப்பா. என் அம்மா பெரிதாகப் படிக்காதவர். அப்பா ஆசிரியராக இருந்தவர். அதோடு சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்றவர். அவர் அவரது அனுபவங்களைப் பற்றி நிறையப் பகிர்ந்து கொள்வார். அது மிகப் பிடித்தமானதாகவும் ஆர்வத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. அதிலிருந்து தொடங்கியதுதான் எனது வாசிப்புப் பழக்கம். தேடித்தேடி நிறைய வாசிக்க ஆரம்பித்தேன். எனது பத்தாம் வகுப்பு ஆண்டு விடுமுறையில் ஒரு நாவல் எழுத ஆரம்பித்து ஒரு மாதத்தில் அதனை எழுதி முடித்து அது புத்தகமாகவும் வந்துவிட்டிருந்தது. திருவண்ணா மலையில் “தீபஜோதி” என்று ஒரு பதிப்பகம் இருந்தது. கால் சட்டை போட்டிருந்த அந்த வயதில் நானே அவர்களைத் தேடிச்சென்று எனது புத்தகம் பற்றிச் சொல்லி அதனைப் பிரசுரிக்க வேண்டும் எனக் கேட்டேன். அவர் சிரித்தார். சின்ன பையன் என்ன எழுதியிருப்பான் என்பதாக இருந்தது அந்தச் சிரிப்பு. அதன் பிறகு தினமும் பள்ளி முடிந்தவுடன் தொடர்ந்து அந்தப் பதிப்பகத்திற்குச் செல்ல ஆரம்பித்தேன். அடுத்த ஒரு மாதத்தில் எனது முதல் நாவல் புத்தகமாக “தீபஜோதி” பதிப்பகத்தின் மூலமாக வெளிவந்தது. எல்லாச் செலவுகளையும் ஏற்று எனது நாவலை வெளியிட்டதோடு குமுதம், கல்கி, ஆனந்த விகடன் போன்ற பத்திரிக்கைகளில் விளம்பரமும் செய்தார்.

**அந்த முதல் கதை, அதன் மூலம் கிடைத்த அனுபவங்கள் பற்றிச் சொல்லுங்கள்...**

“உறவுகள் பேசுகின்றன” என்பதே அந்த முதல் கதை. குடும்பங்களுக்குள் ஏற்படக்கூடிய சிக்கல்களைப் பற்றிப் பேசக்கூடியதாக அந்தக் கதை எழுதப்பட்டிருந்தாலும் அதை ஒரு நாவல் என எனது சுயவிவரத்தில் (Profile) சேர்த்துக் கொள்ள மாட்டேன். ஆனால் அது ஒரு முக்கியமான துவக்கம். ஏனெனில் பத்தாவதே படிக்கும் ஒரு சிறிய பையன் நாவல் எழுதுகிறான் என்பது திருவண்ணாமலை போன்ற கிராமமும் அல்லாத நகரமும் அல்லாத ஊரில் மிகுந்த கவனம் பெறக்கூடிய ஒன்றாக இருந்தது. ஏறக்குறைய திருவண்ணாமலையின் எல்லாச் சுவர்களிலும் என் பெயர் எழுதப்பட்டிருந்தது. எனது பள்ளியில் நான் ஒரு கதாநாயகனாகவே பார்க்கப்பட்டேன். அந்தக் காலகட்டத்தில் இது ஒரு மிகப்பெரிய விசயம்தான். ஆனால் தொடர்ந்து வாசிக்க வாசிக்க நான் எழுதுவது எழுத்தில்லை என்ற முடிவுக்கு வந்தேன். அதன் பிறகே நான் இன்னும் ஆழ்ந்து வாசிக்க

ஆரம்பித்தேன். அதன் பின்பே எனது எழுத்துக்கள் ஒரு பண்பட்ட நிலைக்கு நகர்வதாக உணர ஆரம்பித்தேன்.

**உங்களின் கதை சொல்லல் அனுபவத்தில் உங்களைச் சொல்லவிடாமல் தடுத்த கதை ஏதேனும் இருக்கிறதா?**

இருக்கிறது. போகன் சங்கருடைய "மித்" என்கிற நாவல். இதை நான் சொல்ல ஆரம்பித்தவுடனேயே எனது மனைவி எழுந்து வெளியே சென்றுவிட்டார்கள். நான் சொல்லி விடுவேன் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் என்னாலும் சொல்ல முடியவில்லை. அதனால் நான் அன்று அந்தக் கதையை வாசித்தேன். பள்ளிக்குச் சென்று வீடு திரும்பும் இரண்டு சிறுவர்கள் சந்திக்கும் விபத்தைப் பற்றியது அந்தக் கதை. எங்களது சொந்த வாழ்வில் நானும் ஷைலஜாவும் அப்படியான ஒரு அனுபவத்தைத் தாண்டியிருந் தோம். அதனால் அன்று உணர்வுரீதியாகச் சொல்லவியலாத ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. ஆனால் அதைப் பெரிய தோல்வியாகக் கருதவில்லை.

அதே போன்று லா.ச.ரா. அவர்களின் கதைகளையும் என்னால் சொல்ல முடியாது. அவரின் கதைகளை யாராலும் சொல்ல முடியாது. ஏனெனில் அவரின் இரு வார்த்தை களுக்கு நடுவில் சின்னதாக ஒரு இசை வரும். அந்த வார்த்தைகளின் யுத்தத்தைக் கதையாகச் சொல்ல முடியாது. இப்படி சில காரணங்களால் ஒரு கதையைச் சொல்ல முடியாமலும் போவதுண்டு. எல்லாம் தாண்டியும் ஒரு மனிதனுக்குள் வெற்றி, தோல்வி, சொல்ல முடிந்தது, சொல்ல முடியாதது இப்படி எல்லாம் கலந்துதானே இருக்க முடியும்?

**ஏதாவது ஒரு குறிப்பிட்ட கதையைச் சொல்லும்போது ரொம்ப உணர்ச்சிவசப் பட்டிருக்கிறீர்களா?**

*(சிரிக்கிறார்...)* நான் எல்லாக் கதைகளையும் அப்படித்தான் சொல்கிறேன். உணர்ச்சி வசப்படாமல் என்னால் ஒரு கதையைக்கூடச் சொல்ல முடியாது. அது ஏனென்றால் ஏதோ ஒருவகையில் என் இரத்தத்திற்குள் ஊடுருவும் கதைகளை மட்டுமே சொல்லுவதற்குத் தேர்வு செய்கிறேன். நீங்கள் நம்பமாட்டீர்கள். இப்போதைக்கு என்னிடம் எனது கதையைச் சொல்லுங்கள் எனக் கேட்டு அனுப்பப்பட்டவை குறைந்தது ஒரு நூறு கதைகளாவது இருக்கும். அவைகளில் பெரும்பாலானவற்றை நான் இதுவரை பிரித்தே பார்க்கவில்லை. எனக்காகத் தோன்ற வேண்டும், ஒரு உந்துதல் ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட கதைகளை மட்டுமே நான் சொல்வதற்குத் தேர்வு செய்கிறேன். தட்டையாக ஒரு கதையை நான் சொன்னதே இல்லை. அப்படி சொல்லியிருப்பதாகத் தோன்றிய கதைகளை யூட்யூப் ல் போட வேண்டாம் என்று சொல்லிவிடுவேன். எப்போதும் ஒரு நல்ல மனநிலையில் இருந்தால் மட்டுமே கதைகள் சொல்லுவேன்.

**நீங்கள் கதை சொல்லிக்கொண்டிருக்கும் போது பார்வையாளர்களுக்கு, ரசிகர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட நெகிழ்வான நிகழ்வு பற்றி ஏதேனும் சொல்ல முடியுமா?**

அது ஆயிரக்கணக்கில் இருக்கிறது. அதற்கு முன் கதை கேட்க வருபவர்கள் பார்வையாளர்களோ, ரசிகர்களோ அல்ல. அவர்கள் எனது வாசகர்கள். தீவிர வாசகர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏராளமான அனுபவங்கள் இருக்கு. நீங்க யூட்யூப் ல பார்த்தீங்கன்னாத் தெரியும். ஒவ்வொரு நிகழ்ச்சிக்குப் பின்னும் ஏராளமான அலைபேசி அழைப்புகளும், மின்னஞ்சல் மற்றும் முகநூல் உள்பெட்டியில் குறைந்தபட்சம் ஒரு ஐந்நூறு கடிதங்களும் வரும். எனது வாழ்க்கையே உங்களால்தான் மாறியிருக்கிறதென்றும் நான் சொல்லியிருக்கும் ஒரு கதை தன்னை மன அழுத்தத்திலிருந்து வெளியேற்றியிருப்பதாகவும், தனிமையின் வெறுமையினைக் கடக்க முடிந்திருக்கிறது எனவும் தங்களைப் பகிர்ந்திருப்பார்கள். மேலும் வளைகுடா நாடுகளிலிருந்து நடு இரவுகளில் வரும் அழைப்புகள்.. ஒரு கதையைக் கேட்டுவிட்டு உடனே தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதான ஆவலில் நேரம் மறந்து அழைப்பவர்கள்.. இப்படி ஏராளமான அனுபவங்கள்... சார் நீங்களும் இளையராஜாவும் இல்லாமலிருந்திருந்தால் நான் செத்திருப்பேன் சார் என ஒருமுறை தற்கொலை மனநிலையில் இருந்து மாறிய ஒரு வாசகர் பேசியதைக் கேட்டபொழுது நான் உண்மையிலேயே நெகிழ்ந்தேன்.

எனது வாசகர்களுக்கும் எனக்குமிடையில் மிக மிக அடர்த்தியான மற்றும் ஆழமான நேசம் இருக்கிறது.

**ஒரு கதை சொல்லலில் ஏற்படக்கூடிய பரிமாணம் ஒன்றா அல்லது பல்வேறுபட்டதா?**

முதலில் எந்தக் கதையையும் நான் சொல்வதற்காகப் படிப்பதில்லை. தொடர்ந்து படித்துக்கொண்டிருப்பேன். அப்படிப் படிக்கும் போது எனக்குப் பிடித்த சில எழுத்தாளர்களின் கதையைச் சொல்ல வேண்டும் எனத் தோன்றும். அப்படிச் சொல்வதாக முடிவு செய்த கதையை மீண்டும் ஒருமுறை வாசிப்பேன். சமீபத்தில் ஒரு கதை சொன்னேன். தி.ஜா.ரா. அவர்களின் "காண்டாமணி'' என்னும் கதை. "ஒரு சமையல்காரர் சமைத்த உணவில் பாம்பு விழுந்துவிடும். அது தெரியாமல் பரிமாறி அதைச் சாப்பிட்ட ஒருவர் இறந்துவிடுவார். அதனால் ஏற்படும் குற்ற உணர்வு"தான் அந்தக் கதை. அது எனக்கு மிகவும் பிடித்த கதை. அது ஒரு இருபது ஆண்டுகளாக என் மனதில் இருக்கிறது. அதைச் சொல்லும் தருணத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தேன். அன்று அந்தக் கதையைச் சொல்லி முடித்ததும் அப்படி ஒரு ஆசுவாசம்.



இன்னொன்று வாசிப்பதற்கும் கதை சொல்வதற்கும் இடையில் உண்மையில் ஒரு பெரிய ரசாயன மாற்றம் எல்லாம் ஏற்பட்டு விடுவதில்லை. அது ஒரு செயல்முறை (Process) இது ஒரு செயல்முறை. ஒரு கதையை வாசிக்கும்போது ஒரு வாசகனாகத்தான் கதைகளை வாசிக்கிறேன். ஆனால் அதைச் சொல்லும்போது எங்கிருந்து சொல்வது என்பதை மனது தீர்மானிக்கிறது. உதாரணமாக, காண்டாமணி கதையில் மெஸ் நடத்துபவர் பெயர் மார்க்கபந்து. அவர் சாதத்தைப் பரிமாறுவதற்கு வெண்கலத்தில் ஒரு முறம் வைத்திருப்பார். அந்த முறத்தில் கரண்டியால் டமால் டுமீல் எனச் சப்தம் வரும்படி தட்டிக்கொண்டே இருப்பார். அது பயங்கரமாக ஆர்ப்பாட்டம் பண்ணுவதாகத் தோன்றும். அந்த இடத்தில் ஜானகிராமன் எழுதியிருப்பார், "எத்தனை ஆர்ப்பாட்டம் செய்தாலும் அந்த இடத்தில் அந்த முறமோ, கரண்டியோ அல்லது மார்க்கபந்துவின் கைகளோ எஜமானன் இல்லை. அங்கே உண்மையான எஜமானன் மார்க்கபந்துவின் மனசுதான். அங்கே அவர் மனது இன்னும் ஒரு கவளம் சோறு போடு என்று சொன்னால்தான் கரண்டியில் இருந்து சாதம் இறங்கும்" என்று. இது ஒரு ஆழ்ந்த literaryயான இடம். அதேதான் எனக்கும்.

ஒரு கதை சொல்வதன் மூலம் அடையக்கூடிய பரிணாமம் என்பதாகப் பார்த்தால் அதனை மூன்று படிநிலைகளாக எடுத்துக்கொள்ளலாம். கதையை எழுதியவர், அதனைச் சொல்லுபவர் மற்றும் கேட்கும் வாசகர். எழுத்தாளர் ஒரு பார்வையில் அந்தக் கதையை எழுதியிருப்பார். முற்றிலும் அதே பார்வையில் அந்தக் கதையை நான் சொல்ல வாய்த்தால் அது பெரிய அதிசயம். அது உண்மையில் அந்த எழுத்தாளருக்கு நான் செய்கின்ற மிகப்பெரிய நியாயம் அல்லது நற்செயல், எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். சில நேரங்களில் அந்த எழுத்தாளர் சொல்வதற்கு மாறாக நான் வேறொரு புரிதலோடும் சொல்ல நேரிடலாம். ஆனால் வாசகனை இந்த இரண்டு பேரையும் விட மிக முக்கியமானவனாகவும் மிகுந்த நுட்பமுடையவனாகவும் நான் கருதுகிறேன். வாசகன் ஒரு கதையை வாசிக்கும்போது எழுத்தாளர் எழுதியிருப்பதைத்தான் நான் சொல்லியிருக்கிறேனா எனக் கவனிக்க வேண்டும்.

கதை சொல்லும்போது நிறைய சின்னச்சின்ன

தப்புகள், சில பெரிய தப்புகள் எல்லாம்கூட நான் செய்திருக்கிறேன். ஆனால் அவ்விதமான தவறுகளை ஒரு வாசகன் சுட்டிக்காட்டும்போது அதை முழுமனதோடு ஏற்றுக்கொள்கிறேன். அப்படித்தான் சொல்லுவேன் என்கிற பிடிவாத மெல்லாம் எப்போதும் என்னிடம் கிடையாது. ஒரு கதையைச் சொல்லும்போது அதன் கருத்துக்கள் மாறும்படியோ அல்லது அதன் ஆன்மாவைச் சிதைக்கும்படியோ சொன்னால் என்னோடு பயணம் செய்துகொண்டிருக்கும் வாசகர்கள் என்னைத் தட்டிக் கேட்கலாம், என்னைத் திருத்தலாம், என்னைச் சரிபடுத்தலாம் என்பதை இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

**அடிப்படையில் நீங்கள் ஒரு கம்யூனிஸ்ட். ஒரு கம்யூனிஸ்ட்டாக உங்களுடைய வாழ்க்கை எங்கே ஆரம்பித்தது? எப்படி பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது?**

கம்யூனிஸ்ட் என்கிற வார்த்தை ரொம்பப் பெரிய வார்த்தையா எனக்குத் தோணுது. திரு. ஜெயகாந்தன் ஒருமுறை திருவண்ணாமலையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது “I am not a card holder but a real communist, கட்சியில் கொடுக்கப்படுகின்ற அடையாள அட்டையை மட்டும் வாங்கி வைத்துக்கொள்கிற ஆள் கிடையாது நான். ஒரு கம்யூனிஸ்ட்டாக வாழ்வது எப்படி என்பதை நோக்கித் தினம்தினம் நகர்ந்துகொண்டிருக்கிற ஒரு மானுடன் நான்” என்றார். உண்மையில் நானும் அதுதான். எனக்கு என் குறித்த சுய பெருமிதங்கள் இருக்கிறதல்லவா, அதாவது இந்த உலகம் என்னை எப்படிப் பார்க்கிறது என்பதைக் குறித்த கவலை இல்லை. அதையெல்லாம் தாண்டி ஒவ்வொரு மனிதனுக்கும் தெரியும் தான் என்னவாக இருக்கிறோம் என்று. அந்த வகையில் ஒருநாளும் மன அளவில் ஜாதியாகவோ, மதமாகவோ என்னை நான் உணர்ந்ததில்லை. வெளியே வேறாகவும் உள்ளே வேறாகவும் இருக்கின்ற, இரண்டிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாது இருக்கின்ற லட்சக்கணக்கானவர் களைப் பார்த்திருக்கிறேன். நான் ஒருநாளும் அப்படி என்னை உணர்ந்ததே இல்லை. அதுதான் ஒரு கம்யூனிஸ்ட்டாக வாழ்வதற்கான நிலையை நோக்கி நகர்வதற்கான ஆயத்தம் என நினைக்கிறேன். அது என்னிடம் இருக்கிறது என நான் சொல்லிக்கொள்ள முடியும். கம்யூனிஸ்ட் என எடுத்துக்கொண்டால் எனக்கு சி.பி.எம். கட்சியை ரொம்பப் பிடிக்கும். அவர்களோடு இணைந்து பல வேலைகள் செய்திருக்கிறேன். அரசியல்ரீதியாக நிறைய அவர்களோடு இயங்கியிருக்கிறேன். ஆனால் நான் படித்து, பார்த்து வளர்ந்த கம்யூனிஸ்ட் இயக்கங்களில் இருந்து எனது நேர் வாழ்க்கையில், சொந்த அனுபவத்தில், களப்பணியில் நான் பார்த்தது முற்றிலும் வேறாக இருந்தது. ரொம்பக் குறையாகவெல்லாம் சொல்லவில்லை. நான் இன்னைக்கும் சி.பி.எம். ல்தான் இருக்கிறேன், இப்போதும் சி.பி.எம். ஐ நேசிக்கிறேன். ஒரு வேளை புத்தகங்களில், காவியங்களில், காப்பியங்களில் படிப்பதெல்லாம் நிதர்சனமாக வரும்போது இவ்வளவு குறைகளோடுதான் வருமோ எனத் தோன்றுகிறது. அப்படித்தான் இதை எடுத்துக்கொள்கிறேன். அந்த அனுபவங்கள் சந்தோசமானதாக இல்லை.

நானெல்லாம் சி.பி.எம். ல் கட்சிக்காக ரொம்பவும் கீழே இறங்கி வேலை பார்த்தவன். எல்லா வேலைகளையும் பார்த்திருக்கிறேன். ரொம்பவும் மேல் என்பதான வேலைகளையும் செய்திருக்கிறேன். இரண்டும் சேர்ந்த கலவைதான் என்னோட மொத்த இந்த முப்பது வருடங் களுக்கான சாரம்னு சொல்லலாம். இப்பவும் தொடர்ந்து சி.பி.எம். உடனும், கம்யூனிச சித்தாந்தத்துடனும் தொடர்ந்து பயணித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அதில் எந்த மாற்றமும் இல்லை. இந்த ஆண்டு என்ன ஆனது என்றால் என்னுடைய கட்சி உறுப்பினர் பதிவு விடுபட்டுவிட்டது. விடுபட்டுவிட்டது என்றால் technical errorனு சொல்லுவோமே அதைப் போன்று. அப்படியான ஒரு technical error ல் ஒரு உறுப்பினரின் பதிவு விடுபட்டுப் போகும்போது ஒரு கட்சி பதற வேண்டும். உதாரணமாக என்னை இங்கிருந்து இன்னொரு ஊருக்குப் பணி மாற்றம் செய்கிறீர்கள் என வைத்துக்கொள்ளலாம். அப்படிப் பணிமாற்றம் செய்யப்பட்ட கிளையில் போய் நான் என்னைப் பதிப்பித்துக்கொள்ள வேண்டும். ஆனால் என்னால் அந்தக் கிளைக்கே போக முடியவில்லை, எனக்கு ஏராளமான மன உளைச்சல், பணிச்சுமைகள் காரணமாக நான் சரியான நேரத்துக்குப் போகலை எனில் அது ஒரு சின்ன error தான். அப்போ நான் மனரீதியா என்னவாக இருக்கிறேன் நான் என்னவாக இருக்க வேண்டும் என்று ஒரு கட்சி கவனிக்க வேண்டும். அப்படி

என்னைக் கட்சி கவனிக்கத் தவறிவிட்டது என நான் நினைக்கிறேன். இன்னும் பல பேர் எனக்கு அப்படி ஒரு technical error வந்ததற்காகச் சந்தோசப்பட்டனர். அட இதுக்காகவாய்யா சந்தோசப்படுறீங்க... ரைட்... நான் உறுப்பினர் பதிவு பண்றதையே விட்டுவிடுகிறேன் என்று பதிவு பண்ணாமலேயே விட்டுவிட்டேன். முப்பது வருடமாகக் கட்சியில் எனக்கு உறுப்பினர் பதிவு இருந்தது. இந்த ஆண்டு இல்லை. யாரும் அதற்காக வருத்தப்படவும் இல்லை. பரவாயில்லை. அப்படி வருத்தப்படாத கட்சியில் போய் நாம் எதற்கு இருக்க வேண்டும் என்று விட்டுட்டேன். ஆனால் இன்றைக்கும் நான் சி.பி.எம். கட்சியை ஆதரிப்பவன்தான்.

### எல்லா நாளும் கார்த்திகை மனிதர்கள் குறித்து?

ஒரு பத்திரிக்கையில் இருந்து என்னிடம் உங்கள் நண்பர்கள், உங்கள் வீட்டிற்கு வருகின்ற தோழர்கள் பற்றி ஒரு தொடர் எழுதித்தரக் கேட்டார்கள். அப்பொழுதுதான் யோசித்துப் பார்த்தேன்.. நம் வீட்டிற்கு யாரெல்லாம் வந்திருக்கிறார்களென்று. பயங்கரமா இருந்துச்சு. இலக்கியத்தில், சினிமாவில், அரசியலில், மிகப்பெரிய உயரத்திலிருப்பவர்களில் இருந்து மிகச்சாதாரணமாக அடுத்த வேளை சாப்பாட்டிற்காக, ஒரு சின்ன இடம் கிடைக்குமா என்பது வரையான நண்பர்கள் எல்லாம் வீட்டிற்கு வந்துகொண்டே இருந்திருக்கிறார்கள். இப்படி எல்லோரும் வந்து போகும் இடமாக எங்கள் வீடு இருக்கிறது என்பதே எனக்கு சந்தோசமாக இருந்தது. சரி அவர்களைப் பற்றி ஒரு தொடர் எழுதலாமே என்றுதான் அந்தத் தொடரை எழுத ஆரம்பித்தேன். அது ஒரு மகா வெற்றிகரமான தொடராக வந்தது. அந்தப் புத்தகமே இதுவரை ஐந்து பதிப்புகள் வந்துவிட்டது. அந்தத் தொடர் பத்திரிக்கையில் வந்துகொண்டிருக்கும்போதெல்லாம் தினமும் எங்களுக்குப் பத்துப் பதினைந்து அலைபேசி அழைப்புகள் வரும். பயங்கர சந்தோசமாக நான் எழுதினேன். அதை எழுதி முடித்துப் புத்தகமாக வந்தபோது எல்லோரும் என்னிடம் சொன்ன ஒரு விசயம் "நீ மனிதர்களிடம் இருக்கும் நல்ல பக்கங்களையே எப்போதும் பார்க்கிறாய், தவறுகளைப் பார்ப்பதே இல்லை" என்று. சந்தோசம். எதற்காகத் தவறுகளைப் பார்க்க வேண்டும்?

ஜி.நாகராஜனைப் பற்றி எழுத்தாளர் சுந்தர ராமசாமி சொல்வார், ஜி. நாகராஜன் புழக்கடையில் போய் உட்கார்ந்து வீட்டிலிருந்து எவ்வளவு கழிவு வருகிறது, எவ்வளவு அழுக்கு வருகிறது, எவ்வளவு குப்பை வருகிறதுன்னு பார்ப்பார் என்று. ஆனால் எனக்கு வாசலில் உட்காரத்தான் பிடிக்கும். மனிதர்களின் இருட்டான பக்கங்கள் எனக்குத் தேவை யில்லாதது. வேறு யாராவது அதைச் செய்யட்டும். நான் அவர்களின் நல்ல பக்கங்களை மட்டுமே பார்க்க, பேச விரும்புகிறேன். மனிதர்களின் நல்ல பக்கங்களின் அம்சங்கள் பொருந்தியதே நான்.

### உங்களுடைய நட்பு வட்டம் மற்றும் நண்பர்கள் பற்றி?

குறைந்தது ஆயிரம் நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் மிக நெருக்கமாக எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளக்கூடிய நண்பர்கள் என்றால் யாருமில்லை என்றுதான் சொல்ல முடியும். ஒரு இடைவெளிக்கு இடம்பெயர்ந்த நண்பர்கள்தான் அநேகமாக அத்தனைப் பேரும். அரை அங்குல இடை வெளியில் இருப்பவர்கள் மிகவும் குறைவு. நான் பெரும்பாலும் தனிமையில்தான் இருக்கிறேன். எழுத்தாளன் எப்போதும் தனிமையைத் தேடுபவன்தான். ஆயிரக்கணக்கான நண்பர்களை உடையவன் என்னும் பேறு பெற்றவன் என்பதால் நீங்கள் நம்புவதற்கு ஆச்சர்யமான ஒன்றைச் சொல்கிறேன். எனக்கு உடைகள், காலணிகள், ஷைலஜாவிற்குப் புடவைகள், அவருக்கு மிகவும் விருப்பமான வளையல்கள் என்று இரண்டு அலமாரிகள் நிறையுமளவிற்கு நண்பர்கள் அன்பின் நிமித்தம் பகிர்ந்துகொள்கிறார்கள். எதிர்பார்ப்பற்றுப் பழகும் இவ்வளவு மனிதர் களைச் சம்பாதித்ததுதான் என் வாழ்வின் மிகப்பெரிய மகிழ்ச்சியாகக் கருதுகிறேன்.

### நண்பர்களிடமிருந்து எதைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள்? எதை அவர்களுக்குத் தர விரும்புகிறீர்கள்?

ஒன்றைத்தான். அது அன்பு மட்டுமே.

### தமிழ் மொழிபெயர்ப்புச் சூழல் பற்றித் தங்களது கருத்து?

இந்தக் கேள்விக்கான பதிலைச் சில சொற்களில் அடக்கிவிட முடியாது. தமிழ் மொழிபெயர்ப்பு பற்றிப் பேசுவது என்பதே

ஆயிரம் பக்கங்களுக்கு மேல் எழுதுவதைப்போல் சற்று கடினமான காரியம். எனக்கு நெருக்கமான மொழிபெயர்ப்பு என்று நீங்கள் கேட்பதாக இருந்தால், மலையாள மொழிபெயர்ப்பை முன்வைப்பேன். என் வீட்டிலே நான்கைந்து மொழிபெயர்ப்பாளர்கள் இருக்கின்றார்கள். நான் இரு மொழி இலக்கியச் சூழலை நெருங்கிக் கவனிப்பதால் சொல்கிறேன். பொதுப்புத்தியில் மலையாளக் கதைகள் தமிழைவிட உயர்வான இடத்தில் இருப்பதாகச் சொல்லிக்கொள்வார்கள். ஆனால் உண்மையில் அப்படியில்லை. ஏனென்றால் தமிழில்தான் நிறைய புதிய முயற்சிகள், மொழியைக் கையாளும் திறன், மேலும் நுட்பமான கதை சொல்லுதல் என்று மெச்சத்தகுந்த இடத்தில் உள்ளது. மலையாளத்தில் இருந்து நிறையவே கதைகள் தமிழுக்கு மொழிபெயர்ப்பாகி வந்திருக்கின்றன. ஆனால் தமிழில் இருந்து மலையாளத்திற்கு மொழிபெயர்ப்பானது தற்காலிகச் சூழலில் எதுவுமில்லை. எஸ்.ரா. அவர்களின் கதைகளும் கூட இல்லை என்பது வருத்தமே. நான் தொடர்ந்து மலையாள இலக்கிய வட்டத்தில் பேசுகையில் எல்லாம் தவறாமல் தமிழ் மொழிபெயர்ப்பு குறித்துப் பேசிவருகிறேன்.

**தமிழ்ப் புத்தகங்கள் மலையாளத்தில் மொழிபெயர்ப்பு ஆகாததற்குக் காரணம் ஏதேனும் உண்டா?**

காரணம் என்றால், அவர்களிடம் சரியான அமைப்புகள் இல்லை எனலாம். அல்லது இத்தகைய செயல்முறைகளை முன்னெடுத்துச் செய்வதற்கு யாரும் முன்வரவில்லை என்றும் சொல்லலாம். அதையெல்லாம் தாண்டி மலையாள உலகம் தமிழ்ச் சூழலை மெத்தனமாக நினைக்கின்றார்களோ என்றும் எனக்குத் தோன்றும்.

**உங்களது நடிப்பைப் பற்றிச் சொல்லுங்கள்?**

இயக்குநர் ராஜூமுருகன்தான் முதன்முதலில் நடிக்க அழைத்தவர். முதலில் மறுத்தாலும் பிறகு அந்தக் கதாபாத்திரத்தை நான் ஏற்று நடிக்க வேண்டியதானது. காரணம் நண்பர்களிடம் நான் பெரும்பாலும் மறுப்பு தெரிவிப்பதில்லை. எனது நண்பர்களுக்கு ஒருபோதும் என்னால் மறுப்பு சொல்ல முடியாது. பிறகு மிஷ்கின் மற்றும் ராம் அவர்களின் திரைப்படங்களிலும் தொடர்ந்து நடிக்க வாய்ப்புகள் வந்தன. அடிப்படையில் நான் நடிக்கப் பிரியப்படுபவன் இல்லை. நடிப்பின் மீது பெரிய ஆர்வம் ஒன்றும் இல்லை. பள்ளி நாட்களில் நான் இருபது பேர் கொண்ட மேடை நாடகங்களில் இறுதியில் நிற்கும் இருபதாவது ஆளாகவே எப்போதும் இருந்திருக்கிறேன். என்ன செய்ய.. படங்களில் நடிக்க வந்துவிட்டேன். நான் நடித்த படங்களுக்குப் பின்னால் ஏன் நடித்தேன் என்பதற்கான கதைகள் இருக்கிறது. நண்பர்களுடன் பணி செய்வதால் புளங்காகிதம் அடைகிறேன். நுட்பமான விமர்சகர்கள் பவா நடிக்கத்தெரியாதவர்தான் ஆனாலும் அவரது வருகை கதாபாத்திரத்தில் ஒரு நிறைவைத் தருகிறது என்ற விமர்சனங்களை முன் வைத்திருக்கிறார்கள்.

**சமகால எழுத்தாளர்களைப் பற்றி உங்களது கருத்து?**

ஏற்கனவே சொன்னதைப் போலவே மலையாளச் சூழலைவிடவும் தமிழில் இளைய தலைமுறை எழுத்தாளர்கள் புதிய முயற்சிகளைச் செய்துவருகிறார்கள். நரன், லக்ஷ்மி சரவணகுமார், கே.என்.செந்தில், அகரமுதல்வன், திருச்செந்தாழை, ஜீவ கரிகாலன் என்று பட்டியலிடுமளவு நிறைய திறமையான எழுத்தாளர்கள் தமிழில் இருக்கின்றார்கள்.

**இன்றைய எழுத்தாளர்கள் மொழியை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திக்கொண்டு செல்கிறார்களா?**

நிச்சயமாக. ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழ்ச்சமூக எழுத்தாளர்கள் தமிழ் மொழியையும் நுட்பத்தையும், வளத்தையும் அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஒருமுறை ஜெயகாந்தன் அவர்கள் சொன்னது நியாபகம் வருகிறது, “நானெல்லாம் எழுதியும் தமிழ்மொழி சாகாமல்தான் இருக்கிறது” என்று. ஆக தமிழ் மொழியைச் சாகடிக்க முடியாது. அதன் வளர்ச்சி நடந்தே தீரும். மொழியை வளர்க்கிறேன் என்று சொல்பவர்கள் அல்ல எழுத்தாளர்கள். அவர்கள் அதையே ஒரு கதையாக்கி மொழியின் நுட்பத்தை எழுதிக் காண்பிப்பவர்கள். நானும் அந்த பணியைச் செய்யவே விரும்புகிறேன்.

**சமகாலத்தில் எளிமையாக எழுதுவதாகச் சொல்லி மொழியைச் சிதைக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு வைக்கப்படுவதைப் பற்றி?**

எல்லாக் காலக்கட்டத்திலும் இப்படியான ஒரு கேள்வியைச் சமூகம் நம்முன் வைத்துக் கொண்டுதான் இருக்கிறது. தமிழ்ச்சமூகம் தோன்றி, கலை இலக்கியம் தோன்றிய எல்லாக் காலங்களிலும் இப்படிப்பட்ட போலியான ஆட்கள் இருந்துகொண்டே இருப்பார்கள். எளிமையாக எழுதுவதாகச் சொல்லி மொழியைச் சிதைத்திருக்கிறார்கள். ஆனால் உண்மையான கலைஞன் மட்டுமே காலம் தாண்டியும் நிற்பான். காலம் சல்லடை போட்டு அவனை இவ்வுலகிற்கு எடுத்துக் காண்பிக்கும்.

**இப்போது பேசப்படுகிற பின்நவீனத்துவம் என்பது பண்பாட்டையும் கலையையும் சிதைப்பதாகச் சொல்கிறார்களே?**

பின்நவீனத்துவம் என்பது ஒரு வடிவம்தான். தமிழ்ச் சூழலுக்குத் தேவையா என்பது எனக்குத் தெரியவில்லை. உதாரணத்திற்கு ஈழ நிலத்தில் போர் நடந்தேறிய நிகழ்வைக் கவிதையாகவோ, கதையாகவோ சொல்வதற்காக மாய எதார்த்தத்தையும், பின் நவீனத்துவத்தையும் கையாண்டார்கள். அந்த நிலம் அதை நிர்பந்தித்தது. தமிழ்மண்ணில் இத்தகைய சூழல் இல்லாததால் எதார்த்தவாதம்தான் சரியாகப் பொருந்துகிறது. எந்த இசங்கள் இங்கே பயணித்தாலும் கடைசியாக எதார்த்தவாதமே நிற்கும்.



**திருவண்ணாமலை?**

தண்ணீரை விட்டுத் தரைக்கு வந்த மீனால் வாழ முடியாது. ஒரு மீனுக்குத் தண்ணீர் எப்படியோ அப்படி எனக்குத் திருவண்ணாமலை. திருவண்ணாமலையே எனக்குத் தண்ணீர், எனக்கு சுவாசம். இந்த மண் என் இரத்தத்தில் கலந்திருக்கிற ஒன்று. இங்கு இருக்கும் என் மக்களைப் பற்றி நிறைய கதைகளை எழுதவேண்டும்.

**இயக்கங்களுடன் இருக்கும் தொடர்பு?**

தமிழ்நாடு முற்போக்குச் சங்கம் மட்டுமே என் தொடர்பில் இருந்த ஒன்று. சங்கம் விட்டு வெளியேறிப் பத்துவருடங்கள் ஆகிறது. முக்கியக் காரணம் எழுதுவதற்கான சூழல் இல்லை. சங்கத்தால் மனக்கசப்புகள் அதிகம். சிலவற்றை யோசிக்கையில் அங்கேயே இருந்திருக்கலாம் என்றும் தோன்றும். சில அவச்சொற்களைத் தவிர்க்கும் பொருட்டு விலகியிருக்க வேண்டியதாகிவிட்டது.

**புனைவு.. உங்கள் பார்வை?**

புனைவு இல்லாமல் என்னால் ஒரு வரியைக்கூட எழுத முடியாது. புனைவுதான் உணர்வைத் தருகிறது. புனைவுதான் மனவெழுச்சியைத் தருகிறது. புனைவுதான் உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்கிறது. எனக்குப் புனைவு மிகவும் பிடித்த ஒன்று.

**படைப்புலகம் சார்ந்த உங்களது கனவு?**

ஒரு நாவல் எழுதும் திட்டம் இருக்கிறது. அதற்கான வேலைகள் துவங்கி ஆயிற்று. என் மண் சார்ந்த இந்த நாவலைப் பத்து பாகங்களாகக் கொண்டுவரத் திட்டம்.

**பவா யார் என்றால்?**

நான் அடிப்படையில் விவசாயி. ஒரு நாளின் முழுமையிலும் வயல்களில் இருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். மண் பற்றியும், மக்களைப் பற்றியும் புதிதுபுதிதாக எழுத வேண்டும். இயற்கையுடன் வாழ்ந்து எழுத்துக்களுடன் பயணிக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

**உங்களை நேசிப்பவர்களுக்கு, உங்கள் வாசகர்களுக்கு, உங்களை ரசிப்பவர்களுக்கு ஒற்றை வரியில் ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால்?**

(புன்னகையோடே சொல்கிறார்...)

நிறைய வாசியுங்கள்.

• கவி : யுகபாரதி
சித்திரம் : அழ.ரஜினிகாந்தன்

# கனவுகளின் ஈமக்கிரியை

அம்மாவின் கனவை மகளும்
மகளின் கனவைப் பேத்தியும்
காணக்கூடிய சமூகத்தில்
எப்படிச் சொல்ல முடியும்
பழசானவை கனவுகளென்று
கால இளவரசி திரும்பத்திரும்ப
பூசணிப் பூக்களை நட விரும்புகிறாள்
புழக்கடைக் கோலங்களில். ■



சிறுகதை

வரலாற்றுப் புனைவு



# எண்வழிச் சாலை


• அண்டனூர் சுரா

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்


கிடங்கிலிருக்கும் தானிய இருப்பைக் கூட்டி அள்ளினால் பதக்குத் தேறாது. ஒரு வார காலம் கொண்டாடு, கொண்டாடெனக் கொண்டாடித் தீர்த்த மன்னரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கொடுக்க, வழங்க, அள்ளி இறைத்ததில் கஜானா சுத்தம்! படுசுத்தம்!

கஜானாவை மீண்டும் நிரப்ப வேண்டிய பொறுப்பு சமஸ்தானத்தின் திவான் டி.ஆர். பார்த்தசாரதி அய்யங்கார் தலையில் வந்து விழுந்திருந்தது. திவான், மார்பின் குறுக்கே ஓடிக்கிடந்த பூணூலை விரல்களால் நீவி விட்டுக்கொண்டு, குடுமியை அள்ளி முடிந்து கொண்டு கஜானா குறித்தும் அதை எப்படி நிரப்பலாமென்றும் சிந்திக்கலானார். ஒன்றைக் குறித்துப் பலவாறு பலகோணத்தில் சிந்திப்பது அவருக்குப் பிடித்தமான ஒன்றுதான். சிந்தித்தலும் சிந்தித்தல் நிமித்தமுமே அவரது தொழில், பணி எல்லாம். மன்னர் பிறந்தநாள் கொண்டாட்டம் முடிந்து, உல்லாசப் பயணமாகக் குளிர்தேசம் சென்றிருக்கிறார். அவர் தேசம் திரும்புவதற்குள் கஜானாவை நிரப்பியாக வேண்டுமென்கிற அவசரக்கதியில் அவர் நின்றுகொண்டிருந்தார்.

மன்னரின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு யாரையும், எங்கேயும், எப்பொழுதும் சந்தித்துவிட முடியும் என்கிற அதிகாரக்குவிவு அவரிட மிருந்தது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மதராஸ் வைஸ்ராயையோ, மைசூர் மகாராஜாவையோ மரியாதை நிமித்தமாகச் சந்தித்துக் கடன் கோரலாம் என நினைத்தார். ஆனால், இதற்கு முன்பு அவர்களிடம் வாங்கிய கடன், வாங்கிய கடனுக்கு வட்டிக்கட்டாத சுமை.. யோசனையை மடை மாற்றின. வேறென்ன செய்யலாம்...? அப்படியாக யோசிக்கையில்தான் இருவழிப் பாதையை எட்டுவழிப் பாதையாக மாற்றலாம் என்கிற யோசனை மனதிற்குள் துளிர்த்தது.

'திருவிதாங்கூர் சமஸ்தான அரண்மனைக்கும் பத்பநாபர் கோவிலுக்கும் இடையிலான பாதையை அகலப்படுத்தி எண்வழிப் பாதையாக மாற்றப்படும்...' கருத்துருவை முன் வைத்ததும் கணநேரம் அவை சச்சரவால் அமிழ்ந்தது.

'இதற்கான தேவை என்ன வந்தது, அதுவும்

சுத்தம்! சுத்தம்!

மாமன்னர் மார்த்தாண்ட வர்மாவின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குப்பிறகு அரண்மனை வளாகம், மாமணி மண்டபம், கோட்டை, கொத்தளம், வாயில்கள்.. யாவும் கூட்டிப் பெருக்கி ஒரு தூசியோ துரும்போ அல்லாமல் துடைத்தெடுத்த சுத்தத்தில் இருந்தன. இதைவிடவும் படுசுத்தமாக இருந்தது சமஸ்தானத்தின் கஜானாதான்!



நான்கு வழிப் பாதையாகக் கூட இல்லாமல்...?' அனந்தராமன்தான் இதை முதலில் கேட்டார். மூத்த அமைச்சர் என்பதால் அல்ல. மக்கள் மீதிருந்த பிணைப்பால்! திவான் பாதையை அகலப் படுத்தும் கருதுகோளை முன்மொழிந்ததும் அனந்தராமனுக்கு மக்களின் பீழையுடன் சேர்ந்து வழியும் கண்ணீர் சுரந்த முகம் கண்முன் நிழலாடியது.

திவான், அதிகம் பேசுபவர் அல்ல. நான் முன்மொழிவதை வழிமொழிவது ஒன்றே உங்கள் வேலை எனச் சொல்வதைப்போல அவரது வீற்றிருத்தல் இருந்தது. அவரது கேள்விக்குத் திவான்தான் பதில் சொல்லவில்லையே தவிர அவருக்குப் பதிலாக மற்ற அமைச்சர்கள் அவரது குரலில் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

'பயணத்தை இலகுவாக்க...'

'யாருடைய பயணத்தை?'

'மன்னரின் பயணத்தை...'

எளிதில் அவிழ்க்க முடிந்த கேள்விக்கு மன்னர் என்கிற பதத்தை இலகுவாகப் பயன்படுத்தி விடுபவர் திவான். மன்னர், விதி இவ்விரு சொற்களும் அவரைச் சதுரப் பிரச்சனையிலிருந்தும் பல நேரம் விடுவித்திருக்கின்றன. திவானின் பதிலில் மன்னர் என்கிற பதம் சேர்ந்ததும் அனந்தராமன் பக்கமாக நின்றிருந்த ஓரிருவர் திவான் பக்கமாகச் சாய்ந்ததைப் பலரும் கண்டு சிரித்தார்கள். சற்று முன் கேள்விகளாகத் திறந்திருந்த பலரின் வாய் அவர்களையும் அறியாமல் மூடிக்கொண்டது. மேல் உதட்டிற்குள் கீழ் உதடு பூட்டாக மாறியது.

அமைச்சு சொற்படி ஆட, அசைய வேண்டிய இந்தத் திருவிதாங்கூர் சமஸ்தானம் திவான் விரல்படி அசைவதைப் பார்க்கையில் அனந்தராமனுக்கு நாசியும் காதுகளும் ஒருசேர விடைத்தன.

'அத்தனை இலேசு காரியமா இது?'

'அபசமாகக் காரியமென்று சொல்லாதீர்கள். வேலையென்று சொல்லுங்கள்'

'சரி, இலேசான வேலையா இது...?'

'மன்னரின் உத்தரவை அமல்படுத்துவது ஒன்றே நம் வேலை'

'வேலை மட்டுமல்ல, கடமையும்கூட' திவானின் பதிலுக்கு ஒருவர் ஒத்தூதினார்.

'இதனால் மக்களின் கதி?'

'அதை மன்னர் பார்த்துக்கொள்வார்...'

நீளவேண்டிய விவாதம் மறுபடியும் தொண்டைக்குள் சுருண்டுப் படுத்துக்கொண்டது. மன்னர் சமஸ்தானத்தில் உலா வருகையில் மக்களின் பாடு கொண்டாடும்படியாக இருக்கிறது. வெளிதேசம் சென்றுவிட்டால் அதிரடியான வேலைகளும், காரியங்களும் நடந்தேறுகின்றன. இது நேற்று, இன்று தொட்டில்லை. காலம்காலமாக நடந்தேறிவரும் நிகழ்வு. மக்கள் குறித்த பிரச்சனையை இதயத்திலிருந்து எடுத்தாள வேண்டும். இதயம் எதையும் தெளிந்தெரிந்து பார்க்கும். ஆனால் திவான் மூளையிலிருந்து எடுத்திருந்தார்.

அனந்தராமன் மனதிற்குள் தற்போதிருக்கும் இருவழிப் பாதையையும், இருபுறமிருக்கும் கட்டிடங்களையும் வேளாண்மை நிலங்களையும் தராசு கொண்டு பார்த்தார். எத்தனை மாட மாளிகைகள், மணிவாய்ச்சுவர்கள். மரங்களென்ன, செடி, கொடிகளென்ன.. இத்தனையும் தவிடு பொடியாகப் போவதை நினைக்க நெஞ்சு கனகனத்தது.

'அதையும் மன்னர் பார்த்துக்கொள்வார்...'

'எதையும் மன்னர் பார்த்துக்கொள்வார்...?'

'இப்பொழுது மனதிற்குள் நினைத்தீரே, முகம் சுழித்தீரே, அதைத்தான் சொல்கிறேன்...' திவானின் பதில் வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருந்தது.

'எல்லாவற்றையும் மன்னரே பார்த்துக் கொள்வார் என்றால், இதற்கு ஏன் இந்தக் கூடுகை, அவை, ஆலோசனை எல்லாம்...?'

'முன் மொழிந்தேன், வழி மொழிய வேண்டாமா?'

'தூக்குக்கயிற்றுக்கு முத்தமிடச் சொல்கிறீர்கள்...'

அனந்தராமன் கேள்விக்குத் திவானால் ஒரு பதிலும் சொல்ல முடிந்திருக்கவில்லை. அமைதியே உருவென வீற்றிருந்தார். ஆனால் அவர் கொண்டிருந்த உறுதிப்பாட்டில் சற்றும் தளர்வு இருந்திருக்கவில்லை.

எப்படி இவரால் இப்படியான முடிவை எடுக்க முடிகிறது..? அவரது இதயமென்ன இரும்போ,..! அவர் மண்டையில் சுரக்கும் சுரப்பு ஏன் இதயத்தில் சுரக்கவில்லை....? பெரிய மூளைக்காரன்! சிறிய இதயக்காரன்!!. இமையைச் சுருட்டி உதட்டைச் சுழித்தார்.

'பத்மநாபர் கோவிலுக்கும் திருவிதாங்கூர் அரண்மனைக்கும் இடையிலான இருவழிப் பாதையை அகலப்படுத்தப் போகிறார்களாம்..' செய்தி காற்றில் வெடித்து அரளி விதையென மக்களின் காதுகளில் விழுந்தது.

கோவிலும், அரண்மனையும் என்னே அழகு! அக்கோவிலின் தேரடிப் பாதை எத்தனைப் பேரழகு! இரு தேர்கள் ஒருசேர வந்தால் சாலை மக்கள் நிறையால் அடைந்து நிற்கும். தேரும் தேர் சூழ் மக்களும் சாலையின் இரு மருங்கால் பேரழகு திளைக்கும். அழகு மாடங்கள், வணிக வளாகங்கள், சத்திர வாயில்கள்... யாவும் பார்க்கக் கண்கொள்ளாது. பேரழகை இடித்து அழகாக்குவதா? இடித்து அகலப்படுத்தினால் எப்படி இருக்கும், ஆம், கிழவிகள் உதட்டுச்சாயம் பூசியதைப் போலிருக்கும்! அவருக்குச் சிரிப்பு வந்தது. கூட கோபமும் வந்தது.

கடைகள் எத்தனை, குடியும், வாசலும், அரங்கும், கூடமும் எத்தனையெத்தனை. இவ்வளவையும் தூளாக்கி, கூழாக்கித் தரைமட்டமாக்குவதா? இதை மக்களால் ஏற்க முடியுமா? காதுகொண்டு கேட்கும் எனக்கே இப்படி! கண்கொண்டு பார்க்கும் அவர்களுக்கு...? உடை, ஆகார ஆதாரங்களை இழந்து நிற்பவர்களுக்கு...? வாழ்வாதாரத்தைத் தொலைத்து நிற்பவர்களுக்கு...? அனந்தராமன் யோசித்து யோசித்து அவரது மூளை வியர்த்தது.

திவான் எந்தவொரு விமரிசனத்தையும் உள்வாங்கிக்கொள்ளாதவராக அடுத்தக்கட்ட வேலையில் மும்முரமாக இறங்கினார். தண்டோராக்காரனை அழைத்துச் செய்தியை எட்டுத்திக்கும் அறிவிக்கச் சொன்னார்.

'இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் இராஜாதிராஜ இராஜ கம்பீர மாமன்னர் மார்த்தாண்ட வர்மாவின் உத்தரவின்படி, அரண்மனைக்கும் பத்பநாபர் கோவிலுக்கும் இடையிலான பாதையை அகலப்படுத்த இருபுறக் கடைகளும் இடிக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது..'

தண்டோராக்காரனின் அறிவிப்பு செவிடனின் காதினிலும் தீப்பழமென விழுந்தது. கோடை வெயில், அமில மழை, பிணங்கள் பிளக்கும் படியாகப் பொங்கும் பூகம்பம் இத்தனையும் ஒருசேர நிகழும் துக்கக்கனத்தை விடவும் அந்த ஒரு அறிவிப்பு துயரக்கனலாக இருந்தது. சொல் காதினில் விழுந்ததும் கனத்தால் இதயம் வரைக்குமாக அமிழ்ந்தது. புற்றை இழந்த எறும்புகளைப் போல மக்களின் மொய்ப்பு. கொய்யோமொய்யோவெனக் கரைதல். தேரடித் தெரு சுடுநீரும் மென்பாதமுமென இருந்தது. மரங்கள், செடி, கொடிகள் ஆடாது அசையாது அச்சமுற்றும் அதிர்ச்சியுற்றும் நின்று கொண்டிருந்தன.

'மூடர் யோசனை! முரட்டுச் சிந்தனை' அனந்தராமன் திவானை நினைத்துத் தொண்டைக்குள் புழுங்கினார்.

ஒரு வழிப்போக்கன் தன் பெண்டு, தன் பிள்ளையென அவன் போக்கில் நடந்து கொண்டிருந்தான். அவனை வழி மறித்துக் கேட்டார் அனந்தராமன் 'இருவழிப் பாதை எட்டுவழிப் பாதையாகப் போகிறதாமே...'

'என்னே, அப்படியா...! மன்னர் என்னவோ செய்துவிட்டுப் போகிறார். நமக்கென்ன..' எத்தனை வேகமாகச் சொன்னானோ, அத்தனை வேகமாக அவனது கால்கள் நடைக்கட்டின. அவனை நினைக்கையில் அனந்தராமனுக்கு மூக்கு வியர்த்துப் பற்கள் வியர்த்தன. என்னே, வேடிக்கை மனிதனடா இவன்!

'தெரியுமா செய்தி, எட்டுவழிப் பாதையாமே...'

'அப்படியென்றால் இராஜவீதியில் எண் தேர்கள் ஒருசேர வரப்போகிறது என்று சொல்லுங்கள். அழகே அழகுதான். பார்க்கக் கண்களுக்கும் வியர்க்கும்..'

இவன் சரியான கேலி மனிதனாக இருப்பான் போலும்!

'கேட்டீரா சேதி....'

'நல்ல செய்திதானே, மதராஸப் பட்டினத்தைப் பார்த்தீரா, பிரிட்டிஸார் எப்படியெல்லாமோ பாதையை அகலப்படுத்துகிறான். அழகுப் படுத்துகிறான். நம்ம தேசம் என்ன அப்படியாக வேண்டாமா...?'

'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?'

'மன்னர் செய்யும் எதுவும் சரியாகவே இருக்கும்...' சொன்னவன் நிற்கவில்லை. திரும்பிப் பார்க்கவில்லை. நமக்கு ஏன் வம்பு, பெரிய இடத்தில் வீம்பெனப் பாதையிலிருந்து விலகி அவனொரு பாதையில் நடந்துகொண்டிருந்தான்.

அனந்தராமன் எத்தனை பேரிடமோ கேட்டுவிட்டார், திவான் வாக்கு ஒன்றே சித்தன் வாக்கென இருந்தது. அவரால் பாம்பாட்டிச்

சித்தரை நினைக்காமல் இருக்கமுடியவில்லை. உளியால் செய்த சிற்பத்திற்கு உணர்ச்சியென்று ஒன்றில்லை ஆடு பாம்பே, நீ ஆடு பாம்பே! நாக்கு தொண்டை வரைக்கும் முணங்கினாலும் கோபம் இமை தாண்டிக் காது வரைக்குமாக நீண்டது.

திவானுக்கு மன்னன் மீது குருபுத்தி. மக்கள் மீது குறுக்குப்புத்தி! பற்களைக் கடித்துக்கொண்ட அனந்தராமன் சாலையின் விளிம்பில் வேரறுக்கப் போகும் ஒரு மரத்தடியின் கீழ் அமர்ந்தார்.

அவரை நோக்கி வந்திருந்த ஒரு வயோதிகர், ‘அனந்தராமன்...’ என விளித்தபடியே வந்தார். ‘நான்தான் தெரியாமல் கேட்கிறேன், என்றைக்கு டி.ஆர்.பார்த்தசாரதி அய்யங்கார் திருவிதாங்கூர் சமஸ்தான திவானாக உட்கார்ந்தாரோ அன்றைய தினமே நிதி இருப்பு அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது. கஜானாவைக் கூட்டி அள்ளினால் கைப்பிடித் தேறாது. கையில் இருப்பில்லை. கஜானாவில் நெல் இல்லை. பிரிட்டிஸாரிடம் வாங்கிய கடனுக்கு வட்டிக்கட்ட ஒரு வழியுமில்லை. எதிலும் எல்லா வற்றிலும் வரி, வரி மேல் வரி, வரிக்கு வரி, முலைக்கு வரி, தீட்டுத் துணிக்கு வரி, மீசை மயித்துக்கும் வரி.. இத்தனை வரியிலும் சமஸ்தானத்தின் கஜானா வயிறு துவைத்துக் காய்கிறது. இந்த நிதிச்சுமையில் சாலையை அகலப்படுத்தத்தான் வேண்டுமா...?’

அவரது கேள்வி அனந்தராமனுக்கு இதமாக இருந்தது. தான் எத்தனையோ பேரிடம் கேட்டுத் திரிந்த கேள்வியை அவரைப் பார்த்து ஒருவர் கேட்டிருந்தார்.

‘மன்னர் பார்த்துக்கொள்வாராம்...’

‘கூகை மனிதர்கள்’

‘மன்னரையாச் சொல்கிறீர்கள்...’

‘மன்னருக்கு ஊர்ச்சுற்றவே நேரமில்லை. இதைப் பற்றியெல்லாம் யோசிக்க அவருக்கு ஏது நேரம், திவானைச் சொல்கிறேன்...’

‘மனிதர்கள் என்றீரே’

‘அவருக்குக் காது குடைந்துவிடும் மந்திரிகளையும் சேர்த்துச் சொல்கிறேன்...’

அனந்தராமன் தொண்டைக்குள் மன்னனும் திவானும் ஒருசேர உருண்டார்கள்.

அச்சாலையில்தான் எத்தனைக் கடைகள்! கோயிலின் அழகை வரைந்து சொல்லும் கைவினைப் பொருட்களின் கடை, வெங்கலக் கடை, பாத்திரக் கடை, சில்வர், தட்டுமுட்டுச் சாமான்கள், தேங்காய் சூடம் பத்தி பூக்கடைகள், வாடகை வேட்டிக் கடைகள், ஜவுளிக்கடை, அகல் விளக்கு, குத்துவிளக்குக் கடைகள், நெய், வெண்ணெய்க் கடை, வெற்றிலைக்கடை, அடுக்கடுக்காக அடைசலான கடைகள்... இது தவிர சாலையோர நடைப்பாதைக் கடைகள்.

ஒரு பாட்டி ஒரு மூங்கில் கூடையில் பூக்களை வைத்துக்கொண்டு முழத்தால் அளந்து கொண்டிருந்தாள். ஒரு கிழவர் விசிறி மட்டைகளை நட்சத்திரமாக விரித்துக் கூப்பாடுப் போட்டுக்கொண்டிருந்தார். ஒரு இளைஞன் கற்கண்டு விற்றான். மற்றொருவன் பானகம் விற்றான். சிறுவர் சிறுமிகள் நெய், வெண்ணைய் விற்றுக்கொண்டிருந்தார்கள்.

சாலையின் ஒதுக்குப்புறமாக நின்றுகொண்டு ஒரு கிழவி மோர் விற்றுக்கொண்டிருந்தாள். இன்னொரு கிழவி அதையே தானமாகக் கொடுத்துக்கொண்டிருந்தாள். நவதானியம் கடையொன்று இருந்தது. அதற்கும் அருகில் மண்பானைக் கடை. மரப்பாச்சி பொம்மைக்கடை. ஒருவன் சாலையின் விளிம்பில் துண்டை விரித்துக் கிருஷ்ண அவதாரத்தைப் பென்சிலால் வரைந்துகொண்டிருந்தான். மற்றொருவர் அதை எடுத்துக் கூவி விற்றுக்கொண்டிருந்தான். யானைக்கான தீனிக்கடையொன்று அச்சாலை யில் ஒரு பக்கக் கடையாக இருந்தது. அதே கடையில் குதிரைக்கான கொள்ளும் இருந்தது.

எள்ளுக்கென்றே தனிக்கடை. நெல், அரிசி, குருணை, தவிடு என ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கடை இருந்தது. இத்தனைக்கு மிடையில் பெரிய்ய்ய கடையொன்றும் இருந்தது. அக்கடை, ஒரு வீட்டின் திண்ணைக்கடையாக இருந்தது. எங்கும், சுற்றிலும், வீதியெங்கும் கடைகள், கடைகள், கடைகடையாய்க் கடைகள்.

அன்றைய தினம், கோவில் திறக்கப்படாத நாள் என்பதால் கோவிலின் தேரடிப் பாதையில் மக்கள் நடை உடையில்லாமல் துடைத்துக் காய்ந்து கொண்டிருந்தது. அந்நாளில்தான் நான்கைந்து பேர் நிலம் அளக்கும் கன்னியால் குறுக்கு, நெடுக்குமான தெருவை அளந்து கொண்டிருந்தார்கள். அளவைகள் இரு பக்க திண்ணையைத் தாண்டி, முற்றத்தைத் தாண்டி எல்லையைத் தாண்டிக் குறிகளாக உள்ளே வெளியே விழுந்துகொண்டிருந்தன. குழந்தையின் முகத்தில் விழும் கிழட்டுச் சுருக்கம் போலவே

அக்குறியீடுகள் சற்றும் பொருத்தமில்லாமல் இருந்தன. மக்கள் தடுக்க வேண்டிய கையை வாயிலும் தலையிலும் வைத்துக்கொண்டு துக்கப் பார்வையில் பார்க்கவும் வெறிக்கவும் இருந்தார்கள்.

அங்கே, இங்கேயெனச் சுண்ணாம்புக் கட்டியிலான குறிகள் விழுவதாக இருந்தன. முன் இட்ட குறி அழிக்க, அடுத்த குறி அதன் உள்ளே நுழைந்து குறியிடுவதாக இருந்தது. கடையைத் தாண்டி, திண்ணைக்குள், வீட்டிற்குள். வீடு தாண்டி, வாசலென.. எங்கும் அளவீடுகள். கன்னி அளவை சங்கிலிக்கு மாறியது. சங்கிலியின் அளவு அகலக்காலானது. கால் அளவை, கண் அளவை, மிரட்டல் அளவையில் வந்து நின்றது.

'அய்யோ, என் வீடு, அய்யகோ! என் கூடு..' 'என் வாசல் போகிறதே, என் வாயிலும் போகிறதே...' மக்களின் மனக்கொதியில் அமிலக்கொதிப்பு.

'வியர்வையில் பூத்த கட்டிடம் இது. எங்களை விட்டுக் கைக் கழுவ நிற்கிறது..'

'பத்பநாபா, நீயே எல்லாத்தையும் எடுத்துக்கோ, என் உயிரையும் சேர்த்து எடுத்துக்கோ. இதோ, என் கணவன், இதோ என் பிள்ளைகள், எல்லா உயிரையும் சேர்த்து எடுத்துக்கோ...' தலைவிரிக் கோலமாகக் கோவிலை நோக்கி ஓடினார்கள்.

துன்பத்துள் துன்பம்! கடவுளே, இது உனக்கே அடுக்குமா, தலையில் அடித்துக்கொண்டார்கள். சுவரில் மோதிக்கொண்டார்கள். வாய் பேச வேண்டியதைக் கண்கள் பேசுகின்றன. கண்கள் பார்க்க வேண்டியதைக் கண்ணீர்த்துளிகள் பார்க்கின்றன.

இத்தனை ஆண்டுகாலம் கட்டிக்காத்த இத்தெருவும், வீடும், கடையும் இயந்திரத்தின் கோரப் பிடிக்கு உள்ளாகப் போகிறதே, தகதகக்கும் தவிப்பு. பதபதவெனப் பதைப்பு. கைகள் கைகளைப் பிசைகின்றன. கால்கள் கால்களை மிதிக்கின்றன.

'மக்களின் வயிற்றில் உங்களின் கால்கள் படத்தான் வேண்டுமா, மன்னன் கால்கள் என்ன அத்தனைப் புனிதமா? அரண்மனை மேயவும் குடிசைகள் செரிக்கவுமா..?' மக்கள் மனதில் காந்தல் வலி. ஒவ்வொருவரின் முகத்திலும் மின்வெட்டுக் கோபம். கோபம் நல்லது, ஒன்றுத்திரண்டால் ! ஆனால் அவர்களின் கோபம் நாலாபுறமும் சிதறுவதாக இருந்தது.

'பின்னே, சாலையை விரிவாக்க வேண்டாமா, மக்கள் பெருக வீதி பெருக்க வேணாமா? சரியான முடமூளைகள்..'

'யாரைச் சொன்னாய் முடமென்று...'

'இச்சாலை வரவை எதிர்ப்பவர்களைச் சொல்கிறேன்...'

'என் வீடு அஸ்தியாய்க் கரையவும், உன் வீடு அஸ்திவாரமாக நிற்கவுமா?'

'நம் சமஸ்தானத்திற்காக, நம் மன்னருக்காக உன் வீட்டை விட்டுக்கொடுத்தால் என்னவாம்..?'

'என்ன சொன்னாய், என்னே சொன்னாய், என்னையாச் சொன்னாய்...' கோபம் அவளை நோக்கியே திரும்பியது. தலையில் தலையில் அடித்துக்கொண்டாள். வாயிலும் வயிற்றிலும் குத்திக்கொண்டாள். மக்கள் முகத்தில் துக்கக்காடு. தூக்கணாங்குருவிக் கூட்டைக் குரங்குக்கைக்குக் கொடுத்துவிட்டதைப் போலக் கையறு நிலையில் நின்று, நிற்க முடியாமல் நடந்து, நடக்க முடியாமல் அமர்ந்து....

'நாட்டிற்காகத்தானே இந்த எட்டு வழிச் சாலை...'

'என்ன சொல்கிறீர்கள்...?'

'ஆமாம், சாலை அமைத்தால் நிதி கூடும்..'

'சாலைக்கும் நிதிக்கும் என்ன இருக்கிறது...?'

'நிறைய இருக்கிறது...'

சாலையை அளக்க வந்தவர்கள் வானத்தையும் சேர்த்து அளக்கிறார்கள். ஒவ்வொரு அளவையிலும் கனவு சரிகிறது. அளவைக் கண்டு ஒரு தாய் வெடித்தழுகிறாள். அவளைக் கண்டு ஒரு குழந்தை அலறுகிறான். ஆம்பளைகள் என்னச் செய்வதென்று தெரியாமல் நெஞ்சுக்குள் புழுங்கி, குமுறிக் கவலையில் தேய்கிறார்கள்.

'எட்டு வழிப்பாதை கூடாது..' 'சாலை விரிவாக்கம் கூடாது....' அவரவர் சேலையை உருவிச் சாலையில் கிடத்தி உட்காரும் படலம் நடந்தேறியது. வீட்டுக்குள் அடைந்து கிடந்த பெண்கள், சிறுமிகள் அலறியடித்து வீதிக்கு ஓடி வருகிறார்கள். வீதியில் அளந்து கொண்டிருந்தவர்கள் வீட்டுக்குள் ஓடுகிறார்கள். மக்களின் ஓட்டம் ஊசலாட்டமாக இருக்கிறது. சாலைக்கும் வீட்டுக்குமான ஊஞ்சலாட்டமாக மாறுகிறது. சாலையின் இருபக்கக் குடியிருப்பு களையும் அதிரடியாக இடிக்கும் நிலைக்கு வந்து நின்றது சமஸ்தானம். திவானின் இதயம்

துருஇரும்பானது. மூளைக்குள் சிலந்தி வலைப் பின்னியது. இயந்திரத்தை விடவும் கொடூரமாக முகத்தை வைத்துக்கொண்டிருந்த ஆயுதபாணிகள் வீதியில் குவிந்தார்கள். வெட்ட, இடிக்க, அழிக்க, தோண்ட, அகலப்படுத்த.. எனக் கண், காதற்ற கருவிகள் குவிந்தன.

'ஒரே, ஒரு இரவு அவகாசம் தாருங்கள்...' மக்கள் ஓடிப்போய் திவானின் கால்களில் விழுந்தார்கள். கண்ணீர் வடித்துக் கெஞ்சினார்கள்.

திவான் முதலில் பதுங்கினார். பின்னர் பணிந்தார். 'ஒரே ஒரு இரவு. சரி தருகிறேன்...'

மறுநாள் பொழுது விடிந்தது.

அரண்மனைக்குள் குவியல்கள், குன்றுகள். அரண்மனைக்கு வெளியே வணிகர்கள், வியாபாரிகள், வேளாண் குடிகள், பாமர மக்கள்..

எத்தனை ஆண்டுகாலச் சேமிப்போ. எத்தனை மக்களின் உழைப்போ, அவர்களின் கை, கால், கழுத்து நகைகள் அரண்மனைக்குள் வந்து விழுந்தன. ஏணியில் ஏற்றி வைத்தது. பரணியில் பத்திரமாக வைத்தது. சுருக்குப்பைக்குள், உப்புப்பானைக்குள் வைத்த நகை நட்டு நாணயங்கள் சில்லறையாக, முடிச்சுகளாக, கொத்துகளாக.. சிலர் செப்புக்குடம், சிலர் தவலைகள்.. சரம்சரமாக, அணி அணியாக... அரண்மனைக்குள் கொட்டினார்கள்.

ஒரு ஏழைத்தாய் ஓடி வந்தாள். 'இதோ இது என் தாலி, என்னிடமிருக்கிறது இது மட்டும் தான்!' படக்கென அறுத்து அரண்மனைக்குள் எறிந்தவள் கண்ணீர் மல்கச் சொன்னாள் 'எனக்கு என் குடிசை வேணும்..'

மற்றொரு தாய், 'இது என் பேரனின் அருணாக்கொடி, எனக்கு என் காணி நிலம் வேணும்'

'இது பிறக்கப்போகும் என் பிள்ளைக்கு வாங்கிய தாயத்து, இது எனது மெட்டி..'

'இது என் காதலன் எனக்கு அணிவித்த கணையாழி..'

அறுபடும் சத்தமும், விட்டெறியும் சத்தமும் ஒருசேரக் கேட்கின்றன.

ஒரு பொன்குன்று மெல்ல வளர்ந்து மலையாகிறது. மலையில் தாலிகள், பொட்டுக்காசுகள் விழ மலை சரிந்து ஓடையாக ஓடுகிறது.




திவான், சாட்டை சலசலங்க, சதுரமணிகள் கிணுகிணுங்க குதிரை வண்டியில் வந்திறங்கினார். மக்கள் இலையுதிர்க் காடாக நின்றார்கள். வாய் உடைந்த பானையாக, மூக்கு உடைந்த சிற்பமாக,.. அவர்களின் காது, மூக்கு, கழுத்துகள் மூளியாக இருந்தன.

குதிரைவண்டியால் அரண்மனைக்குள் நுழைய முடியவில்லை. குண்டுமணி நகைகள், பவளங்கள், பட்டுகள், முத்துகள்.. ஆங்காங்கே சிதற உருளத் தெறித்துக்கிடந்தன. பூக்கள் மீது உருள வேண்டிய வண்டிச்சக்கரம் நகைகள் மீது உருண்டன. பொன் உடைந்து, நசுங்கிச் சக்கரத்தின் விளிம்பில் பிதுங்கின. மூச்சு நிற்கப்போகும் பெரும் நோயாளியின் நாசியைப் போல வண்டியின் பேரரவம்.

திவான், கால்கள் பொற்குவியலின் மீது அவிழ வண்டியிலிருந்து இறங்கினார். அரண்மனையை ஒரு சுற்று வலம் வந்தார். அரண்மனை, வாசல், முற்றமென.. எங்கும் பொற்குவியல்கள். மின்ன, மினுங்க, அணியாக, சரமாக மிதந்தன.

அவரது மூளையை மெச்சிக்கொண்டார். தன் உடம்பைச் சாக்கு மூட்டையைப் போலக் குலுக்கிக்கொண்டார். மன்னருக்கு அவசரமாகச் செய்தி அனுப்பினார்.

திருவிதாங்கூர், அடுத்த கொண்டாட்டத்திற்குத் தயாரானது. ■

• க. பூரணச்சந்திரன்



# திறனாய்வுச் செம்மல்

**நா**ன் பிறந்தது, வடஆர்க்காடு மாவட்டம் ஆர்க்காடு என்ற ஊரில், 1949இல். குடும்பம், சைவத்தையும் தமிழையும் போற்றுகின்ற ஒன்று. எனவே பிறப்பு முதலாகவே தேவார திருவாசகப் பனுவல்கள் முதலாக பாரதி, பாரதிதாசனார் பாடல்கள் வரை கேட்டு வளரும் வாய்ப்பிருந்தது. என் தாயாரும் இவற்றை எல்லாம் நன்றாகப் பாடக்கூடியவர்.

பொதுவாக, பள்ளி முதல் கல்லூரி வரை முதல் மாணவனாகப் படித்தவன். கல்லூரியில் படித்தது பி.எஸ்சி. இயற்பியல். பிறகு சென்னை ஆசிரியர் கல்லூரியில் பி.டி. சில ஆண்டுகள் பள்ளி ஆசிரிய வாழ்க்கை. தனிப்பட்ட முறையில் எம்.ஏ. தமிழ் பயின்று, பல்கலைக்கழக முதல் மாணவனாகக் கலைஞர் கையால் பட்டம் பெற்றேன். பிறகு பிஷப் ஹீபர் கல்லூரியில் பணி. 2007இல் ஓய்வு. சிலகாலம் புதுவை மையப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியும் ஆராய்ச்சிப் பணியும்.

பி.எஸ்சி. படிக்கும்போதே குறுந்தொகை, கலித்தொகை முதலிய சங்க இலக்கியங்களை நோட்டுப்புத்தகத்தில் எழுதி வைத்துப் பயின்றவன். மு.வ. புத்தகங்கள் பல, தமிழ் பயிலுவதற்கு வேகம் அளித்தன. பி.எஸ்சி. காலப் படிப்புகளில் மிக முக்கியமானது, ஆர்.கே.சண்முகம் செட்டியார் எழுதிய சிலப்பதிகாரப் புகார்க்காண்ட உரை. அதற்கு இணை கிடையாது.

தமிழ் ஆர்வம் தொடர்ந்ததால் முதுகலைப் படிப்பு தமிழாக அமைந்தது. எனினும் பிறகு எம்.ஏ. ஆங்கிலமும் பயின்றேன். அதற்குப் பிறகு பயின்றவற்றுக்குக் கணக்குக் கிடையாது. மார்க்சியமும், அமைப்புவாதமும், பிற பல கோட்பாட்டுத் துறைகளும் பலதுறை வாசிப்பினை வேண்டுபவை.

1990இல் எனது முதல் புத்தகம், 'அமைப்பு மைய வாதமும் பின்னமைப்பு வாதமும்' வெளிவந்தது. தொடர்ந்து தமிழ் இலக்கிய விமரிசகன், இலக்கியக் கோட்பாட்டாளன் என்னும் வரவேற்பு கிடைத்தது. இன்றுவரை சொந்தமாகப் பத்தொன்பது புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். இவற்றுள், 'கவிதையியல்', 'கதையியல்' போன்றவை நன்கு பாராட்டப் படுகின்றன. இதுவரை நாற்பத்திரண்டு புத்தகங்களை மொழிபெயர்த்திருக்கிறேன். மொத்தம் அறுபத்தொரு நூல்கள். இன்னும் எழுதுவேன், எழுதிக்கொண்டே இருப்பேன்.

2011இல் 'வரவர ராவின் சிறைக் குறிப்பு'களை மொழிபெயர்த்தமைக்கு ஆனந்தவிகடன் விருது கிடைத்தது. பிறகு 2014இல் நாமக்கல் சின்னப்ப பாரதி அமைப்பின் சார்பாகச் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது. 2016இல் 'இந்துக்கள் மாற்று வரலாறு' நூலுக்காக மீண்டும் ஆனந்தவிகடன் விருது. 'பொறுப்புமிக்க மனிதர்கள்' என்ற நாவல் மொழிபெயர்ப்புக்காக அதே ஆண்டு சாகித்திய அகாதெமி விருது. பிறகு 2017இல் கலைஇலக்கியப் பெருமன்றத்தின் பாராட்டு. அந்த ஆண்டின் இறுதியில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, 'திறனாய்வுச் செம்மல்' என்ற பட்டமும் விருதும் வழங்கியது. சென்ற ஆண்டு கோவை திசைஎட்டும் மொழிபெயர்ப்பு அமைப்பு சிறந்த மொழிபெயர்ப்பாளராகத் தேர்வு செய்தது.

கடைசியாக மொழிபெயர்த்து, இந்த ஆண்டு புத்தகச் சந்தையில் வெளிவந்தவை, பேராசிரியர் லாஸ்கியின் 'அரசியல் இலக்கணம்', 'வரலாற்றில் பிராமண நீக்கம்' ஆகிய நூல்கள். வரக் காத்துக் கொண்டிருப்பவை 'லெனின் சந்தித்த நெருக்கடிகள்' போன்ற சில. இறுதியாக இந்த ஆண்டு வெளிவந்த என் சொந்தப் புத்தகம், 'சான்றோர் தமிழ்'. இப்போது மொழி பெயர்த்துக்கொண்டிருப்பது, அல்தூசரின் 'மார்க்ஸுக்காக' என்ற தத்துவ நூல்.

எழுத்திலும் எழுத்துக்கான பாராட்டுப் பெறுவதிலும் ஓரளவு நிறைவான வாழ்க்கைதான் இல்லையா? ஆனால் மனதில் வெறுமைதான் மிஞ்சியிருக்கிறது. இன்றைய தமிழ்நாட்டின் மிக மோசமான நிலைதான் முக்கியக் காரணம். பௌதிக, புவியியல் அமைப்பிலும், மனங்களிலும் பாலைவனமாகி வரும் தமிழகம். அதைச் சரிசெய்ய நேரடியாகப் போராட்டங்களில் பங்கேற்க உடல்நலம் இடம் தரவில்லையே என்ற எண்ணம். கால் முறிவு. ஒரு கண் பார்வை முற்றிலும் இன்மை. மறுகண்ணும் அரைகுறைப் பார்வையே. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழர்களின் உணர்வற்ற, மானமற்ற, அநீதிகள் எல்லா வற்றையும் சகித்துக்கொண்டு வாழும் இன்றைய வாழ்க்கை. ஏன் தமிழனாகப் பிறந்தோம் என்ற சலிப்புதான் எஞ்சுகிறது. ■

• கவி: போகன் சங்கர்
சித்திரம் : கொ.வடிவேல்



**1**

**அ**வர் இருந்தால் முத்தமிடுவார்
கொஞ்சம் நிதானமாக
கொஞ்சம் ஆவேசமாக
கொஞ்சம் காதலாக
கொஞ்சம் காமமாக

எதுவும் இல்லை
இவன் முத்தம்
முத்தமே இல்லை.

**2**

**வ**னத்தின்
அச்சுறுத்தும் தனிமையில்
எப்போதும்
என்னைத் தழுவிக்கொண்டு
என்னை உறிஞ்சும்
அட்டை
உதிர்ந்து விழுந்து இறந்தபோது
அதன் மீது பொங்கிய
அபாரமான காதலை
கண்ணீரை
விளங்கிக்கொள்ள முயல்கிறேன்.

• சக்தி அருளானந்தம்

# தெருக்கூத்து

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை புக்கம்பட்டி கிராமத்தை மக்கள் கலைகளின் தாய்வீடு என்றே சொல்லலாம். இங்கு மட்டுமின்றிக் கொளத்தூர், குரும்பனூர், காருவள்ளி, கண்ணந்தேரி, நல்லூர், மேச்சேரி, சீரகாபாடி, கீரபாப்பம்பாடி, காளிக்கவுண்டனூர், சன்னியாசி குண்டு, எலயாம்பாளையம், அந்தியூர், குருக்குப்பட்டி, கூலிப்பட்டி, வனவாசி, மாட்டையாம்பட்டி, பெரும்பாலை, கரையாவூர், பக்கநாடு, பல்லக்காடு, பழையூர், குள்ளனூர், அன்னூர், செட்டிப்பட்டி, நத்தமேடு, புத்தாங்குட்டை, மாணிக்கம்பட்டி என்று மாவட்டம் முழுக்க ஐம்பதிற்கும் மேற்பட்ட ஜமாக்களாகப் பரவியுள்ளனர்.

ஒரு ஜமா என்பது பன்னிரெண்டு பேரிலிருந்து பதினைந்துபேர் கொண்டது. முகவீணை, ஆர்மோனியம், ஜலதரங்கம், டோலக், மிருதங்கம், ஜால்ரா போன்ற இசைக்கருவிகளைக் கையாளும் திறன் பெற்றவர்களாகவும், ஒரே கூத்தில் பலவிதக் கதாபாத்திரங்களை ஏற்று நடிக்கும் ஆற்றல் உடையவர்களாகவும் இருக்கிறார்கள்.




தோற்பாவை, பொம்மலாட்டம் ஆகியவைகளுக்கு ராமாயணக்கதைகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது கூத்தில் மகாபாரதம் அதன் கிளைக்கதைகள் இடம்பெறுகின்றன. இதற்குப் பாரதத்தின் கூடுதலான நாடகத் தன்மை காரணமாக இருக்கலாம். அரிதாரம் பூசும்முன் மிக எளிமையாகக் காட்சிதரும் இவர்கள் கூத்தில் நடிக்கும்போது மிரட்டி விடுகிறார்கள்.

கூத்தைப்பற்றி எழுத்தில் விவரிப்பது காகிதத்தில் தேன் என்று எழுதிப் படிப்பதற்கும், உண்மையாகவே தேனைச் சுவைப்பதற்கும் உள்ள வேறுபாடு.. அவ்வளவு தூரம் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தி விடுகிறார்கள். தை மாதம் தொடங்கி ஆடிவரையில் கூத்து கோலோச்சும் காலம். இதற்குக் காரணம் அடிப்படையில் நம் சமூகம் உழவை மையமாகக் கொண்டதாக இருப்பதால் இருக்கலாம். பெரும்பாலும் திருவிழாக்கள் இந்த மாதங்களிலேயே வருகின்றன. உழைத்துக் களைத்த மக்கள் இளைப்பாறிக் கொள்வதாய்த் திருவிழாக்கள் அமைகின்றன.

"நிகழ்த்துக் கலைகளில் பெண்களின் பங்கு எங்கும் இல்லை" என்கிற முனைவர்கள், ஆய்வாளர்கள் கூற்றை அடித்து நொறுக்குவதாய், தங்கள் கலைச் சேவையின் வயதையே ஐம்பதென்றும், நாற்பதென்றும்

சொல்லக்கூடியவர்களாய்ச் சேலம் மாவட்டப் பெண் கூத்துக் கலைஞர்களின் பங்களிப்பு காத்திரமாக இருக்கிறது. காளிக்கவுண்டனூர் லட்சுமி அம்மாள், அம்மாபேட்டை ஜெயம்மாள், அந்தியூர் ராஜம்மாள், வனவாசி கந்தம்மாள், வனவாசி மாதம்மாள், அம்மாபேட்டை காளியம்மாள், நல்லூர் பெரிய மாது என்று நீள்கிறது.

இவர்களுள் லட்சுமி அம்மாள் 'பொண்டுக ஜமா' என்றழைக்கப்பட்ட பெண்கள் மட்டுமே கொண்ட ஜமாவை நடத்திவந்திருக்கிறார். ஒப்பனைக்கலையில் வல்லவர். கூத்துக்கான ஆடைவடிவமைப்பில் விற்பன்னர். இவர் ஆடிய காலத்தில் கூத்துக்கே உரிய அடவில் பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியதோடு பல சோதனை முயற்சிகளிலும் வெற்றி கண்டவர். வயதின் தள்ளாமை காரணமாக ஒதுங்கினாலும் கூத்து இவரை விடுவதாயில்லை. சக கலைஞர்கள் இவருடைய ராசியான கரங்களால் ஒப்பனை செய்து கொள்வதை விரும்பி அழைத்துச் செல்லப் படுபவராக இறக்கும்வரை இருந்தார்.

இன்னொரு ஆளுமையான ஜெயம்மாள் தோல்பாவை, பொம்மலாட்டம், தெருக்கூத்து மூன்றிலும் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக முத்திரை பதித்துவருகிறார். இவருடைய கணவரான செல்லப்பன் மிருதங்கக் கலைஞர். இவர் ஏழு மிருதங்கங்களை ஏக நேரத்தில் வாசிக்கக்கூடிய ஆற்றல் கண்டவர். இன்னும் மாயவன், பொன்னான், வடிவேலு, கணேசன் என்று ஆண்களிலும் மகாக் கலைஞர்கள் பட்டியல் நீள்கிறது.

இப்படிப்பட்ட ஆளுமைகளை உள்ளும் புறமும் அருகிருந்து பார்க்கும் வாய்ப்பு பெற்ற படைப்பாளன் என்ன செய்வான்?அவன் சேகரித்த தரவுகளைப் படைப்பாக்க முயற்சி செய்வான். அதனால் அவனுக்குப் புகழ் சேருமே தவிர அந்தக் கலைஞர்களுக்கு ஆவதென்ன?

ஹரிகிருஷ்ணன் 'மணல்வீடு' எனும் சிற்றிதழின் ஆசிரியர். மேட்டூர் அருகே ஏர்வாடி என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில் வசிப்பவர். ஏர்வாடி கிராமம் தமிழ்நாடு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதா தெரியவில்லை. ஆனால் அவரின் இடைவிடாத முயற்சி மக்கள் கலையில் ஆர்வம் கொண்ட உலகெங்கிலும் உள்ள கலைஆர்வலர்களின் உள்ளங்களில் அந்தச் சின்னஞ்சிறு ஊரின் பெயரைச் செதுக்கிவைத்திருக்கிறது.

"சமூகத்தின் கடைகோடியில் வாழ்ந்துவரும் மக்கள் கலைஞர்கள் மீளமுடியாத வறுமையில் உழன்றபோதிலும் தம் உடல், பொருள், ஆவி ஈந்து அந்த அரிய கலைகளுக்கு உயிரூட்டி வருகிறார்கள். அவர்களைக் கண்டு பாராட்டு வதும், அரசியல் சூழ்ந்துள்ள இந்த நெடிய உலகத்தில் அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கச் செய்வதும், அவர்தம் வாழ்வாதாரத்தை உயர்த்தும்படியான பொருளாதாரச் சூழலை உருவாக்குவதும் நமது இன்றியமையாத கடப்பாடு ஆகும்", என்று சொல்லும் ஹரி அவர்கள் வாழ்வு துலங்கவேண்டும்.. அவர்களுடன் அந்த அரிய கலைகள் முடிந்துவிடக்கூடாது.. அடுத்த தலைமுறைக்குக் கைமாற்றித் தரவேண்டும் எனும் நினைப்பால் 'களரி தெருக்கூத்துப் பயிற்சிப் பட்டறை'யைக் கூத்துக்கலைஞர்களான ஹரியின் நண்பர்கள் தனபால் போன்றவர்களின் ஒத்துழைப்பால் உருவாக்கியுள்ளார்.

களரி பயிற்சிப் பட்டறையின் நோக்கம் கூத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்குத் தேர்ந்த கலைஞர்களைக் கொண்டு பயிற்சி கொடுப்பது, வாய்மொழியில் மட்டும் இருக்கும் கதைவடிவங் களுக்கு எழுத்துப்பிரதிகளை உருவாக்குவது, அரசின் நலத்திட்டங்களை நலிந்த கலைஞர் களுக்குக் கொண்டு சேர்ப்பது, திறமைவாய்ந்த மூத்த இளங்கலைஞர்களைப் பாராட்டிப் பரிசுகளும் விருதுகளும் வழங்குவது என்று செயல்படுகின்றனர்.

ஏர்வாடி எனும் சின்னஞ்சிறு ஊரிலிருந்து கொண்டு இணையதளம்வழி கூத்தின் பெருமையை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் உத்வேகத்துடன் செயல்படும் இந்த இளைஞர்கள் கூத்தின் மரபோ அதன் தீவிரத்தன்மையோ மாறக்கூடாது என்பதில் தெளிவாக இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. ■

நோபல் இலக்கியங்கள் அறிமுகம்

தொடர் - 6

இலக்கியத்தின் தோரணவாயில்

• தா. ஜோ. ஜூலியஸ்

# ஜான் பாட்ரிக் மோடியானோ






தேர் ஓடும் வீதியில் தனியே ஒரு அழகிய இளம்பெண் நிற்பதைப் போன்றது பல நூல்களுக்கு இடையில் இலக்கியத்தரம் மிக்க ஒரு படைப்பு தனித்து நிற்பது.. அதிகாலைக் குளிரில் இழுத்துப் போர்த்திக்கொண்டு உறங்க முயலும்போது வரும் கனவு போன்ற சுகத்தை ஒரு படைப்பு தரவேண்டும். அதனைச் சாதாரண சுகம் என்று யாரும் கடந்துவிட இயலாது.. அத்திப் பூத்தாற் போல் நிகழும் அது பித்த நிலைக்கு நம்மைத் தள்ளி, மொத்தப் பிரபஞ்சத்தையும் அத்தை மகளைப் போல் கட்டி அணைத்து, தீவிரக் காதலையும், அன்பையும் தரும். வாழ்வின் வலிகளையும் நினைவின் பிணிகளையும் வாழ்க்கைத் துளிகளாய்த் தூரிகை கொண்டு தீட்டும் அழகிய சித்திரம் ஆக்கிவிடும் வகையில் மாற்றவல்ல ஆயுதம் எழுத்தைத் தவிர பிறிதொன்றுமில்லை. இவ்வாறு ஒவ்வொரு படைப்பும் நம்மைச் சுண்டி இழுக்கும் வலையாய், ஆக்கத்தின் கலையாய், அழகியல் சிலையாய், கருத்து ஓவியமாய், சிறுத்த இடை கொண்ட சிங்காரியாய் நம்மை ஈர்க்க வேண்டும்.

புதிய ஒரு படைப்பு எல்லோருக்கும் ஏன் பிடித்து இருக்கிறது என்றும் அது ஏன் அனைவரையும் கவர்கிறது என்றும் அதன் மூலம் மக்களின் வாழ்க்கைக் கோணமும் ஆன்மிகத்தின் ஆழ அகலங்களும் எப்படி மாறுகின்றன என்றும் ஆய்ந்து பார்த்தோமெனில் அது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய, விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட வேண்டிய பெரும் இலக்கிய ஆக்கம் என்பது இவ்வகை ஆய்வுக்குப் பின்னரே புலப்படும். இந்த வகையில், ஜான் பாட்ரிக் மோடியானோவின் படைப்புகட்கு ஏன் இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது என்பதை அவரது படைப்புகளைச் சற்று அலசிப்பார்த்தோமெனில் புரிந்துவிடும்.

ஸ்வீடிஷ் அகாடமியின் கூற்றுப்படி, "ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பூமியில் உலக வாழ்க்கை குறித்தும் பிடிபடாத தனி மனித விதி குறித்தும் இவர் ஞாபகம் எனும் கலை கொண்டு வெளிக்கொணர்ந்த விதத்திற்காக" 2014ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. இந்தப் பரிசு அறிவிக்கப்படும் முன்னர், இவரது பெயரை ஆங்கிலங் கூறும் பெரு உலகில் மிகக் குறைந்தவர்களே அறிந்து இருந்தனர். நிறைய படைப்புகளைத் தமது தாய்மொழியாகிய பிரெஞ்சு மொழியில் அவர் படைத்து இருப்பினும் பன்னிரண்டிற்கும் குறைவான படைப்புகளே ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு இருந்தன. அதிலும் பல அச்சேறாமலேயே இருந்தன. காணாமல் போனவர் (Missing Person ) என்ற நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்ட படைப்பு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 2425 பிரதிகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு இருந்தன. இவர் நோபல் பரிசு பெறுகிறார் என்பது தெரிந்த பின்னரே யேல் பல்கலைக்கழகம் இவரது பிற மூன்று புதினங்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து வெளியிட்டது.

ஃபெனோன் பரிசு மற்றும் ரோஜர் நிமியர் பரிசு பெற்ற இவரது முதல் புதினத்திலேயே இவர், கடந்த காலம் எப்படி நம்மைச் சுண்டி இழுக்கிறது என்றும் காணாமல் போகும் மிரட்சி, நீதி நெறிகளின் எல்லைகள் மங்கிப் போதல் மற்றும் ஆன்மாவின் இருட்டுப் பகுதி ஆகியவை பற்றியும் எழுதி உள்ளார்.

தாரகையின் இருப்பிடம் (The place of the Star) எனும் அவரது படைப்பு ஜெர்மனியின் தென்மேற்கு வானொலியின் சிறந்தவை பட்டியல் விருதினைப் பெற்றது. அணுகுண்டு வெடிப்புப் பேரிடருக்குப் பின் வந்த படைப்புகளில் மிகச் சிறந்தது என்று பாராட்டப் பெற்று இந்தப் பரிசு அவருக்கு அளிக்கப்பட்டது.. இந்தப் படைப்பே ஆகஸ்டு 2015இல் அவரது பிற இரு போர்க்காலப் புதினங்களுடன் சேர்த்து 1973இல் ஆக்கிரமிப்பு என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.. லூயிஸ் மாலே என்பவர் இயக்கிய திரைப்படமாகிய லூசியன் லா கோம்ப் திரைக்கதைக்கு இணை ஆசிரியராகவும் இவர் பணி செய்து உள்ளார்.

மோடியானோவின் புதினங்கள் அனைத்தும் கடந்தகாலச் சுவட்டினில் வாழ்வின் சாட்சியத்தைத் தேடுவதாகவும், அடையாளமெனும் புதிரில் ஆழமாய் அமிழ்ந்து கிடப்பதாயும் சித்தரிக்கப்பட்டுள்ளன. சொந்த நாடு அவமானமும் அவலமும் மிக்கதாய் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தபோது, அவரது சொந்த தந்தையார், இருள் உலகின் நிழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தார் எனக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு புதினத்திலும் இந்தச் சூழலில் கதாபாத்திரங்களை உலவவிட்டுத் தான் வாழ்ந்த சமூகத்தை உயிரோடும் சதையோடும் வாசகர் கண் முன் நடமாட வைத்து உள்ளார்.. “ஒவ்வொரு புதினத்திலும் நான் இந்த நிகழ்வுகளைப் புகுத்துகிறேன். ஆயினும் அவை அனைத்தும் முடிந்து விடவில்லை என்பதால் மீளவும் சிறுசிறு விட்டுப்போன விபரங்களை, என்னுள், என் அங்கமாக விளங்குபவற்றை அடுத்து அடுத்து எழுதும் புதினங்களில் சேர்த்து விடுகிறேன்” என அவரே கூறுகிறார். முடிவில் “நாம் எங்கு எந்த நேரத்தில் பிறந்தோம் என்பதே நம் வாழ்வைத் தீர்மானிக்கிறது” என்ற பேருண்மையையும் கூறுகின்றார். இதனால் அவர் பிறந்த நகரமாகிய பாரீசைப் பற்றியும், அதன் தெருக்கள், அதன் மக்கள், அவர்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றியே எழுதுகின்றார்.

காணாமல் போனவர் எனும் புதினத்தில் கதாநாயகன் ஞாபக மறதி நோயினால் அவதியுறுபவர், தன் கடந்த காலத்தை இணைத்துப் பார்க்க எண்ணிப் போலினீசியாவிலிருந்து ரோமுக்குப் பயணம் மேற்கொள்கிறார். இதில், நாம் வாழும் உலகினில் மணலில் காலடிச் சுவடுகள் எப்படி சிறிது நேரம் மட்டும் தங்கிநிற்குமோ அப்படித்தான் இந்த உலகின் முடிவில்லாத தேடலாய் இருப்பது வாழ்வின் அடையாளங்களைக் காண முயல்வது எனக் கூறுகின்றார்.

இருட்டிலிருந்து (Out of the Dark) என்ற புதினத்தில் 1960களில் பாரீஸ் நகரில் மிகவும் துடிப்புள்ள ஒரு பெண்ணுடனான தனது நிழற்காதலை இப்புதினத்தின் கதை சொல்லி நினைவு கொண்டு விவரிப்பதுபோல் அமைத்துள்ளார். பதினைந்து ஆண்டுகள் கழிந்து பிரிந்தவர்கள் மீளச் சந்திக்கும்போது முதலில் அவள் தனது பெயரை மாற்றி வைத்துக்கொண்டு அது தான் அல்ல என மறுப்பதுடன் தனக்கு அப்படிப்பட்ட காதலும் இல்லை என மறுக்கிறாள். இது, போருக்குப் பின் இலண்டன் மாநகரில் வாழ்ந்த பீட்டர் ராக்மான் மற்றும் எமில் சவுந்தரா எனும் இருவர் இப்புதினத்தின் கதை சொல்லியை நண்பராக்கிக் கொண்டு சொல்லும் உண்மை வாழ்க்கை ஆகும். இதில் எது உண்மை எது புனைவு என்றே கண்டுபிடிக்க முடியாதவாறு மோடியானோவின் எழுத்துக்கள் இரங்கற்பா போன்ற தனி முத்திரையைப் பதிக்கின்றன.

கிழக்கு ஐரோப்பிய யூத வந்தேறிப் பெற்றோரின் பதினைந்து வயதுப் பெண் ஆகிய டோரா ப்ரூடர், (The Search Warrant ) தனக்கு ஒளிந்துகொள்ளவும் பாதுகாப்பும் அளித்த கன்னியர் மடத்திலிருந்து தப்பி வந்தவர், இறுதியில் ஆஷ்விசுக்கு நாடு கடத்தப்படுகிறார். இந்தப் புதினம், சுய சரிதை, பிறர் சரிதை, துப்பறியும் புதினம் போன்ற அனைத்து வகைமைகளின் கதம்பமாக உருவாக்கப்பட்டுள்ளது.. இதில் நினைவு என்பதே மையச் சிந்தனையாக அமைந்துவிட்டது. இப்புதினத்தில் ஆரம்பத்திலேயே மோடியானோ, பாரீஸ் சுவா எனும் பிரெஞ்சுச் செய்தித்தாளின் டிசம்பர் 1941ஆம் ஆண்டில் தலைப்புச் செய்தியாகக் காணாமல் போனவர் வரிசையில் இந்தப் பெயரைக் கண்டதாகவும் அந்தப் பெயர் மீது தனக்கு திடீர் ஆர்வம் ஏற்பட்டது எனவும் கூறுகிறார். கடந்த காலம் மீதான தனது கட்டுக்கு அடங்கா ஆர்வத்தினால் அவர், காணாமற் போனவர்கள் வரிசைப் பட்டியலில் இருந்த முகவரியைத் தேடிச் சென்றதாகவும் அங்கிருந்து தனது நினைவுகளின் தேடல் ஆராய்ச்சியைத் தொடர்ந்ததாகவும் கூறுகிறார். செய்தித்தாள் துணுக்குச் செய்திகள், தெளிவற்ற சாட்சியங்கள், பழைய டெலிபோன் டைரக்டரி மற்றும் நகரத்திற்குப் புறம்பே வாழும் புற மனிதர்களைத் தேடிச் சென்று கிடைத்தவற்றை ஒருங்கிணைத்து ஒரு படைப்பாக ஆக்கினேன் என்று கூறுகிறார். டோரா ப்ரூடரைப் பற்றிக் கூறும்போது, அவள் காலை நேரங்களை எப்படிச் செலவழித்தாள், எங்கு மறைந்து இருந்தாள், முதலில் தப்பி ஓடியபோது குளிர் காலத்தில் எவர் துணையுடன் அவள் இருந்தாள், பின்னர் இரண்டாம் முறை தப்பி ஓடியபோது வசந்த காலத்தில் சில வாரங்களில் எப்படி எவருடன் இருந்தாள் என்பது பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது. அது அவளது இரகசியம் என்கிறார். இதனாலேயே மோடியானோவின் இரவு நடமாட்டங்கள் (Night Moves) உள்ளிட்ட புதினங்களைப் பரித்தியாகம் மிக்க பரிதாபமான திகில் புதினங்கள் என்று விமர்சனம் செய்கின்றனர்.

டோரா ப்ரூடரை உயிர்ப்பிக்க எண்ணிய இவரது ஆசையை ரிகௌட் எனும் பாத்திரம் வாயிலாக உருக் கொடுக்கிறார். இந்தப் பாத்திரம் ஆக்கிரமிக்கப்பட்ட பாரீஸ் நகரத்தில் இருந்து இங்ரிட் டெயர்சன் எனும் யூதப் பெண்ணுடன் சேர்ந்து ஓடி விடுவதாகவும் பிரெஞ்சுக் காவல் துறையிடமிருந்து அவர்கட்குப் பாதுகாப்பு ரிகௌட் அளிப்பதாகவும், அவள் நிம்மதியாகத் தூங்குவதைக் கண்காணிப்பதாகவும் அமைத்து உள்ளார்.

1960களில் இருந்த பாரிஸ் நகரினைக் கதைக்களமாகக் கொண்ட Dans le café de la jeunesse perdue எனும் புதினத்தில் லூக்கி எனும் இளம்பெண் குறித்தும், சில நபர்களுக்கும் ஒரு நிழல் உலகத் துப்பறிவாளர்க்கும் அவள் என்ன

செய்கிறாள், அவளுக்கு என்ன ஆயிற்று என்பதே கேள்விக்குறியாக இருப்பது பற்றிய ஆர்வத்தைத் தூண்டும்படி அமைத்த கதை ஆகும். இப்புதினத்தின் கடைசிப் பக்கத்தில் அவள் சன்னலில் இருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டாள் எனக் கதை முடிக்கப்பட்டு உள்ளது. புவியியல்ரீதியாகப் பலவாறு விபரங்கள் அளிக்கப்பட்டு இருப்பினும் இந்தப் புதினத்தில், எங்கு, எப்போது இவை நிகழ்ந்தன என்ற தெளிவில்லாத நிலையே வாசகர்கட்கு இந்தப் புதினம் ஊட்டுகிறது. முதன்முறையாகப் பலவகைக் கதாபாத்திரங்கள் அந்தப் பெண்ணைப் பற்றி அவர்கள் கண்ணோட்டத்தில் அவர்கட்குத் தெரிந்ததைக் கூறுவதாகக் கதையை நகர்த்தி உள்ளார். ஐந்து அத்தியாயங்கள் கொண்ட இப்புதினத்தில் மூன்றாவது அத்தியாயத்தில் ஆசிரியரே, அவளது வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள் எனப் பலவற்றைக் கூறினாலும் அவளைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. உறுதியாக இல்லாமல், பலவீனமாக ஆட்டங் காணும் அடித்தளங்களைக் கொண்ட நிகழ்வுகளின் கோர்வையாக இப்புதினம் சமைக்கப்பட்டு இருப்பினும், ஆசிரியர் இதில் என்ன சொல்கிறார் என்பது இறுதிவரை பிடிபடாமலே போகிறது.

மோடியானோவின் 26ஆவது புத்தகம் தொடுவானம் ( L'Horizon - 2011). ஷான் பாஸ்மன் எனும் ஒடிசலான மனிதன் தனது அன்னையின் ஆவி தன்னைத் துரத்துவதாக எண்ணிக்கொண்டு இருப்பவர், தனது இளமைக்கால நினைவுகளிலும் தாம் இழந்த சொந்தங்களின் நினைவுகளிலுமே வாழ்கிறார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில் அவர் சந்தித்த அவரது துடிப்பான காதலி ஆகிய மார்கரெட் ல காஸ் பற்றியும் தன்னையும் அவளையும் வேதாளம் துரத்துவதான மிரட்சியில் இப்போது அனைவராலும் மறக்கடிக்கப்பட்டுவிட்ட பாரீசின் வளைந்தோடும் வீதிகளில் தனிமையில் சுற்றிச்சுற்றி ஓடியதையும் நினைவுகூர்கிறார். ஒருநாள், சொல்லாமல் கொள்ளாமல் மார்கரெட் ஒரு ரயிலில் ஏறி மாயமாகிப் போய் விடுகிறாள்ஆயினும் பாஸ்மனின் நினைவில் இருந்துகொண்டே இருக்கிறாள். இந்தப் புதினத்தில் மோடியானோவின் முத்திரையை உச்சமாகப் பதிப்பித்து இருக்க, அவரது சுய தேடலும் ஒரு முக்கியத் திருப்புமுனையை அடைந்துள்ளது. போரில் நிர்மூலமாக்கப்பட்டுவிட்ட பிறகு புதிதாகக் கட்டப்பட்ட பெர்லின் நகரத்தை "இந்த நகருக்கு எனது வயது" எனத் தன் அழுத்தமான நினைவு மேகத்தை விரித்துப் போர்த்துகிறார். 'இந்த நகரின் நீளமான, சரியாக வடிவமைக்கப்பட்ட அவென்யூக்கள், வரலாற்றின் குறியீடுகளை இன்னமும் தாங்கி உள்ளன. ஆயினும் அதனைச் சரியாக நோக்கினால் கான்க்ரீட்டுக்கு அடியில் பழங்கால வெற்று நிலங்களைக் காட்டிவிட முடியும். இவையே எனது தலைமுறையின் வேர்கள்' எனக் கூறுகின்றார். பெஸ்ஸான் எனும் விமர்சகர், இத்தகைய குறியீடான வேர்களே, பிரெஞ்சு இலக்கியத்திற்குக் காலப் போக்கில் அற்புத மரம் ஒன்றை வழங்கி உள்ளதென இவரைப் போற்றிக் குறிப்பிடுகிறார்.

மோடியானோவின் படைப்புகளில் சில ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு உள்ளன. அவற்றுள் சுற்றுச் சாலைகள் (Ring Roads : A Novel, 1974), வில்லா ட்ரிஸ்டே (1975; Villa Triste, 1977), வன்மத்தின் சுவடு (1984; A Trace of Malice, 1988), தேன் நிலவு (1990; Honeymoon, 1992) ஆகியவை முக்கியமானவை ஆகும்.

இவரது படைப்புகளை முழுதும் படித்தவர்கள் வாயிலாக நாம் அறிவது என்னவெனில், அவரது கதைசொல்லிகள், பாரீசின் வீதிகளில் தொலைந்து போன நபர்கள், மறைந்துவிட்ட காலடி ஓசைகளின் எதிரொலிகள் ஆகியவற்றையே பெரும்பாலும் தேடிக்கொண்டு இருக்கின்றனர். கிட்டத்தட்ட முப்பது புதினங்களைப் படைக்கையில், மோடியானோ, கதைசொல்லிகளாக, துப்பறிவாளர்கள், அகதிகள், ஞாபக மறதி கொண்டவர்கள், தொலைந்துபோன பதின்ம வயதினர், அனாதைகள், நாடோடிகள் ஆகியோர் பெயரறியாத நகரங்களின் எல்லைகளில் வாழ்ந்து வருவதாகவும் அவர்களை வேட்டையாடியும் பேய் பிடித்தது போல் பிடித்தும் வந்து நினைவு எனும் ஒடிசலான வளைவினுள் வாழ வைத்தும் இருக்கிறார்.

தொலைந்துபோன நாய்கள்: இவரது புதினங்களில் பலவற்றிலும் தொலைந்துபோன அல்லது கைவிடப்பட்ட நாய்கள் வரக் காணலாம். மோடியானோவின் சொந்த அன்னையே தனது நாயாகிய சோவ் சோவ் தன்னைச் சட்டை செய்யாதது போலவே பின்னாளில் அவரையும் சட்டை செய்யாமல் விட்டுவிடுகிறார். அந்த நாய் சன்னலில் இருந்து குதித்துத் தன் உயிரை மாய்த்துக்கொள்கிறது. பொருத்தமாகப் பெயர் வைக்கப்பட்ட குடும்ப வரலாறு (Un pedigree, 2005; Pedigree, 2015) எனும் படைப்பு, ஆசிரியர் ஆகிய மோடியானோவை, அன்னையால் கைவிடப்பட்டுச் சொந்தக்காரர்கள், நண்பர்கள் வசம் தள்ளப்பட்டு, போர்டிங் பள்ளிகளில் வளர்ந்தபோதும் அதைப் பற்றிக் கவலையே கொள்ளாத தந்தையைக் கொண்டவர் என்று அவரையே 'துக்கப்படும் நாய்' எனச் சித்தரிக்கிறது. In La petite bijou (2001, untranslated) எனும் படைப்பினில், கதை சொல்லுபவர் ஒரு அழகிய சிறுபெண். அவர் கழுத்தில் ஒரு குறியினை மாட்டி இருப்பார். அவரது அன்னையால் அப்பெண் ஒரு ரயிலில் தொலைக்கப்பட்டவர். அவரது செல்லப் பிராணி ஆகிய பூடில் தொலைந்துபோனதைப் போலவே இவள் தொலைந்துபோவதும் காட்டப்பட்டு உள்ளது. கேடு கெட்ட பெற்றோர்,

தொலைந்துபோன செல்ல வளர்ப்புப் பிராணிகள், சுற்றித் திரியும் சிறுவர்கள் ஆகியோர் இவரது புதினங்களில் வந்து போகின்றனர். இவர்கட்குப் பிரதிபலன் ஏதும் எதிர்பார்க்காமல் சிறிது காலமாவது அடைக்கலம் கொடுக்கும் கருணை உள்ளம் மிக்க நல்லவர்களும் உள்ளனர் என்பதும் வெகுவாகவே விவரிக்கப்பட்டு உள்ளது. மனித அவலங்களையும் அவ்வப்போது அதைத் துடைக்க எத்தனிக்கும் சிலரின் சொற்ப மனிதநேயத்தையும் புரிந்துகொண்டு இவர் படைப்புகள் வலம் வருகின்றன.

தளவாடங்களால் நிரப்பப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள்: மோடியானோவின் பாரீஸ் நகரம், வருவோரும் போவோரும் நிறைந்ததாய், வெற்று ஓட்டல் அறைகள், வாடகைக் குடியிருப்புகள், தளவாடங்களால் நிரப்பப்பட்ட அடுக்கு மாடிக் குடியிருப்புகள், அவற்றில் குடியிருப்போரின் பிடிபடாத நெஞ்சத்தைப் போன்று வெறுமையாக உள்ளன என்றே காட்டியுள்ளார். இருட்டிலிருந்து எனும் புதினத்தில் வரும் பீட்டர் ராக்மான் எனும் சேரி நிலக்கிழார், ஒரு வரலாற்று நபர் என்பது முரண்பாடான அம்சமாக உள்ளது.. போலந்தைச் சேர்ந்த யூதராகிய ராக்மான், நாஜி மற்றும் சோவியத் பாசறைகளில் இருந்து தப்பியவர். மோடியானோவின் புதினங்களில் இந்த ராக்மான், தனது அடிமை வாழ்வின் நினைவுகளிலேயே வாழ்பவர். அவற்றிலிருந்து தப்பிக்க, குப்பைகள் நடுவிலும், இடிபாடுகளின் இடையிலும் போட்டோ எடுத்துத் தன் மன வேதனையைத் தணித்துக்கொள்கிறார். “கடந்து செல்ல மறுக்கும் கடந்த காலம்” என ஹென்றி ரூசோ எனும் அறிஞர் சொல்வது போல், மிக வலிமை வாய்ந்தவர்களும் இந்தக் கொடூர நினைவுப் பிடியினின்று தப்பிக்க இயலுவது இல்லை.

குறி சொல்லுவோர், குப்பையைக் கிளறி ஆவணப்படுத்தி விடும் குப்பைப் பொறுக்குபவர் எனும் அடையாளத்தோடு, கடந்த காலத்தின் வன்மையான நிகழ்வுகளில் இருந்து வரப்போவது எது எனக் கணித்துக் குறி சொல்லும் திறனும் இவருக்கு உள்ளது எனக் கூறிவிடலாம். இவரது கற்பனைத் திறத்தாலும், மிக நுணுக்கமாக விபரங்களைச் சேர்த்துத் தொகுத்து அளிக்க வேண்டும் எனும் பிடிவாதக் குணத்தாலும் எதிர் வர இருப்பதை அறிந்து சொல்லும் வரத்தாலும் அல்லது ஒரு நிகழ்வு இனிமேல் நிகழப்போவது இல்லை, ஒருவர் உயிருடன் இல்லை என்பதை வெட்ட வெளிச்சம் ஆக்குகிறார். டோரா ப்ரூடரில், உதாரணமாக, விக்டர் ஹ்யூகோ எனும் நாவலாசிரியர் கற்பனையில் உருவாக்கிய ஒரு நகர்ப்புறம் எண்பது ஆண்டுகள் கழித்து உண்மையிலேயே உருவாகி இருப்பதை ஆச்சரியமுடன் விதந்து கூறுகிறார். “விக்டர் ஹ்யூகோ படைப்பாகிய Les misérables (பரிதாபத்திற்குரியவர்கள்)இல் குற்றவாளிகள் ஆகிய ஜான் வா ஜான் மற்றும் கொசெ ஆகியோர் இன்ஸ்பெக்டர் ஜாவே பிடியினின்று தப்புவதற்கு உண்மையாகவே இருக்கின்ற தெருக்கள் வழியாக ஓடி, திடீரெனப் புனைவான ஓர் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்து கற்பனையான ஒரு கன்னியர் மடத்தில் அடைக்கலம் ஆகின்றனர்.. இந்தக் கான்வெண்ட் இருக்கும் அதே இடத்தில்தான் டோரா ப்ரூடர் இருந்த கத்தோலிக்க போர்டிங் பள்ளி இருப்பதாகவும், ஆக்கிரமிப்புக் காலத்தில் ஆன்டி செமிடிச் சட்டம் நிறைவேறியபோது டோராவின் பெற்றோர் அவளை ஒளித்துவைத்த தாகவும் கதையைப் பின்னி உள்ளார். வரலாறாகவும், ஆவணமாகவும், புகைப்படம் போன்ற மோடியா னோவின் ஞாபகங்களில் அவரால் கடந்த காலத்தின் துடிப்புகள் வாயிலாக எதிர்காலத்தில் வர இருப்பதை அறிய முடிகிறது என்பதை அவ்வப்போது நிலைநிறுத்தி இருக்கிறார். மோடியானோவின் கூற்றுப்படி, ஞாபகம் / நினைவு என்பது தானே உறுதி இன்றி இருக்கிறது. ஏனெனில் அது ஞாபக மறதிக்கும், சூன்யத்திற்கும் இடையில் உழன்று கொண்டு இருக்கிறது. இந்த அடுக்கு, இந்த சூன்ய மேகம் அனைத்தையும் மறைத்துவிடுவதால், நம்மால் கடந்த காலத்தின் சிறு துண்டுகளையே பொறுக்கி எடுத்து, இணைப்பு இல்லாத சுவடுகளை இணைத்து ஓடிக்கொண்டே இருக்கும் பிடிபடாத மனித விதிகளைப் புரிந்துகொள்ள முடியும்” என்கிறார்.

இவர் தனது படைப்புகளில் தமது முந்தைய ஆக்கங்களின் ஒரு பக்கத்தை அப்படியே கொணர்ந்து அந்தப் புதினத்தின் அந்த நிகழ்வு வரலாறு நிகழ்வு போல் எண்ணச் செய்து அதே சூழலில் அதே தெருக்களில் இன்னொரு புதினத்தின் கதா பாத்திரங்களைக் கடந்து போகச் செய்யும் புதிய உத்தியை வெகு லாகவமாகக் கையாண்டுள்ளார். தேன் நிலவு எனும் புதினத்தின் கதாபாத்திரங்கள், டோரா ப்ரூடர் தங்கி இருந்த அதே கான்வெண்ட் வழியாக பாரீஸ் நகர் செல்வதாகச் சொல்வதன் மூலம் கடந்த காலத் தாளில் நிகழ்கால நாட்குறிப்பினைப் பதியும் செயல் மூலம் கற்பனையை நிஜமாக்கிக் காட்டும் வித்தகர் ஆகி நிற்கிறார்.

இறுதியாக, இலக்கிய விருதுகள் சாதாரணமாக அளிக்கப்படுபவை அல்ல. இந்தக் கட்டுரையின் முன்னுரையில் கூறியுள்ளபடி, ஒரு அழகிய பெண்ணுக்காகப் பலர் சுற்றி வருவதும், அவளுக்காக மோதுவதும் இவற்றை எல்லாம் ஒதுங்கி நின்று சண்டையைப் பார்த்துக்கொண்டு சுவரில் சாய்ந்து நின்ற ஒருவன் பெண்ணைக் கொண்டு போனதுபோல என்று சொல்லும் ‘மண்ணில் சாய்ந்து நின்றவன் பெண்ணையும் கொண்டுபோனான்’ என்ற மலையாளப் பழமொழியை நினைவுபடுத்தும் வகையில்தான் அமைகின்றன. தரம் குறைந்ததோ, தரம் மிக்கதோ, படைப்பு எனும் உழைப்பிற்கான பரிசே இவ்விருது எனும்போது விருது பெற்றவரை நாம் வாழ்த்தியே தீர வேண்டும். ■

ஓவியங்கள் : கொ.வடிவேல்

1

நானொரு சதுரவாசி...
சுடும் வெயிலுக்குள் நனைகிறேன்
பனித் திவலைகள்
விரல்களின் மேல் நகைக்கிறது
ஆஸ்திரிய செங்கழுத்து நாரைகளை
வானத்தில் நகர்த்தி
நாதங்கி துருவேறிய நுழைவழி
கதவுக்குப் பக்கத்தில்
திராட்சைத் தோட்டம் காணக் கிடக்கிறது
நரிகள் புளிப்புச் சுவை விரும்பிகள்
பக்கத்தில் பச்சை நரம்புப் பாம்பு
நேற்றைய காலைக் கனவில் வந்தது
நிஜத்தில் அதன் நிறம் அந்தப் பச்சையில்லை
எனக்கு விஷம் தருகிறது பருகிப் பார்க்க
கண்கள் திறவாப் போதையில்
மலையின் அடியில்
தங்கிடம் அமைத்துப் புல்லாங்குழல்
இசைத்தேன்
வெனீஸ் நகரத் தேவாலயத்தில் ஓவியம்
வரைந்த நூற்றாண்டுக் கிழவர்
வட்டம் வரையச் சொன்னார்
நான் சதுரம் வரைந்தேன்
மூடன் என்றார் நரைத்த தாடி அசைய
என் வட்டம் சதுரமாகத்தானிருக்குமென
அவரிடம் சொல்ல
நான் பிரயத்தனப்படவில்லை.

● சாமான்யன்

என் பக்கம் திரும்பிய கடல்
ஆழப் பார்க்கிறது என்னை
திசைகள் வெடித்துச் சிதறுவதுபோல
ஆர்ப்பரிக்கும் அலைகளை இப்போது நான்
பார்ப்பதற்கில்லை
ஒரு பிரமாண்டத்தின் பேருரு மீது தாழ இறங்கும்
மேகங்களையும்கூட...
கடல் என்னைப் பார்ப்பதுபோல
நானும் கடலைப் பார்க்கிறேன்
பார்வையின் இடைவெளிகளில்
நிரம்பியும் கலைந்தும்
இடையூறு செய்கின்றன கடற் பறவைகள்
இரண்டொரு மழைச்சொட்டுகள் நிலம் உதிர்ந்த
வேளையில்...
மூர்க்கமாக மோதிக்கொண்ட பறவைகளின்
சிறகுகள்
காற்றளாவும் வேளையில்....
கடலின் தனிமை எனக்குப் புலப்படுகிறது
சட்டென்று திரும்பிய நான் கடலின் எதிர்திசையில்
நடக்கத் தொடங்குகிறேன்
ஒரு அபலைத் தனிமை இங்குமங்குமாக ஓடி
ஒளிந்துகொள்ளவியலாமற் சுருண்டுவிழுகிறது
மணல்வெளியில்...!

● சுஜய் ரகு



ஓவியங்கள் : கொ.வடிவேல்

## பூக்களை விற்கும் கனவுகள்*

மாலை அணில்
உண்டு மீண்ட
எச்சத்தின் அளவுதான்
இக்கனவு...
உள்ளே வா
இன்னும் மாற்றியமைக்காத குறுகிய
நுழைவாசல்தான்
கண்ணீரில் மூழ்காத நீள் குகையிது...
தடுக்கிவிழாமலிருக்க
நீ விட்டுச் சென்ற என்னுயிரை
அங்கேதான் நிறுத்தியிருக்கிறேன்
வெளிச்சமாய்
அதன் நீலச் சுவற்றில்
மாட்டப்பட்ட
ஒரே கிளையின் ஞாபகங்கள்... சிலவற்றில் நீ
சிலவற்றில் நான்
பலவற்றில் நாம்... மௌனமாய்
இன்றும் மௌனமாய் வா...
களிப்போடு நாட்டியமிட்டுக் களைத்த
நாளங்கள்...
உறங்கும் அவை
விழித்துக்கொண்டால்
உதிர்ந்துவிட்ட எனக்குப் பதிலாய்
உன்னுயிரின்
இறகுகளைக் கேட்கும்
நான் ஒளிந்துகொள்ளவும்
தனிமையைக் கொல்லவும்
உள்ளே
தென்றலில் ஊஞ்சலாடும் வண்ணங்களின்
மெல்லிய சிறகசைப்பு
உனக்கு அதிர்வாகத் தோன்றலாம்...
இம்முறையாவது பொறுத்துக்கொள்...
உன்னை வரவேற்க
வேறெதுவும் இல்லை என் கனவில்...

● ம.கனகராஜன்

இது எனக்கான உலகம்
இதற்குள் யாரும் நுழைந்துவிடாதீர்கள்
நல்லவன் என்ற தேடலில்
நிச்சயம் நான் கிடைக்க மாட்டேன்
நிஜத்தில் நான் பிதற்றுவதை
நிஜமென்று நம்பிவிடாதீர்கள்
பிஞ்சைப் புணர்ந்தவன் பின்புலத்தில்
எனக்கும் ஒரு தொடர்பிருக்கலாம்
நஞ்சை மருந்தென்றவனுடன்
நானுமோர் விலைபேசியிருக்கலாம்
நாட்டை விற்றவனுக்கு எனது வாக்கும்
ஒரு காரணமாக இருந்திருக்கலாம்
எனது வாகனத்தின் வேகத்திலும்
ஓசோன் துளைப்பட்டிருக்கலாம்
நான் தூக்கி வீசிய நெகிழிப்பையில்
எனக்கான கடைசித்துளி உயிர் நீர்
தடைபட்டு இருக்கலாம்
நான் அமரும் நாற்காலியின் அடியில்
ஒரு மரத்தின் நிழல் மறைந்திருக்கலாம்
உங்கள் கண்களில் கருணையைச்
சுரக்கவைக்க மட்டுமே எனக்கு அந்த
பசுந்தோல் தேவைப்பட்டிருக்கும்
இதில் நான் என்பது நான் மட்டும் அல்ல
நான் என்பதை நான் என்றே
வாசிக்கும் நீங்களும்தான்.

● சுரேஷ்பாபு ராசேந்திரன் ■



காலம் கடந்த காவியம்

சிறுகதைத் தொடர்ச்சி

• லா.ச. ராமாமிர்தம்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# பாற்கடல்



அம்மா திடீரென்று என் பாதங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அவை மேல் குனிந்தார். அவர் தோளும் உடலும் அலைச் சுழல்கள் போல் விதிர்ந்தன. உயர்ந்த வெண் பட்டுப்போல் அவள் கூந்தல் பளபளத்தது. என் பாதங்களின் மேல் இரு அனல் சொட்டுகள் உதிர்ந்து பொரிந்தன.

“அம்மா! அம்மா!'' என்று அழுகை வந்துவிட்டது. அதுவே ஒட்டுவாரொட்டி. எனக்கும் தாங்கிக்கிற மனசு இல்லை.

“ஒண்ணுமில்லேடி குட்டி. பயப்படாதே.” அம்மா மூக்கை உறிஞ்சிக்கொண்டு கண்ணைத் துடைத்துக்கொண்டார்.

“எனக்கு என்னவோ நினைப்பு வந்தது. எனக்கு ஒரு பெண் இருந்தாள். முகம் உடல்வாகு எல்லாம் உன் அச்சுதான். இப்போ இருந்தால் உன் வயசுதான் இருப்பாள். என் நெஞ்சை அறிஞ்சவள் அவள்தான். மூணு நாள் ஜுரம். முதல் நாள் மூடிய கண்ணை அப்புறம் திறக்கவேயில்லை. மூளையில் கபம் தங்கிவிட்டதாம். இப்போத்தான் காலத்திற்கேற்ப வியாதிகள் எல்லாம் புதுப்புது தினுசாய் வரதே? பின்னால் வந்த விபத்தில் அவளை நான் மறந்துவிட்டேன் என்று நினைத்தேன். ஆனால் இப்போத்தான் தெரியறது. உண்மையில் எதுவுமே மறப்பதில்லை. எதுவுமே மறப்பதற்கில்லை. நல்லதோ கெடுதலோ அது அது, சாப்பாட்டின் சத்து ரத்தத்துடன் கலந்துவிடுவதுபோல், உடலிலேயே கலந்து விடுகிறது. நாம் மறந்துவிட்டோம் என்று மனப்பால் குடிக்கையில், ‘அடி முட்டாளே! இதோ இருக்கிறேன், பார்!’ என்று தலைதூக்கிக் காண்பிக்கிறது. உண்மையில் அதுவே போகப் போக நம்மைத் தாக்கும் மனோசக்தியாய்க்கூட விளங்குகிறது. இல்லாவிட்டால் என் மாமியாரும்



நானும், எங்களுக்கு நேர்ந்ததெல்லாம் நேர்ந்தபின் இன்னும் ஏன் இந்த உலகத்தில் நீடிச்சு இருந்திண்டிருக்கணும்...?"

இதைச் சொல்லிவிட்டு அம்மா அப்புறம் பேசவில்லை. தன்னை அமுக்கிய ஒரு பெரும் பாரத்தை உதறித் தள்ளினாற்போல் ஒரு பெருமூச்செறிந்தார்; அவ்வளவுதான். என் பாதங்களில் மருதாணி இடுவதில் முனைந்தார். ஆனால் அவர் எனக்கு இடவில்லை. என் உருவத்தில் அவர் கண்ட தன் இறந்த பெண்ணின் பாவனைக்கும் இடவில்லை; எங்கள் இருவரையும் தாண்டி எங்களுக்குப் பொதுவாய் இருந்த இளமைக்கு மருதாணியிட்டு வழிபட்டுக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்துக்கு அந்த இளமையின் சின்னமாய்த்தான் அவருக்கு நான் விளங்கினேன்; எனக்கு அப்படித்தான் தோன்றிற்று. இப்படியெல்லாம் நினைக்கவும் எனக்குப் பிடிக்கும். அதனால்தான் எனக்கு அப்படித் தோன்றிற்றோ என்னவோ?

இந்த வீட்டில் சில விஷயங்கள் வெகு அழகாயிருக்கின்றன. இங்கே நாலு சந்ததிகள் வாழ்கின்றன. உங்கள் பாட்டி, பிறகு அம்மா - அப்பா, பிறகு நாங்கள் - நீங்கள், பிறகு உங்கள் அண்ணன் அண்ணிமார்களின் குழந்தைகள். ஆனால் இங்கே எல்லா உயிரினங்களின் ஒருமையின் வழிபாடு இருக்கிறது. இங்கே பூஜை புனஸ்காரம் இல்லை. ஆனால் சில சமயங்களில், இந்த வீடு கோவிலாகவே தோன்றுகிறது. மலைக்கோட்டை மேல் உச்சிப் பிள்ளையார் எழுந்தருளியிருப்பது போல் பாட்டி மூன்றா மாடியில் எழுந்தருளியிருக்கிறார். அங்கிருந்து அவர் செலுத்தும் ஆட்சி எங்களுக்குத் தெரியவில்லை. பாட்டிக்குத் தொந்தரவு கொடுக்கலாகாது எனக் குழந்தைகளுக்கு மூன்றா மாடிக்கு அனுமதி கிடையாது. அது அம்மா தவிர வேறு யாரும் அண்டக்கூடாத ப்ரகாரம். ஆறுகால பூஜைபோல், அம்மா பாரி சரீரத்தைத் தூக்கிக்கொண்டு, குறைந்தது நாளைக்கு ஆறு தடவையாவது ஏறி இறங்குகிறார். பாட்டிக்கு ஆகாரம் தனியாய் அம்மாவேதான் சமைக்கிறார். அது கஞ்சியா, கூழா, புனர்ப்பகமா, சாதமா எதுவுமே எங்களுக்குச் சரியாத் தெரியாது. அதை ஒரு தட்டிலே, நிவேதனம் மாதிரி, இலையைப் போட்டு மூடித் தாங்கிக்கொண்டு, முகத்திலும்

காலிலும் பளிச்சென பற்றிய மஞ்சளுடன், நெற்றியில் பதக்கம் போல் குங்குமத்துடனும், ஈரம்காயத் தளர முடிந்த கூந்தலில் சாமந்திக் கொத்துடனும் அம்மா மாடியேறுகையில் எனக்கு உடல் புல்லரிக்கிறது.

சில சமயங்களில் அம்மா, அப்பா இரண்டு பேருமே மேலே போய் ஒன்றாய்க் கீழிறங்கி வருகிறார்கள். ஸ்வாமி தரிசனம் பண்ணி வருவது போல், ஒரு சமயம் அவர்கள் அப்படி சேர்ந்து வருகையில், 'சடக்'கென்று அவர்கள் காலடியில் விழுந்து நமஸ்காரம் பண்ணிவிட்டேன். அம்மா முகத்தில் ஒரு சிறு வியப்பும் கருணையும் ததும்புகின்றன. அப்பாவின் கன்னங்களில் இறுகிய கடினம்கூடச் சற்று நெகிழ்கிறது.

"என்னடி குட்டீ, இப்போ என்ன விசேஷம்?"

எனக்கேத் தெரிந்தால்தானே? உணர்ச்சிதான் தொண்டையை அடைக்கிறது; வாயும் அடைச்சுப் போச்சு. கன்னங்களில் கண்ணீர் தாரைதாரையாய் வழிகிறது. அம்மா முகத்தில் புன்னகை தவழ் கின்றது. அன்புடன் என் கன்னத்தைத் தடவிவிட்டு இருவரும் மேலே நடந்து செல்கிறார்கள். அம்மா தாழ்ந்த குரலில் அப்பாவிடம் சொல்லிக்கொள்கிறார்.

"பரவாயில்லை. பெண்ணைப் பெரியவா சின்னவா மரியாதை தெரிஞ்சு வளர்த்திருக்கா."

அதனால் ஒன்றுமில்லை. என்னவோ எனக்குத் தோன்றிற்று. அவ்வளவுதான். இந்தச் சமயத்தில் இவர்களை நான் நமஸ்கரித்தால், மேலிருந்து இவர்கள் பெற்று வந்த அருளில் கொஞ்சம் ஸ்வீகரித்துக்கொள்கிறேன். சந்ததியிலிருந்து சந்ததிக்கு இறங்கி வரும் பரம்பரை அருள்.

எங்களுக்கெல்லாம் எண்ணெய்க் குளி ஆன பிறகு மாடிக்குப் போன அம்மா, வழக்கத்தை விடச் சுருக்கவே திரும்பிவருகிறார். சமாசாரம் தந்தி பறக்கிறது.

"பாட்டி கீழே வர ஆசைப்படுகிறார்."

அப்பாவும், அம்மாவும் மேலேறிச் செல்கிறார்கள். நாங்கள் எல்லோரும் சொர்க்க வாசல் தரிசனத்திற்குக் காத்திருப்பது போல் பயபக்தியுடன் மௌனமாய்க் காத்திருக்கிறோம். சட்டென நினைப்பு வந்தவனாய் ஒரு கொள்ளுப்பேர வாண்டு 'ஸ்டூலை' வைத்து மேலேறி, மாடி விளக்கின் 'ஸ்விட்சைப்' போடுகிறான்.

திடீரென மாடி வளைவில் பாட்டி தோன்றுகிறார். விமானத்தில் சுவாமியை எழுப்பினாற்போல் நாற்காலியில் அவர் இருக்க, அம்மாவும் அப்பாவும் இரு பக்கங்களிலும் நாற்காலியைப் பிடித்துக்கொண்டு வெகு ஜாக்கிரதையாய், மெதுவாய், கீழே இறங்கு கிறார்கள். பிறகு பத்திரமாய் அப்பா பாட்டியை இரு கைகளிலும் வாரித் தூக்கிக்கொண்டு போய் மனைமீது உக்காத்தி வைக்கிறார். அப்பா பிடித்துக்கொண்டிருக்க, அம்மா, பதச்சூட்டில் வெந்நீரை மொண்டு மொண்டு ஊற்றி, பாட்டி உடம்பைத் தடவினாற்போல் தேய்க்கிறார். நாங்கள் எல்லோரும் சுற்றி நின்று பார்க்கிறோம்.

இது ஆராதனை இல்லாது ஏது? ஆமாம், பாட்டியின் உடல்நிலை அடிக்கடி குளிப் பதற்கில்லை, எந்தச் சாக்கில் மாரில் சளி தாக்கி விடுமோ எனும் பயம். உத்ஸவருக்கு விசேஷ நாட்களில் மாத்திரம் அபிஷேகம் நடப்பது போல், பாட்டிக்கு, நாள், கிழமை, பண்டிகை தினம்போதுதான். சர்வ ஜாக்கிரதையாய்க் குளிப்பாட்டு நடக்கும். சற்று அழுத்தித் தேய்த்தால் எங்கே கையோடு சதை பிய்ந்து வந்துவிடுமோ எனும்படி உடல் அவ்வளவு நளினம். அந்த உடலில், மானம் வெட்கம் எனும் உணர்ச்சி விகாரங்களுக்கு எங்கே இடம் இருக்கிறது? எந்த நேரத்தில் இந்த உடல் விலங்கைக் கழற்றி எறியப் போகிறோம் என்றுதான் அந்த உயிர் காத்துக்கொண்டிருக் கிறதே! மரம் சாய்ந்துவிட்டாலும், வேர்கள் பூமியிலிருந்து கழல மாட்டேன் என்கின்றன. பாட்டி நூறு தாண்டியாச்சென்று நினைக்கிறேன். வருடங்களில் ஸ்புடத்தில், அங்கங்கள், சுக்காய் உலர்ந்து, உடலே சுண்டிய உருண்டை ஆகிவிட்டது.

பாட்டியின் உடம்பைத் துவட்டி அவர் மேல் புடவையை மாட்டி நாற்காலியில் வைத்துக் கூடத்து வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார்கள், நாங்கள் எல்லாரும் நமஸ்கரிக்கிறோம். பாட்டி மேல் கல்லைப் போல் மௌனம் இறங்கிப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. வாதத்தில் கைகால் முடங்கி நாக்கும் இழுத்துவிட்டபின், கண்கள்தாம் பேசுகின்றன. கண்களில் பஞ்சு பூத்துவிட்டாலும், குகையிலிட்ட விளக்குகள் போல, குழிகளில்



எரிகின்றன. நான் தலை குனிகையிலே எனக்குத் தோன்றுகிறது; இவர் இவரா, இதுவா? கோயிலில் நாம் வணங்கிடும் சின்னத்திற்கும், இவருக்கும் எந்த முறையில் வித்தியாசம்? கோவிலில்தான் என்ன இருக்கிறது?

“ஐயோ ஐயோ'' என ரேழி அறையிலிருந்து ஒரு கூக்குரல் கிளம்புகிறது. என்னவோ ஏதோ எனப் பதறிப்போய், எதிரோல மிட்டபடி எல்லோரும் குலுங்கக் குலுங்க ஓடுகிறோம். ‘வீல்’ என அழுதபடி குழந்தை அவன் பாட்டி மேல் வந்து விழுகிறான். “என்னடா கண்ணே?'' அம்மா அப்படியே வாரி அணைத்துக் கொண்டார். சேகர் எப்பவும் செல்லப் பேரன். இரண்டாமவரின் செல்வமில்லையா?

“பாட்டி! பாட்டி!'' பையன் ரோஸத்தில் இன்னும் விக்கிவிக்கி அழுகிறான். “அம்மா அடி அடின்னு அடிச்சுட்டா”

“அடிப்பாவி! நாளும் கிழமையு மாய் என்ன பண்ணீட்டாடா உன்னை!” அம்மாவுக்கு உண்மையி லேயே வயிறு எரிந்துபோய் விட்டது. கன்னத்தில் அஞ்சு விரலும் பதிஞ்சிருப்பதைப் பார்த்ததும்,

“காந்தீ! ஏன்டி காந்தீ!!”

ரேழியறை ஜன்னலில், காந்திமதி மன்னி உட்கார்ந் திருந்தாள். ஒரு காலைத் தொங்க விட்டு ஒரு காலைக் குத்திட்டு, அந்த முட்டி மேல் கைகளைக் கோர்த்துக்கொண்டு, கூந்தல் அவிழ்ந்து தோளில் புரள்வதுகூட அவளுக்குத் தெரியவில்லை. அவள் கண்களில் கோபக்கனல் வீசிற்று. உள் வலியில் புருவங்கள் நெரிந்து, கீழ் உதடு பிதுங்கிற்று. அம்மாவைக் கண்டதும் அவள் எழுந்திருக்கக்கூட இல்லை.

“ஐயையோ!” என் பக்கத்தில் சின்ன மன்னி நின்றுகொண்டிருந்தாள். முழங்கையைப் பிடித்துக் காதண்டை, “காந்தி மன்னிக்கு வெறி வந்திருக்கு” என்றாள்.

காந்தி மன்னிக்கு இப்படி நினைத்துக்கொண்டு, இம்மாதிரி முன்னறிக்கையில்லாது குணக்கேடு வந்துவிடும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ, ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ மூன்று நாட்களுக்குக் கதவையடைத்துக்கொண்டு விடுவாள். அன்ன ஆகாரம், குளி ஒன்றும் கிடையாது. சந்திரனை ராகு பிடிப்பது போல் பெரிய மனச்சோர்வு அவளைக் கவ்விவிடும். அப்போது அம்மா உள்பட யாரும் அவள் வழிக்குப் போகமாட்டார்கள்.

காந்தி மன்னியின் வாழ்வே தீராத் துக்கமாகி விட்டது. சின்ன மன்னி அப்புறம் என்னிடம் விவரமாய்ச் சொன்னாள். என்னால் நிஜமாகவே கேட்கவே முடியவில்லை. காதையும் பொத்திக் கொண்டு கண்ணையும் இறுக மூடிக்கொண்டு விட்டேன். அந்தக் காக்ஷியை நினைத்துப்பார்க்க முடியவில்லை. உங்கள் இரண்டாவது அண்ணா, தீபாவளிக்குச் சீனி வெடி வாங்கப் போய்ப் பட்டாசுக் கடையில் வெடி விபத்தில் மாட்டிக்கொண்டு விட்டாராமே! எந்த மஹாபாவி சிகரெட்டை அணைக்காமல் தூக்கி எறிந்தானோ, அல்ல வேறு என்ன நேர்ந்ததோ? வெடித்த வெடியில் கடைச் சாமான்கள் பனை மர உயரம் எழும்பி விழுந்தனவாமே! அண்ணாவுக்குப் பிராணன் அங்கேயே போய்விட்டதாம்.. அண்ணாவுக்கு முகமே இல்லையாம்; சில்லு சில்லாய்ப் பேந்து விட்டதாம். முகமிருந்தவிடத்தில் துணியைப் போட்டு மூடிக்கொண்டு வந்தார்களாம்.

சேகர் அப்போ வயிற்றிலே மூணு மாசமாம். இப்போ சேகருக்கு வயது ஏழா, எட்டா?

நிஜம்மா கேக்கறேன்; இந்தக் கஷ்டத்தை நீங்கள் எல்லோரும் எப்படி ஸஹிச் சிண்டிருந்தீர்கள்? அம்மாவும், அப்பாவும் எப்படி இதிலிருந்து மீண்டார்கள்? நீங்கள் எல்லோரும் முதலில் எப்படி உயிரோடிருக்கிறீர்கள்? காந்திமதி மன்னி கருகிப் போனதற்குக் கேட்பானேன்? இது நேர்வதற்கு முன்னால்,

அவள்தான் ரொம்பவும் கலகலப்பாய், எப்பவும் சிரிச்ச முகமாய் இருப்பாளாமே!

இப்போக்கூட, அந்த முகத்தின் அழகு முற்றிலும் அழியவில்லை. அவள் சீற்றம் எல்லாம் அவள் மேலேயே சாய்கையில், நெருப்பில் பொன் உருகி நெளிவது போல, தன் வேதனையின் தூய்மையில்தான் ஜ்வலிக்கிறாள். அவளுக்கு அவள் கதி நேர்ந்த பின், மற்றவர் போல் தெறித்துக்கொண்டு பிறந்தகம் போகாமல், எங்களோடு ஒருவராய், இதுவரை இங்கேயே அவள் தங்கியிருப்பதிலும் ஒரு அழகு பொலிகின்றது.

அவளை அவள் கோலத்தில் கண்டதும் அம்மாவுக்குக் கூடச் சற்றுக் குரல் தணிந்தது.

"ஏண்டி காந்தி, இன்னுமா குளிக்கல்லே? வா வா, எழுந்திரு. குழந்தையை இப்படி உடம்பு வீங்க அடிச்சிருக்கையே, இது நியாயமா?"

"நியாயமாம் நியாயம்! உலகத்தில் நியாயம் எங்கேயிருக்கு?"

காந்திமதி மன்னி குரலில் நெருப்பு கக்கிற்று.

"அதற்குக் குழந்தை என்ன பண்ணுவான்?"

"பாட்டி! பாட்டி! நான் ஒன்னுமே பண்ணலலே. ஊசி மத்தாப்பைப் பிடிச்சுண்டு வந்து 'இதோ பாரு அம்மா'ன்னு இவள் முகத்துக் கெதிரே நீட்டினேன். அவ்வளவுதான்; என்னைக் கையைப் பிடிச்சு இழுத்துக் குனிய வெச்சு முதுகிலேயும் மூஞ்சிலேயும் கோத்துக் கோத்து அறைஞ்சுட்டா, பாட்டீ!'' பையனுக்குச் சொல்லும்போதே துக்கம் புதிதாய்ப் பெருகிற்று. அம்மா அவனை அணைத்துக்கொண்டார்.

"இங்கே வா தோசி, உன்னைத் தொலைச்சு முழுகிப்பிடறேன்! வயத்திலே இருக்கறபோதே அப்பனுக்கு உலை வெச்சாச்சு, உன்னை என்ன பண்ணால் தகாது?"

அம்மாவுக்குக் கன கோபம் வந்துவிட்டது.

"நீயும் நானும் பண்ணின பாபத்துக்குக் குழந்தையை ஏன்டி கறுவறே? என் பிள்ளை நினைப்புக்கு, அவனையாவது ஆண்டவன் நமக்குப் பிச்சையிட்டிருக்கான்னு ஞாபகம் வெச்சுக்கோ. ஏன் இன்னிக்குத்தான் நாள் பார்த்துண்டையா துக்கத்தைக் கொண்டாடிக்க? நானும்தான் பிள்ளையத் தோத்துட்டு நிக்கறேன். எனக்குத் துக்கமில்லையா? நான் உதறி எறிஞ்சுட்டு வளையவில்லை?"

மன்னி சீறினாள். "உங்களுக்குப் பிள்ளை போனதும் எனக்குக் கணவன் போனதும் ஒன்னாயிடுமோ?"

நாங்கள் அப்படியே ஸ்தம்பிச்சுப் போயிட்டோம். அம்மாவை நேரிடையாகப் பார்த்து இப்படிப் பேசறவாளும் இருக்காளா? இன்னிக்கு விடிஞ்ச வேளை என்ன வேளை?

அம்மா ஒன்றும் பதில் பேசவில்லை. குழந்தையைக் கீழேயிறக்கிவிட்டு நேரே மருமகளை வாரியணைத்துக்கொண்டார்.

மன்னி பொட்டென உடைந்து போனாள். அம்மாவின் அகன்ற இடுப்பைக் கட்டிக்கொண்ட குழந்தைக்கு மேல் விக்கி அழுதாள். அம்மா கண்கள் பெருகின. மருமகளின் கூந்தலை முடித்து நெற்றியில் கலைந்த மயிரைச் சரியாய் ஒதுக்கிவிட்டார்.

"காந்தி, இதோ பார், இதோ பாரம்மா"

சேகர் ஒரு ஊசி மத்தாப்பை அம்மாவுக்கும் பாட்டிக்கும் முகத்துக்கு நேர் பிடித்துச் சிரித்துக் கொண்டிருந்தான். அவன் கன்னத்தில் கண்ணீர் இன்னும் காயவில்லை. எங்களில் ஒருவர் விலக்கில்லாமல் எல்லோருக்கும் கண்கள் நனைந்திருந்தன.

குடும்பம் ஒரு பாற்கடல். அதிலிருந்து லக்ஷ்மி, ஐராவதம், உச்சஸ்ரவஸ் எல்லாம் உண்டாயின. அதிலிருந்து முளைத்துத்தான் எனக்கு நீங்கள் கிட்டினீர்கள். ஆலஹால விஷமும் அதிலிருந்து தான் உண்டாகியது; உடனே அதற்கு மாற்றான அம்ருதமும் அதிலேயேதான்... ■

• முகம்மது பாட்சா

# செங்கோட்டை ஆவுடையக்காள்




## அறிமுகம்

சில எழுத்துக்கள் நம்மைப் புவி வட்டத்தையும் தாண்டி ஒரு மாய உலகத்திற்கு அழைத்துச் செல்லும். வாசிப்பவர்கள் உடனே அங்கிருந்து வெளியேறுவது கடினமான சூழல். உறக்க நிலையிலும் உண்ணும் மற்றும் உண்ணா நிலைகளிலும் அவை நம்மோடே சேர்ந்து பயணிக்கும். ஆனால் எழுதியவன் அங்கிருந்து எங்கோ நகர்ந்திருப்பான். அல்லது, வாசகனைக் கட்டிப்போட்ட அந்தப் படைப்பாளன் சில நேரங்களில் காலத்தின் கட்டாயத்தால் அடையாளம் தெரியாமல் அழிக்கப் பட்டிருப்பான்.

கவிதைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த, நம் தகவு இதழின் அகழ்வும் நிகழ்வும் தொடர், தனது இரண்டாம் அத்தியாயமாக மறந்துபோன

அல்லது மறக்கடிக்கப்பட்ட சில இலக்கிய ஆளுமைகளைப் பற்றிப் பேசப்போகிறது. இன்றைய விளம்பர யுகத்தில் இலக்கியமும் கூலிக்கு மாரடிக்கும் எழுத்தாளர்களின் பின்னால் சென்றுகொண்டிருக்கும் சூழலில்தான், நாம் இவர்களை மீட்டெடுக்கும் இந்த முயற்சியையும் எடுத்திருக்கிறோம்.

எழுத்து என்பது வார்த்தைகளாக வடிவமைத்து வெளி வருவதற்குள் பெரும் தவத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.. அதற்கான படைப்பாளன் சிற்பியாகிறான்.. அவன் கனவுகளுக்குள் நுழைந்து வெளியேறு கிறான். இருட்டைச் சுவாசிக்கிறான். சில நேரங்களில் பசியும் வறுமையும் அவனையே எழுத ஆரம்பித்துவிடுகிறது. அவலச்சூழல்களில் விழுந்தவன் மீண்டும் எழுந்து தூசி தட்டி நடந்துபோகிறான். இந்த மோன நிலை பணத்திற்காக மட்டுமே எழுதும் ஓர் எழுத்தாளனால் நிச்சயம் செய்யமுடியாது.. அவனுக்கு எழுத்துக்கள் வளைந்து கொடுக்கலாம். ஆனால், கருத்துக்கள் கண்ணிழந்து உட்கார்ந் திருக்கும்.

கருத்துக்களை விதைத்துவிட்டுக் காணாமல் போனவர்களைத்தான், உங்களோடு சேர்ந்து நானும் தேடப்போகிறேன்... வாருங்கள் உள் நுழைவோம்.

**செங்கோட்டை ஆவுடையக்காள்**

**‘எச்சிலுன் வாயும் உடலும்**
**ஏகமாயிருக்கையிலே**
**பாதம் எச்சிலென்று அலம்ப**
**சுத்தமாச்சோ– பராபரமே’**

எச்சிலும் தீட்டு என்று புலம்பும் சமூகச்சூழலில் ஓர் அந்தணக்குலப்பெண் இவ்வாறு 300 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார் என்றால், அவர் சந்தித்த வேதனைகள் எவ்வளவு இருக்கும்?

அவலத்தின் அழுத்தம் அதிகமாகும்போது, மூச்சுத் திணறலில் சுவாசிக்க எத்தனிக்கும் வார்த்தைகளாகவே நான் இதனைப் பார்க்கிறேன். என்னதான் சுத்தம் செய்து, நான் தூயவன் என்றாலும் ஒவ்வொருவர் உடலுக் குள்ளும் ஒரு அவுன்ஸ் கழிவுகளாவது நிச்சயம் இருந்தே தீரும் என்பது இயல்பு. அப்படி இருக்கும்போது தீட்டென்று பாதத்தைக் கழுவினால் மட்டும் தீட்டு போய்விடுமா என்ன? என்று ஆவுடையக்காள் ஆக்ரோசமாகக் கேள்விகளை எழுப்புகிறார்.

எச்சிலின் வகைமைகளை, அக்காள் தெளிவாகத் தனது பராபரக் கண்ணியில் எடுத்துவைத்துக் காட்டமாகக் கேட்பதை நாமும் வாசிப்போம் :

**‘எச்சிலெச்சில் என்று புலம்புகிறாய்**
**மானுடர்கள்**
**எச்சில் இல்லாத இடமில்லை பராபரமே!**
**சில்லெச்சில் மூர்த்திக் கையில் ஈ எச்சில்**
**தேனல்லவோ**
**என்றைக்கும் உண்ணும் தாய் முலை**
**எச்சிலன்றோ பராபரமே**
**மச்சமெச்சில் நீரில் வந்து மூழ்கும்**
**மறையோர்கள் எச்சில்**
**பச்சைக் கிளி கோதும் பழம் எச்சில் அன்றோ**
**பராபரமே**
**தேரை எச்சில் தேங்காய் சிறு பூனை எச்சில்**
**தேசமெல்லாமே எச்சிலென்றறிவேன் பராபரமே**
**நாதமெச்சில் விந்து எச்சில் நால்மறையோர்**
**வேதம் எச்சில்**
**மந்திரங்கள் சொல்லும் வாய் எச்சிலன்றோ**
**பராபரமே**
**அண்ட பிண்ட லோகமெல்லாம் அடங்கலும்**
**எச்சிலாச்சே**
**வண்ட மத வாதிகட்கு வாயுண்டோ– பராபரமே’**

வியப்பாக இருக்கிறதல்லவா! உதிர தீட்டைப் பற்றியும் பேசிய முதல் சீர்திருத்தவாதி ஆவுடையக்காளாகத்தான் இருக்க முடியும்.

பெண்களைத் தீட்டென்று மூன்று நாட்கள் வீட்டைவிட்டு விலக்கி வைக்கிறீர்கள், நான்காம் நாள் அவள் அதிகாலை குளித்துத் தீட்டைக் கழிக்கிறாள், பின் அவளோடு சுகம் கூடிவிட்டதற்காக ஐந்தாம் நாளும் தீட்டு கழித்துவிட்டு வீட்டிலுள்ள பொருட்களைத் தொடுவதால்.. மனதில் உள்ள தீட்டு ஓடிப் போய்விடுமா என்ன? திரண்ட தீட்டை உருட்டி வைத்தது போல்தான் பெண்களைச் சிலை களாக்கி வைத்திருக்கிறீர்கள்! அப்படியிருக்கத் தீட்டு எப்படி ஓடிப்போகும் என்று கேட்கும்

அவரது சாட்டைக் கேள்விகள் இன்றைக்கும் உறைக்குமா என்பது கேள்விக்குறிதான்.

**‘தீட்டென்று மூன்றுநாள் வீட்டைவிட்டு விலக்கி**

**நாலாம்நாள் உதயத்தில் நன்றாய் உடல் முழுகி**

**ஆசாரமாச்சுதென்று ஐந்தாம் நாள் முழுகி**

**அகத்திலுள்ள பொருள் தொடுவாய் அகத்தீட்டுபோச்சோ?**

**தீட்டு திரண்டு உருண்ட சிலைபோலே பெண்ணாக்கி வீட்டிலிருக்க**

**தீட்டு ஓடிப் போச்சோ – பராபரமே**

**உக்கத்துப் பிள்ளையும் உன் கக்கத்துத் தீட்டன்றோ’**

என்ற அவரது வரிகளை வியக்காமல் இருக்க முடியாது.

சாதிய வர்ணங்களையும் தெய்வ வேறுபாடு களையும் சாடும் பாடல்களை அக்காள் பாடி இருக்கிறார். அதனால் அவர் இறை நம்பிக்கையற்று வாழ்ந்தார் என்று சொல்ல முடியாது. தெய்வங்களை வேறுபடுத்திப் பார்க்கின்ற நாம், உண்மையான மெய்ப்பொருள் தத்துவம் என்ன என்பதை மறந்துவிட்டோம் என்று சாடுகிறார். நிலவில் தெய்வம் இருப்பதாக மேலை நாட்டாரும், மரக்கட்டையில் தெய்வ மென்று வையகத்தாரும், செப்புச் சிலைகளே தெய்வமென்று தரணியில் சிலரும், மண்தான் தெய்வமென்று உலகில் சிலரும், நீர்நிலைகளே தெய்வமென்று தீர்த்தாதிகளும் மற்றும் அக்னிதான் தெய்வமென்று சிலர் ஓமமும் வார்த்திடுகிறார்கள். ஆனால் மெய்ப்பொருள் காண்பதுதான் தெய்வம். நாம் அதனைத் தவற விட்டுவிட்டோமா? என்ற அவரின் கேள்வி ஓர் உரத்த சிந்தனை.

**‘அம்புலியில் தெய்வமென்று சாதிப்பார் சீமையிலே**

**தாருவிலே தெய்வமென்று சாதிப்பார் வைஅயத்தே**

**தாமிரத்தைத் தெய்வமென்று சாதிப்பார் தரணியிலே**

**மிருத்யுவே தெய்வமென்று சாதிப்பார் உலகினிலே**

**அப்புவே தெய்வமென்று ஆடுவார் தீர்த்தாதி**

**அக்கினியே தெய்வமென்று ஆகுதிகள் பண்ணிடுவார்**

**தத்துவமாய் மெய்ப்பொருளைத் தப்பவிட்டு நின்றோமோ?’**

15 - 19ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு பெண் கவிஞராகவே நாம் இவரை அறிய முடிகிறது. செங்கோட்டை யில் வசதியான, நல்ல ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்தவர்தான் ஆவுடையக்காள். பருவம் அறியாத வயதிலேயே அவருக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. திருமணமான ஓரிரு மாதங் களில் அவளை மணந்த சிறுவனும் இறந்து விடுகிறான். அவர்கள் குல வழக்கப்படியான சடங்குகளும் அழுகைகளும் அந்தச் சிறுமியைப் பல கேள்விகளுக்கு ஆளாக்குகிறது. அவள் படிப்பைத் தடை செய்தாலும் தன் பிடிவாதத்தால் படிப்பைத் தொடர்கிறார். அப்போதுதான் உலகின் சில விசயங்கள் அவருக்குப் புரிய ஆரம்பிக்கின்றன... ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை, தீட்டு போன்றவைகளின் மீது ஏற்பட்ட கோபத்தைப் பாடல் வரிகளாக்கிப் பரவவிடுகிறார். அதனாலேயே அவர் அம்மக்களால் சாதி பிரதிஷ்டம் செய்யப்பட்டதாகவும் அறிய முடிகிறது. பின்னர்த் தனது பயணத்தை வீட்டைவிட்டு வெளியேறித் தொடர்ந்ததாகச் சில குறிப்புகள் உணர்த்துகின்றன.

பெண்களுக்கு அக்காளின் பாடல்கள் மிகவும் பிடித்தமானவைகளாகவே இருந்தன. அவர்கள் அவற்றைத் தங்களின் குரல்களாகவே பாவித்தனர். வீட்டில் பெண்கள் மட்டுமே தனியாகவும் குழுவாகவும் பாடி வந்திருக்கிறார்கள். அப்படிப் பாதுகாக்கப்பட்ட பாடல்கள்தான் இன்று நமக்குப் பொக்கிசமாகக் கிடைத்திருக்கின்றன.

'ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் அவர்களுக்கு ஸ்ரீ அக்காள் அவர்களின் பாடல்கள் என்றால் உயிர். அவரும் ஸ்ரீ அக்காளின் வரலாற்றை அறிய முயற்சி செய்ததாகத் தெரிகிறது. அவருடைய அநேகப் பாடல்களின் கருத்துக்களை ஒட்டியே அவரும் அநேக வேதாந்தப் பாடல்களைப் புனைந்திருக்கிறார். அவர் எனது தாயார் அவர்களின் சகோதரியின் கணவராகையால்

சிறுவயதில் அவர் மூலமாகவும் சில தகவல்கள் அறியும் பாக்கியம் கிட்டியது,' என்கிறார் கோமதி ராஜாங்கம்.

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் மனைவி செல்லம்மாளின் சகோதரி மகள்தான் கோமதி ராஜாங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதியாரின் பாடல் வரிகளில் ஆவுடையக்காளின் தாக்கம் முழுமையாக இருப்பதை நாம் காணமுடிகிறது.

'ஜாதி வர்ணாசிரமம் போச்சே

வேத சாஸ்திரம் வெறும் பேச்சே' என்பது அக்காளின் வரிகளென்றால்

'ஜாதிச் சண்டை போச்சோ உங்கள்

சமயச் சண்டை போச்சோ' என்று பாரதியின் குரல் ஒலிக்கிறது.

'பாருக்குள் நுபம்சகன் ஸ்த்ரீபோகம் புஜித்ததும்

பட்டணத்து அலங்காரம் பொட்டையன் கண்டதும்' என்று அக்காளின் வரிகள் குரலெழுப்ப, பாரதியின் வரிகளோ,

'சொந்த அரசும் புவிச்சுகங்களும் மாண்புகளும்

அந்தகர்க் குண்டாகுமோ கிளியே

அலிகளுக்கு இன்பமுண்டோ?' என்று முழக்கமிடுகிறது.

'ஞான ரஸக் கீர்த்தனைகள்' என்று சாவேரி, நாதநாமக் கிரியா, பூபாளம், ஆனந்த பைரவி, ஆரபி, தோடி, கல்யாணி, மத்யமாவதி, மோகனம், சௌராஷ்ட்ரம், காம்போதி, தன்யாசி, சங்கராபரணம், யதுகுல காம்போதி, முகாரி, புன்னாக வராளி, பைரவி, சுருட்டி, கேதார கௌளம், சகானா என ஏகப்பட்ட ராகங்களில் இசை உலகுக்கும் ஆன்மீக உலகுக்கும் அக்காளின் கொடைகள் ஏராளம்' என்று நாஞ்சில் நாடன் சுட்டிக்காட்டுகிறார்.

மகாகவி பாரதியார் கவிதைகளிலோ, உரைநடையிலோ ஆவுடையக்காளைப் பற்றி ஏன் குறிப்பிடவில்லை என்ற கேள்வியை எழுப்பும் ஆய்வாளர் சு.வேங்கட்டராமன், 'ஔவையார், சகோதரி நிவேதிதை ஆகிய பெண்களைக் கொண்டாடும் பாரதி.. எங்கோ, ஜப்பானில் ஹைக்கூ கவிதை எழுதிய கவிஞர் பெயர்களை எல்லாம் விதந்து கூறும் மகாகவி தம் மனைவி செல்லம்மாளின் ஊரான கடையத்திற்கு அருகேயுள்ள செங்கோட்டையில் வாழ்ந்தவரும் தமக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியவருமான ஆவுடையக்காள் பற்றி எந்தக் குறிப்பையும் ஏன் பதிவு செய்யவில்லை? என்ற வினா விசுவரூபம் எடுத்து நிற்கிறது. இளம் வயதில் விதவையாகி, ஊரின் ஏச்சையும் பேச்சையும் சாதிப்புறக் கணிப்பையும் (அந்நாளில் ஆவுடையக்காள் அந்தணர்களால் சாதிப்பிரதிஷ்டம் - சாதிநீக்கம் செய்யப்பட்டவர்) தாண்டி, ஆத்மானுபவத்தில் தான் வளர்ந்ததோடு மற்ற பெண்களுக்கும் உபதேசம் பயிற்சி தந்து, நிஜமான பெண் விடுதலையைச் செய்துகாட்டிய செயல் வீரர் அக்காள். பெண் விடுதலை பேசும் பாரதியார், ஆவுடையக்காள் பற்றி எதுவும் கூறாமல் போனது தற்செயல் நிகழ்வா? திட்டமிட்ட இருட்டடிப்பா? அக்காள் பெண் கவிஞர் என்பதுதான் இதற்கான காரணமா? என்னதான் சரிநிகர் சமானமாய் வாழ்வோம் என்று பாடினாலும், பாரதி ஆண் என்பதால், ஆவுடையக்காளைப் பற்றிக் கூறவில்லை என்பது எஞ்சி நிற்கும் விடை. கோமதி ராஜாங்கம் அம்மையார் இத்தகவல்களைத் தராவிட்டால் தமிழ் உலகிற்கு இந்த அகச்சான்றுகள் தெரியாமலே போய் இருக்கும்' என்று சொல்கிறார்.

ஆங்கிலத்தில் காஞ்சனா நடராஜன் அவர்களின் பாடல்களை மொழிபெயர்த்து வெளி உலகிற்குக் கொண்டு சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'காசிராமேசுவரம் சென்றாய் காகம்போல் மூழ்கிநின்றாய்

உன்னாசை போச்சோ மூடா..'

என்றெல்லாம் புரட்சிப்பாடல்களைப் புனைந்த கவி பெண்மணி ஆவுடையக்காள், ஓர் ஆடி அமாவாசையன்று குற்றால மலை மீதேறிச் சிறிது நேரம் தியானம் செய்து வருவதாகச் சொல்லிப் போனவர் திரும்ப வரவில்லை என்பதுடன் எவ்வளவு தேடியும் ஆவுடையக்காளின் சடலம்கூடக் கிடைக்கவில்லை என்று அவரது சரித்திரம் முடித்துவைக்கப்பட்டது.

**– இனியும் அகழ்வோம்** ■

மொழிபெயர்ப்பு

சென்ற இதழ்த் தொடர்ச்சி

• கனிமொழி.ஜி

# வெ.ஸ்ரீராம் என்னும் தனித்துவ மொழிபெயர்ப்பாளர்

**குட்டி இளவரசன்**

குட்டி இளவரசன் அந்த்வான் து.செந்த் எக்சுபெரி அவர்களால் எழுதப்பட்டது. (1900 - 1944) அவரது ஐம்பதாவது நினைவுஆண்டில் பிரெஞ்சு அரசு அவர் படைப்புகளைப் போற்றும்வகையில் அவருடைய உருவம், யானையை விழுங்கிய மலைப்பாம்பு, குட்டி இளவரசனது கிரகம் ஆகிய படங்களைக் கொண்ட ஐம்பது ஃப்ராங்க் நோட்டை வெளியிட்டது. அவ்வளவு முக்கியமானதொரு கதையை வெ.ஸ்ரீராம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இக்கதை வாழ்வின் தத்துவத்தைச் சிறுகுழந்தையின் மொழியில் பேசுகிறது. இக்கதையின் உரையாடல்களையும் காட்சிகளையும் மொழிபெயர்த்திருக்கும் திறன் அப்புனைவாளனின் படைப்புக்கு நிகரானது.




**சொற்கள்**

ழாக் ப்ரவெரின் சொற்கள் கவிதைத் தொகுப்பைத் தமிழில் 2000ஆம் ஆண்டு மொழிபெயர்த்திருக்கிறார்.

ஆலையின் கதவுக்கு முன்னால் திடீரென்று நிற்கிறான் தொழிலாளி

அவன் அங்கியைப் பிடித்து இழுத்தது இனிய வானிலை

என்றொரு கவிதையிடை... உண்மையில் இனிய வானிலை என்ற சொல் பெயர்ப்பு அல்ல உருவாக்கம் அல்லவா. புனைவுகளை உணர்வு மாறாமல் மொழிபெயர்த்துவிட இயலும். கவிதைகளை அதன் உணர்வும் வடிவமும் மாறாமல் மொழிகடத்துவதென்பது அத்தனை எளிதன்று. புனைவெழுத்தாளர்களுக்குக் கவிதையின் நுட்பமும் கச்சிதமும் வாய்ப்பதில்லை. மொழிபெயர்ப்பாளராய் இருந்தும் புனைவுகளை மொழிபெயர்த்திருக்கும் இவர் சொற்கள் என்ற தலைப்பில் கவிதைகளை மொழிபெயர்த்ததன் மூலம் மிகச்சிறந்து நோக்கப்படுகிறார். 2000 ஆண்டுகளில் கவிஞர்களால் பெரிதும் வாசிக்கப்பட்ட பேசப்பட்ட புத்தகமாக இது இருந்திருக்கிறது.

**முதல் மனிதன்**

ஆல்பெர் காம்யூவின் முதல்மனிதன் என்ற நெடுங்கதையை 2013ஆம் ஆண்டு மொழிபெயர்த்திருக்கிறார். முதல் மனிதன் காம்யூவின் முடிக்கப்படாத கதை. ஆயினும் நிறைவுபெற்றதாகக் கருதப்படும் கதை.

இக்கதையில் தன்னைவிட இளையவராக இறந்துவிட்டிருந்த தந்தைக்கும் உலர்ந்த உறவுப்




பிணைப்பில் இருக்கும் தாய்க்கும் உறவின் விலகல் வழியே வாழும் மகனுக்குமான காட்சிகள் மிகச் சிறந்த சொல்லாடல்களின் வழியே வாசிக்கலாம்.

உறவின் துயரைப் பேசும் இக்கதையின் அங்கதம் நுட்பமான மொழிவழியே பெரும் சிரிப்புத் தளும்பலை ஏற்படுத்தக்கூடியவை... இந்த முதல் மனிதனின் துவக்கக் காட்சியில் கோர்மெரி.. சமைத்து வைத்திருந்த ஆட்டுக் குட்டியின் இரண்டாவது காலை உண்ணும் காட்சியை.. தன் பழைய நண்பர் கவலையளிக்கும் பேராசையும் சாப்பிட்டுக்கொண்டிருந்ததைக் கோர்மெரி பார்த்தான்.. அதே நண்பர் மிக அதிகமாக உண்ண முடியவில்லை என்று கவலையோடு சொல்லும்போது கோர்மெரி இப்படியாகச் சொல்கிறான்.. ஆமாம் அப்படிப் போய்விட்டால் உங்களால் மற்றவர்கள் தலைமேல் பறக்க முடியாது.. என்று. இந்தக் காட்சிப்படுத்தத்தில் மொழிதலின் முறை மிகக் கச்சிதமான பணியைச் செய்கிறது.. இணக்கமான அன்பு ஆயினும் ஒருகோட்டுக்கு இருபுறங்களிலும் நின்று கைக்குலுக்கும் இருநண்பர்களின் உறவு சிதையாத மொழிதல்..

### மார்கெரித் யூர்ஸ்னாரின் கீழை நாட்டுக்கதைகள்

2006ஆம் ஆண்டு வெளிவந்த இத்தொகுப்பில் நிறையக் கதைகளை வெ.ஸ்ரீராம் அவர்கள் மொழிபெயர்த்துள்ளார். உயிர் தப்பிய வாங்ஃபோ என்ற கதை வாங்ஃபோ என்ற ஓவியக் கலைஞனைப் பற்றிய கதை. பொருட்களின் மேல் வாங்ஃபோவுக்கு நாட்டமில்லை.. அவற்றைச் சித்திரமாகப் பார்ப்பதுதான் அவருக்குப் பிடித்திருந்தது.. அது ஒரு பேண்டசி வகைக் கதை. கலைக்காகத் தன் வாழ்வை ஒப்புக் கொடுப்பதும் அதே கலையின் மூலம் கலைஞன் தப்பிப்போவதுமான கதை. மிக இளக்கமான மொழியில் பெயர்க்கப்பட்டிருக்கும்.. மிகச் சிறந்த மொழிவழியே சிறந்த காட்சிப்படுத்துதல் சாத்தியமாகிறது.

### ப்யரெத் ஃப்லுசியோ எழுதிய சின்னச்சின்ன வாக்கியங்கள்

இந்த மொழிபெயர்ப்பு நூல் 2001ஆம் ஆண்டு வெளிவந்தது. நாம் வாழும் இந்த நவீன நுகர்வோர் சமூகத்தில் இரண்டுதலைமுறைப் பெண்களான தாய் மகள் இவர்களுக்கிடையே வேறுபட்ட உறவும் மிகச் சிறந்த உரையாடல்களும் கொண்ட இக்கதை நம் ஒவ்வொருவரின் சொந்த வாழ்க்கைப் பிரச்சினைகளையும் நம்மால் இனம் கண்டுகொள்ள முடியும் என்று குறிப்பிடப்படுகிறது.

### அந்த்துவான் து எக்சுபெரியின் காற்று மணல் நட்சத்திரங்கள்

இக்கதையாளரின் குட்டி இளவரசன் என்ற நெடுங்கதையையும் வெ.ஸ்ரீராம் அவர்கள் மொழிபெயர்த்துள்ளார். இந்த எழுத்தாளர் ஒரு விமானி. மிகச்சிறந்த கதைகளை எழுதியவர். இளைய வயதில் 44இல் உயிரிழந்தவர். இந்தக் கதை ஒரு அஞ்சல் விமான நிறுவனத்தலை வரையும் ஒரு விமானியையும் மட்டுமே மாந்தர்களாகப் பிணையப்பட்ட கதை.. போர்க்காலங்களில் அஞ்சல்களைக் கொண்டு சேர்க்கும் விமானத்தை ஓட்டுபவராக இந்த விமானி பணிபுரிகிறார். சிக்கலான விமானப் பயணங்களைப் பற்றி எழுதப்பட்ட கதை. கிட்டத்தட்ட அந்த்துவான் து எக்சுபெரியின் சுய சரிதையாகவே இருப்பதாக இக்கதை சொல்லப் படுகிறது. கண் பார்வையிலிருந்து கடற்கரை மறைவதைப் பார்க்க தைரியம் இல்லாதவர்கள் புதிய கடல்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று எக்சுபெரியைப் பற்றி ஆந்த்ரே ழீத் சொல்வதாகப் பின்னுரையில் சொல்கிறார்.

காம்யூவையும் மெர்சோவையும் எப்படி பிரித்துப் பார்க்கமுடியவில்லையோ அது மாதிரி எழுத்தாளர் செந்த்எக்சுபெரியும் கதையாளன் மெர்மோசும் வித்தியாசமற்ற வாழ்வைக் கொண்டவர்கள்.. தன் இருத்தலைக் கூடவோ குறையவோ நகலெடுக்கப்படுபவை.. வெள்ளையான உண்மையான பிரதிகளாக

இருப்பதில்லை.. மெர்மோஸ் தன் இறுதியான விமானப் பயணத்திற்கு முன் தன் ஜெனரல்க்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு எழுதியிருப்பதாக நமக்கு ஸ்ரீராம் காட்டுகிறார். திரு. ஜெனரல் அவர்களே இங்கு இருப்பது ஒரேஒரு பிரச்சினைதான்..




மனிதர்களுக்கு ஆன்மீக அர்த்தத்தை ஆன்மீக அக்கறைகளைத் திரும்பத் தர வேண்டும். குளிர்சாதனப் பெட்டியும், அரசியலும், குறுக்கெழுத்துப்போட்டிகளும் மட்டுமே வாழ்க்கை அல்ல.. கவிதையும் வண்ணங்களும் நேசமும் இல்லாமல் மனிதன் வாழ முடியாது. இன்று இயந்திர மனிதனின் பிரச்சாரக்குரல் மட்டுமே கேட்கிறது. 100 கோடி மனிதர்கள் இயந்திர மனிதனை மட்டுமே கேட்கிறார்கள். அதை மட்டுமே புரிந்துகொள்கிறார்கள். இயந்திர மனிதர்களாகவே ஆகிவிடுகிறார்கள்.. என்ற வாசகங்கள் பெரும் உரையாடலைத் துவக்குபவை.

**காமல் தாவூத்தின் மெர்சோ மறு விசாரணை**

அந்நியன் நாவலுக்கு எதிர்ப்பதமாக எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டது. காம்யூ நூற்றாண்டு என்று சொல்லப்பட்ட 2013ஆம் ஆண்டு பிரெஞ்சு மொழியில் வெளிவந்த இந்த நாவல் வெ.ஸ்ரீராம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு 2018ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்நியனில் மெர்சோவால் கொல்லப்பட்ட பெயரற்ற அராபியனுக்கு இந்த நூலில் மூசோ என்று பெயரிடப்பட்டு அவருடைய தம்பியாக ஹரூன் என்ற பாத்திரம் கதை முழுக்கச் சொல்வது போல எழுதப்பட்டிருக்கிறது. எதிர்ப்புறமிருந்து எழுதப்பட்டாலும், இதில் ஹரூன் ஒரு பிரெஞ்சுக்காரனைக் கொன்று விடுகிறான்.. காரணம் தான் மெர்சோவின் நிலையில் இருந்ததாகச் சொல்கிறான். அந்நியன் கதையில் தன் பிரதிபலிப்பைப் பார்த்ததாகச் சொல்கிறான்.

இந்த புத்தகத்தில் காம்யூவின் நடையிலேயே தாவுத்தும் எழுதியிருக்கிறார்.. ப்ளாக் ஹ்யூமரஸ் என்று சொல்லப்படும்விதத்தில் நிறைய இடங்கள்... சிறிய வயதில் தன் அண்ணன் கொல்லப்பட்டபின் தானும் தன் தாயாரும் கஷ்டப்பட்டவிதத்தைப் பற்றிச் சொல்லும்போது என் அம்மாவுக்குக் காவலாக யாருமில்லாமல் இருக்கிறாள் என்பதையறிந்த மனிதர்களின் கவலையளிக்கும் காலடி ஓசைகளைப் பற்றி இரவு வேளைகளில் பயந்துகொண்டிருந்தேன் என்று மொழிபெயர்ப்பாளரின் வழியே பேசுகிறார் மூசா. அந்நியன் படித்த ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நாவல் மெர்சோ மறுவிசாரணை.. கதையும் மொழியும் சிறந்த தர்க்கமும் கொண்டவையாக இம் மொழிபெயர்ப்பு நூல் விளங்குகிறது.

வெ.ஸ்ரீராம் அவர்களின் மொழிவழியே நமக்குக் காணக்கிடைக்கும் பிரெஞ்சு உலகம் மிகவும் civilized society ஆகஇருக்கிறது. புறக்காட்சிகள் வாழ்நிலை வழியே வாழ்வின் அகவியலைப் பேசுவதோடு வாழ்வின் தத்துவங் களையும் முன்னெடுக்கிறார். இவர் மொழி பெயர்த்திருக்கும் அத்தனை நூல்களும் அழுத்தமான தத்துவ விசாரங்களைப் பேசுகின்றன. அங்கதமோ துயரமோ எல்லா வற்றையும் காட்சிப்படுத்துதலின் சொற்கள் மிக நுட்பமானவையாகவும் இருக்கின்றன.

வெ.ஸ்ரீராம் அவர்களின் மொழிபெயர்ப்பைப் போலவே புத்தகங்களின் பின்னுரைகள் மிகவும் சிறப்பானவை. கதைகளில் பேசாத புரிந்து கொள்ளவேண்டிய பின்புலத்தைப்பற்றியும் அதன் அப்ஸ்ட்ராக்ட்டைப் பற்றியும் பேசுகின்றன.

பிரெஞ்சில் தனக்குப் பிடித்த எல்லா நாவல்களையும் தன்னால் மொழிபெயர்க்க இயலவில்லை என்றும் எக்காலத்தவருக்கும் எந்நாட்டவருக்கும் பொதுவானதாகவும், பொருத்தமானதாகவும் முக்கியமாகத் தேவையான தாகவும் இருக்கும் புத்தகங்களை மட்டுமே தான் மொழிபெயர்த்துள்ளதாகவும் திரு.வெ.ஸ்ரீராம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

ஒரு கலைஞனுக்கு மூப்போ மரணமோ இல்லை. அவன் கலையும் இலக்கியமும் அவன் குறித்த நினைவுகளுக்கு எக்காலமும் நீரூற்றிக் கொண்டே இருக்கும். ■

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : கொ.வடிவேல்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் – 7

நீருக்கும்
கண்ணீருக்கும் இடையில்
கலந்திருக்கும் ஒருதுளி உப்பைப்
போல
உனதன்பு...

•

உன் காதல் வார்த்தைகள்
எப்போதும் காயங்களாக
இருந்ததில்லை
ஆனால் வலி நிறைந்தது

•

நீ முதலில் போ
பிறகு நான் வருகிறேன்
உன்னைப் பின்தொடர்வதன்
பெயர்தானே வாழ்வு

•

சத்தியத்தின் நித்தியமான ஒளி
உனது
இருளுக்குள் கையேந்தும் இதயம்
எனது

•

காதலின்
உயிர்ப்பு நிலை
நிராசைகளின் பூதம்

•

வெறுமையான சாலையில்
வெயில் போல
வருகிறாய் நீ...

•

உன்னைச்
சேமிக்கவும் முடியவில்லை
செலவு செய்யவும் முடியவில்லை. ■



• வசீலா சாஹிர்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



# மொழியின் மரணம்

ஏமாற்றப்படுவதில் எத்தனை இரங்கல். ஆனால், இத்தனை வருடகாலம் தன் கணவனால் இழைக்கப்பட்டவற்றை அவ்வளவு கொடூரமாக எண்ணத்தில் வளரவிடவில்லை. ஆனால் இப்போது யோசித்துப்பார்த்தால் எல்லாமே அவன் திட்டமிட்டுத்தான் செய்திருக்கிறான் என்பது தெளிவாகப் புரிந்தது. ஒரு போலியான அன்பில் தான் ஏமாந்துவிட்டோமே என்பதை அவளால் ஜீரணித்துக்கொள்ளவே முடியவில்லை.

உறவுகளிடம் தனக்கு நடந்தவற்றை எப்படி விவரிப்பது.. நன்கு பழகிய உறவுகளாக இருந்தாலும்கூட கூறமுடியாது. அவர்கள் ஒரே வார்த்தையில் “அவன மாதிரி நல்ல மனிசன தேடறது கஷ்டம். பொஞ்சாதிய எப்படிப் பாக்கிறான்.. பாவம் பிஸ்னஸ் லொஸ்ட். இவளுக்கு நல்லா இருக்கும்போது மாப்பிள்ளை நல்லம். இப்ப அவன்கிட்ட பணம் இல்லாத தனால சண்டை போட்டிருப்பாள்''.. இப்படித்தான் பேசுவார்கள். அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இனிமேல் என்ன செய்வது..

அவன் அவளை மட்டுமில்ல.. அவள் உறவுகளைக் கூட ஏமாற்றிவிட்டான். மூன்று பிள்ளைகளும் தானும் ஏமாந்துவிட்டோமே என்று நினைக்கும்போது அவளுக்குத் தற்கொலை செய்துகொள்ளத் தோன்றும் சில சமயங்களில். அவன் காட்டிய போலி அன்பினால் உலகமே அவன்தான் என்று நினைத்ததனால் அவள் நெருங்கிப் பழகிய உறவு என்று யாருமே இல்லை. குறிப்பிட்ட வயதில் பெற்றோர் குறுகிய காலத்தில் கணவன் என்று வட்டத்திற்குள் இருந்த அவளுக்கு அந்த வட்டம் தந்த பாடங்கள் ஏமாற்றம் மட்டும்தான். இனி அவளுக்கு என்ன செய்யப்போகின்றோம், பிள்ளைகளின் எதிர்காலம், தான் படித்த படிப்பிற்கு எங்கு வேலை தேடுவது, வீட்டு வாடகை.. இந்த மாதிரியான பிரச்சனைகளை எப்படித் தீர்க்கப் போகின்றோம் எனத் தெரியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

இடையில் ஒருநாள் ரகு வீட்டிற்கு வந்திருந்தான்.. அவன் உறவுகளோடு. சுவாதி

கண்கள் கலங்க அவனிடம் "வந்திட்டீங்களா? நான் பயந்துபோய்ட்டன்..'' என்று கூறிக் கொண்டே அவன் அருகில் செல்ல,

"நீ இன்னும் சாகல்லயா....."

அவன் உறவுகளுக்கு முன்னால் கேலியாகக் கிண்டல் பண்ணியபோதும் சுவாதி அதைப் பொருட்படுத்தாது,

"ஏன் அப்படிப் பேசுறீங்க.. நான் என்ன தப்பு பண்ணினன்.. எனக்கு இவ்வளவு பெரிய தண்டன. என்னங்க நாம ஏதாவது பண்ணிப் பழைய நிலமைக்கு வரலாம்க. ப்..ளீ..ஸ். என்னத் தனியா விட்டுட்டுப் போய்டாதீங்க. எனக்கு யாருமே இல்லைன்னு தெரியும்தானே.. கடவுளே உங்க கால்ல வேணுமானாலும் விழுரன்......" எனக் கதறியபடியே அவன் கால்களில் விழுந்து கால்களைக் கட்டிக்கொண்டு கதறினாள். ஆனால் அவனோ கால்களை உதறித் தள்ளிவிட்டு அருகில் இருந்த கதிரையில் அமருகிறான். தொடர்ந்து அவன்,

"சரி.. நான் உன்கூட இருக்கணும்னா, உண்ட காதலன் நம்பர் வன் பணக்காரனா இருக்கான். அவன்கிட்ட மிச்சம் தேவயில்ல, 25 இலட்சம் கேளு.. அப்புறம் நாம நல்ல இருக்கலாம். நான் கொடுமக்காரன்னு நீ நெனச்சா.. உண்ட முட்டாள்தனம். எனக்குத்தான் யாரும் இல்ல. உனக்குத் தங்க முட்ட போடுற வாத்தே இருக்கே.." என்றான்.

சுவாதிக்கு அவன் பேசியதைக் கேட்டதும் தூக்கிவாரிப்போட்டது. இப்படியெல்லாம் அவன் யோசிப்பான் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லை.

அதுவரை சுதனைப் பற்றிய துளி நினைவுகளும் இல்லாமல் இருந்தவளுக்குப் பெரும்கழுகு தன் கொடூரமான அலகினால் கொத்திப் பிராண்டுவது போல் உணர்ந்தாள். அவளின் மெல்லிய உள்ளத்தில் கீறல் பட்டுக் கடுமையான எரிச்சல் வருவது போல் மனம் கொதித்தது.

கணவனின் சுயநலமிக்க பேச்சுக்கள், கொடூரமான எண்ணங்கள் அவளைப் பயமுறுத்தின. இரவில் வெட்டிய புதைகுழியில் பகல் போய் விழப்போகிறோம் என்பதைக் கணவனின் திட்டமிட்ட பேச்சிலிருந்து உணரத்தொடங்கினாள். உணர்வின்றி அவளது மூளை செயலாற்றத் தொடங்குகிறது. அது மட்டும்தான் உண்மை. காரணம், அவள் தன் குழந்தைகளைப் பற்றி யோசித்தாள். அவர்களின் வாழ்க்கை ஓரளவாவது நிம்மதியாக இருக்க வேண்டுமென்று கணவனின் கட்டளைக்குச் சம்மதம் தெரிவிக்கின்றாள்.

மறுநாள் காலை சுதனின் வருகைக்காகத் தனது கணவன் காத்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்து அவளுக்கு உயிரே போய்க்கொண்டிருந்தது..

'பெண்கள் எவ்வளவு பலவீனமானவங்க. அந்தப் பலவீனத்த ரகு மாதிரி ஆண்கள் எப்படிக் கேவலமாப் பயன்படுத்திக்கொள்றாங்க... நானும் படிச்சி இருக்கலாம். கிணத்துத் தவளை மாதிரி குடும்ப வட்டத்துக்குள்ளயே இருந்துவிட்டதால் உலகத்தைத் தெரியாமல் விட்டுவிட்டோமே..' என்று இந்தத் தருணத்தில் மிகவும் வருத்தப் பட்டுக்கொண்டாள்.

நாட்கள் அசுரவேகத்தில் சுழன்றன. அந்தச் சுழற்சியில்தான் எத்தனை மாற்றங்கள். இருபத்தைந்து இலட்சம் ரூபாவை, எடுத்த மறுநிமிடம், வெளியே சென்ற ரகு, இரண்டு வருடங்கள், இன்றோடு ஓடி மறைந்தது, வரவே இல்லை. அவன் வேறு திருமணம் முடித்து விட்டதாக ஒரு கொடூர செய்தி மட்டும்தான் சுவாதியின் செவிகளுக்கு வந்தடைந்தது.

அந்த இரண்டு வருட சுழற்சியின் சூழ்ச்சியில் சுழன்றன சுவாதியின் சுமைகள். சுட்டெரிக்கும் சுற்றத்தாரின் சுடு சொற்களும். சுவாதி சும்மா இருக்கவில்லை. கணவனின் சூழ்ச்சியின் சூத்திரம் சுவாதிக்குச் சொல்லிக்கொடுத்தது பாடங்களை. வேறுபட்ட சூழலுக்குச் சுவாதி தன்னைச் சுறுசுறுப்பாக்கினாள். மாறுபட்ட சமுதாயத்துக்குள், தன்னை மாற்றிக்கொண்டாள். முயலாமை, இயலாமையை இடித்தாள். ஆம் அவள் ஒரு தனியார் கம்பனி ஒன்றில், பணிபுரிகின்றாள். மாதம் கிடைக்கும் முப்பதாயிரம் வருமானம் அவளை வாழ வழிசெய்தது.

இதற்கும் சுதனின் இருபத்தைந்து இலட்ச பணத்துக்காகத் தன் கணவன் மீது வழக்கு தொடர அவள் கூறினாலும் சுதன் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு அது அழகல்ல என்று பெருந் தன்மையோடு விலகினான். அவளை அவன் கம்பெனியில் வேலைக்கு வரும்படி கேட்க சுவாதி மறுத்தாள். அவளுடைய பழக்கவழக்கம், மெல்லிய புன்னகை சுதனை என்றென்றும் மறக்கடிக்கச் செய்ய முடியாது. காரணம், சுதன் நேசித்தது அவள் உள்ளத்தை. அதற்குப் பகரமாக

அவன் வாழும் தனிமை வாழ்க்கையே உதாரணம். அதுவே சுவாதிக்கும் புரிந்த உண்மை. அதனால்தான் அவனிடம் இருந்து அவள் விலகியே இருக்கின்றாள்.

அன்று மாலை மயங்கிய நேரம். வழமைக்கு மாறாக, நேரம் கடந்துவிட்டது. சுவாதி நடையின் வேகத்தை அதிகமாக்கி, வீதியில் அவசரமாக நடந்தாள். அவ்வழியே காரில் போய்க் கொண்டிருந்த சுதன் அவளிடம் நெருங்கினாள்.

“சுவாதி.. வா உன்ன நான் ட்ரோப் பண்ரன்.. லேட்டாகிட்டு இல்ல.. உனக்குப் பயம்.. எங்க நாம, வழித்தவறிப் போயிடுவோமோ, இவன மறுமணம் செய்திடுவோமுன்னு பயம். பைத்தியக்காரி.. எவளாவது வந்து பறித்துச் சூடுவாள் என்று எதிர்ப்பார்த்தா கொடி பூக்கிறது? தாம் ஆடையாகப் போகிறோம் என்ற ஆனந்தத்திலாப் பருத்தி வெடித்துப் பஞ்சாகிறது. அது அது எல்லாம் நடக்குற மாதிரி நடக்கும்.”

உள்ளே அந்த நிமிடம் அவன் பேசிய வார்த்தைகள்.. அவள், மௌனமானாள்.

மீண்டும் மீண்டும் எதையோ உச்சரித்த வண்ணம் காரில் ஏறி, வேகமாகச் சென்றான்.

அவள் வேலை பார்க்கும் கம்பெனிக்கு சுதன், தேவை கருதிப் போய் இருந்தான். அன்று சுவாதி இளம் மஞ்சள் நிற சேலையில் தங்கச் சிலையாக இருந்தாள்.

அவளைப் பார்ப்பவர்கள் அவள் இன்னும் திருமணம் ஆகாதவள் என்றே நினைப்பார்கள். அவள் உள்ளத்தைப் போன்று முகமும், தெளிந்த நீரோடை போன்று இருந்தது. அந்தக் கம்பெனிப் பொறுப்பாளர் ஜெய் சுதனின் நண்பன். சுவாதி அறிந்திருக்க நியாயமில்லை.

சுதனை அவள் கம்பெனியில் கண்டபோது, சற்று ஆச்சரியத்துடன் திரும்ப எதிரில் வந்துகொண்டிருந்த ஜெய்யை அவள் காண வில்லை. அவனுடன் மோத, அவள் கையில் இருந்த ‘பைல்’ கீழே விழுந்தது.

“ஸாரி ஸாரி சார்” வார்த்தைகள் தடுமாற அவள் பைலை சிறுப்பிள்ளை போல் பொறுக்கினாள். அப்போதுதான் அத்தனை மாதங்களுக்குப் பின் சுவாதியை ஜெய் ஆழமாகப் பார்க்கின்றான். அவன் உள்ளம் அதுவரை தேடிய பொருள் கிடைத்தது போல்.. உணர்வு மின்னலென அவள் மறைந்ததும் ஜெய்க்குக் கண்கள் கூசின. வழமைக்கு மாறான அழகிய புன்னகையைச் சுதன் காணத்தவற வில்லை.

“நைஸ் கேள்..” ஜெய் கூற,

“நோ.. நைய்ஸ்வுமன், மூணு பிள்ளங்க இருக்கு.”

“இருந்திட்டுப் போகட்டும்... ஆமா.. உனக்கு எப்படித் தெரியும் மச்......சான்”

“ சும்மா..” சுதன் கண் சிமிட்டிச் சமாளித்தான்.

“ம்.. நாமெல்லாம் ஏன், கல்யாணம் பண்ண லேட் ஆகுதுன்னு, இந்த நிமிஷம்தான் புரியிது.. மனசு என்னமோ பண்ணுது.. ஓகேடா.. இண்டைக்கு உனக்கு ட்ரீட்.. கமோன்”

“டேய்.. இண்டைக்கு மீட்டிங் டா”

“நோ ப்ரப்லம்.. நான் நல்ல மூட்ல இருக்கன். கமோன்..”

அந்தக் கம்பெனிக்கு வந்த நாட்களில் அவள் நட்பு கொண்டவள்தான் ஸீலா. இருவரும் தங்களின் மனப்பரிமாற்றங்களைப் பகிர்ந்து கொள்வதோடு மட்டும் இல்லாமல் இனிமையான, கடுமையான இணைபிரியாத நட்பாக மாறியது.

ஸீலா திருமணமாகாதவள். வீட்டில் பார்க்கும் வரன்களை, அவளுக்குப் பிடிக்க வில்லை. காரணம், ஜெய் மேல் அவள் கொண்ட ஆழமான காதல். அவன் பணக்காரன், தன் காதலை ஏற்றுக்கொள்ளமாட்டான் என்ற பேதை உள்ளம். தனக்குள்ளே பல நாட்கள் ஒருதலைக் காதலை மூடி வைத்துள்ளாள். அது சுவாதிக்குத் தெரியும். ஆனால் அவள் ஜெய்யைப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் குறைவு. அவனைக் கண்டால் கட்டாயம் ஸீலாவின் காதலைத் தெரியப்படுத்துவாள் என்று, ஸீலாவிடம் அவள் அடிக்கடி வாது போடுவாள்.

சுவாதி, சுதன், ஜெய், ஸீலா இவர்கள் மாறிமாறித் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நோக்கியிருந்தார்கள். சுவாதி ஜெய்யிடம் ஸீலாவைப் பற்றிய விடயத்தைக் கூறுவதற்காக அவனைப் பார்த்துச் சிரிப்பதும் பேச சந்தர்ப்பங்களை அமைக்கும்போதும், சுதன் ஸீலாவிடம் சுவாதி மீது அவன் கொண்டுள்ள மாறாத காதலைத் தெரியப்படுத்த சந்தர்ப்பங்களை அமைக்கும்போதும்தான் அந்த வீணான சந்தேகங்கள் சுவாதி சுதன் மத்தியில் எழுந்தன.

– தொடரும்

# வையத் தலைமை கொண்டு வாழ வேண்டும்

• திருச்சி பிருந்தா
ஆய்வியல் நிறைஞர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.






மலைக்கோட்டை மட்டுமல்ல.. கலைக் கோட்டையுமாய் உருவானதே திருச்சி... இதில் நடுத்தர உழைப்பாளர்கள் அதிகம் இருக்கும் துவாக்குடியில் அண்ணா வளைவு பகுதியில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவள் நான். குழந்தை இயேசு தொடக்கப்பள்ளியில் சேர்ந்து... தான் கற்ற கல்வியையும் நான் கற்க வேண்டும் என்று எண்ணிய என் தந்தையின் பயிற்சியினால் எல்கேஜி படிக்கும்பொழுது ஐம்பது திருக்குறள் களைப் பிழையின்றி வாசித்துப் பரிசு பெற்றதே என்னுடைய முதல் வெற்றி. எப்படி இந்தக் குழந்தை அ ஆ சொல்லும் வயதில், ஐம்பது திருக்குறள்களைப் பார்க்காமல் ஒப்பிக்கிறது என்ற கேள்வி பள்ளியையே வியக்க வைத்தது.

அதிலிருந்து பள்ளியிலும் என்னைப் பேச வைப்பதில், மனனம் செய்ய வைப்பதில் ஆசிரியர்களுக்கு ஆர்வம் அதிகம் வரவே, என் தந்தையின் தூண்டுதலும் வழிகாட்டுதலும் ஒவ்வொரு நாளும் என்னை மெருகேற்றிக் கொண்டே இருக்க... 'படித்து மதிப்பெண் வாங்குவதை விட்டுவிட்டுத் திறமைரீதியாகப் பயணிக்கத் தொடங்கு... உன்னுடைய பயணம் வெற்றிப் பயணமாக இருக்கும்' என்ற என் தந்தையின் வரிகள் உண்மையாலுமே என்னைச் செதுக்கியவை.

பேச்சுப்போட்டி பலவற்றில் பேசி, எங்கு சென்றாலும் முதல் பரிசைத் தட்டி வரும் ஒரு பிள்ளையாய்ப் பள்ளியில் பார்க்கப்படுகின்ற ஒரு முக்கியப் புள்ளியாய் இருந்தவள் நான். பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி முடித்தவுடன் பள்ளி மாற்றப்பட்டது. பாய்லர் பிளாண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு சேர்க்கப்பட்டேன். ஏனோ படிப்பைக் காட்டிலும் பேச்சுப்போட்டி, கவிதை போட்டிக்குச் செல்வதிலேயே என்னுடைய ஆர்வம் அதிகம் இருந்தது. என் தந்தையும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஏறுகின்ற மேடை எல்லாம் ஏறுமுகமாகவே அமைந்தது. வெற்றியை எப்பொழுதும் தக்கவைத்துக்கொண்டு மகிழ்ச்சிப் பாதையில் பயணித்துக்கொண்டிருந்தேன்.

பள்ளிப் படிப்பும் முடிந்தது. மன்னர் சரபோஜி கல்லூரியில் இளங்கலை ஆங்கில இலக்கியம் சேர்ந்தேன். தமிழ்த்துறையில் சென்று என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டு போட்டிகளுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அரசுக் கல்லூரி என்பதால் என்னவோ பல்வேறு போட்டிகளில் தனியார் கல்லூரிகளின் ஆதிக்கத்தினால், திறமை இருந்தும் வெற்றி பெற முடியாமல் தொடர் தோல்வியைக் கண்டேன்.

திறமை இருந்தும் பரிசு பெற முடியவில்லையே என்ற வருத்தம் என் மனதை அதிகம் புண்படுத்தியபோதும், திறமைரீதியான உழைப்பு நிச்சயம் வெற்றி பெறும் என்று, அந்தத் தோல்விகளை எல்லாம் கடந்து மீண்டும் மீண்டும் மீண்டும் மேடையேறி... அரசுக் கல்லூரி என்று மெத்தனமாகப் பார்த்தவர்கள் எல்லாம், அந்தக் கல்லூரியில் இருந்து போட்டிக்கு வந்திருக் கிறார்களா? அப்படியானால் அவர்களுக்குத்தான் பரிசு என்று சொல்லுமளவிற்கு, என்னுடைய திறமையைப் பதிய வைத்தேன்.

என்னுடைய பேச்சு சமூகத்தின் மீதான தாக்கத்தை ஏற்படுத்தும் பேச்சாகவே இருக்கும் என்று நடுவர்களும் என்னுடைய சக போட்டியாளர்களும் எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அத்தகைய சமூகத்தின் மீதான பார்வையைக் கொண்ட என்னுடைய பேச்சுதான், என்னுடைய தொடர் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. எத்தனையோ மேடைகளில் வென்று தொடர்ந்து பரிசு பெற்றுக்

கொண்டே இருந்த நான்... என் வாழ்வில் திருப்புமுனையாகக் கருதுவது பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் ஒப்பித்தல் போட்டியைத்தான்...

அந்தப் போட்டியில்தான் 2014இல் மாநில அளவில் முதலிடம் பெற்று மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களிடம் சிறந்த தமிழ்ப் பேச்சாளர் என்ற பெயரையும், இருபத்தைந்தாயிரம் ரூபாய் பரிசும் பெற்றேன். 'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல்' எனும் வள்ளுவரின் வரிகள் அன்று நினைவானது. அத்துணை நாள் கஷ்டப்பட்டு வளர்த்த என் தந்தைக்கு நான் செய்த கைம்மாறு என்று எண்ணினேன்.

இளங்கலை ஆங்கிலம் முடித்துவிட்டுப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முதுகலை ஆங்கிலப் படிப்பு சேர்ந்து பல்வேறு பேச்சுப் போட்டிகளில் தமிழகம் முழுவதும் சென்று பயணித்துப் பரிசுகளையும் கோப்பைகளையும் பெற்று வந்து 2017ஆம் ஆண்டின் சிறந்த திறமையாளர் விருதினைப் பெற்றேன். தொடர்ந்து வளரத் தொடங்கிப் பட்டிமன்றங்களில் பேசவும் ஆரம்பித்தேன். நல்லா பேசுங்க நல்லதையே பேசுங்க எனும் திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களது நிகழ்வில் முதன்முதலில் கலைஞர் தொலைக்காட்சியில் என்னுடைய முகத்தைக் காட்டிய நான்... பிறகு வேந்தர் தொலைக் காட்சியில் சுபரிமாலா ஜெயகாந்தன் தலைமையில் 2017 தீபாவளி சிறப்புப் பட்டிமன்றத்தில் பேசினேன். தொடர்ந்து பல நிகழ்வுகளில் பேசிவருகிறேன்.

வெறும் பேச்சாளராக இருப்பது என்னுடைய விருப்பம் அல்ல... என்னுடைய பேச்சு சமூகத்தை மாற்றக்கூடியதாக இருக்க வேண்டும். சமூகத்தின் மீது ஆர்வம் கொண்டு, சமூகப் போராட்டங் களிலும் ஈடுபட்டு உள்ளேன். ஈழத்தமிழர் போராட்டம், ஜல்லிக்கட்டுப் போராட்டம், நெடுவாசல் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு எதிரான போராட்டம் எனக் கல்லூரிகளில் போராட்டங்களை முன்நின்று நடத்திவைத்தேன்.

இப்படி ஐந்நூறு மேடைகளுக்கு மேல் பேசிப் பரிசு பெற்று, வீட்டிற்குள் நுழையும்பொழுது பார்க்குமிடமெல்லாம் பரிசு பெற்ற புகைப் படங்கள் இருக்கும். அது ஒரு மிகப்பெரிய ஆனந்தம். இப்படி ஊர்ஊராகச் சென்று பேசி நண்பர்களின் வட்டத்தைப் பெருக்கிக் கொண்டதால் கஜா புயலின்போது அந்த ஒட்டுமொத்த நண்பர்களையும் கட்செவி மூலம் இணைத்து, கிட்டத்தட்ட ஏழு லட்சத்திற்கும் மேற்பட்ட நிவாரணப் பொருட்களை ஒரு வாரம் அவர்களுடன் இணைந்து புயலால் அதிகம் பாதிக்கப்பட்ட அதிராம்பட்டினம், கீழத் தோட்டம், ராஜாமடம், அந்தோணியார்புரம், ஆண்டிமடம், மல்லிப்பட்டினம், ஏரிப்புறக்கரை, பேராவூரணி உள்ளிட்ட கடலோரப் பகுதிகளுக்குச் சென்று சேர்த்தேன். இத்தகைய சமூகப் பணிக்குக் காரணம் என்னுடைய மேடைப் பேச்சுதான். இத்தகைய பேச்சுத் திறமையும் சமூகத்தின் மீதான அக்கறைப் பார்வையும், என்னை இன்று புதிய தலைமுறையின் பத்திரிக்கை நிருபராக மாற்றியிருக்கின்றது. பேச்சுத் திறமையையும், சமூகப் பணியையும் சேர்த்துச் செய்ய உள்ளேன் என்று எண்ணும்பொழுது மனதார மகிழ்கின்றேன்.

பெண்ணிற்குச் சுதந்திரம் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்தச் சமூகத்தில், இதுவரை நான் செல்லுகின்ற போட்டிகளுக்கு எல்லாம் நான் மட்டும் தனியாகத்தான் சென்றுகொண்டு இருக்கின்றேன். என்னுடைய பாதுகாப்பு என்னிடம் உள்ளது, என் பார்வையில் உள்ளது என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன்.

பேச்சுத்துறை என்னை எவ்வளவு தூரம் அழைத்துச் செல்லும் என்று எனக்குத் தெரியவில்லை... ஆனால் செல்லும் தூரம் எல்லாம் நம்முடைய வெற்றிச் சுவடுகளை ஆழமாகப் பதித்துச் செல்ல வேண்டும் என்பதே என்னுடைய ஆசை... நான் பெறும் பரிசுகள் எல்லாம் என் தந்தையின் பெருமையை நிலைநாட்டும்.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வையத் தலைமை கொண்டு வாழ வேண்டும் என்பதே என்னுடைய ஆசை.

பேச்சாளர் என்கிற முகவரியோடு, சமூகப் பணியையும் சேர்த்துச் செய்துகொண்டே பயணிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

வென்றேன்.. வெல்வேன்! ■

• கோ.லீலா

# மகளதிகாரம் என்றொரு கவியதிகாரம்

மகளதிகாரம் நூலின் ஆசிரியர்.. படைப்பு டிவியில் காஃபி வித் கவிதை எனும் சிறப்பான கவிதை நிகழ்வையும் வழங்குபவர்.. அனைத்திற்கும் மேலாக முதல் முறையாகச் சந்திக்கும்போதே ஒரு அரசு அதிகாரி எப்படி இருக்க வேண்டுமோ அப்படியாக இருக்கிறார். பொன்னாடை அணிவிக்க வந்தவர்களைப் புன்னகையுடன் வரவேற்று வந்தவரின் மனம் நோகாமல், பொன்னாடையை மறுதலித்து வந்தவர்களுக்கே அணிவித்த பாங்கு, மனுவுடன் வந்த எளியோர்களைக் காக்க வைக்காமல் உடனடியாக அழைத்துத் தீர்வுக்கான வழி அல்லது ஆலோசனை வழங்கிய மனித நேயம் உடையவர் அண்ணன் திருஆண்டன் பெனி. சென்ற மாதம் மகளிர் தினத்தை முன்னிட்டு அவரைச் சந்தித்தபோது இன்முகத்துடன் பல்வேறு விஷயங்களை உரையாடினார்.



### சங்ககாலப் பெண் படைப்பாளிகளின் படைப்புக்கும் தற்காலப் பெண் படைப்பாளிகளின் படைப்புக்கும் உள்ள வேறுபாடு என்னவென்று நினைக்கிறீர்கள்?

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், காரைக்காலம்மையார், வில்லிபுத்தூர்க் கோதையார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளி வீதியார் போன்ற சங்ககாலப் பெண் படைப்பாளிகளின் பார்வைக்கு விசாலமான இடம் இருந்தது. இவர்களின் எழுத்தில் வாழ்வியல், அரசியல் சார்ந்த பொருண்மைகள் பேச வாய்ப்புகள் இருந்தன. ஏனெனில் அது ஆண்/பெண் வேறுபாடு உணரப்படாத காலம். ஆனால் தற்போதைய பெண் எழுத்தாளர்களுக்கான வெளி குறைவு. எதுபற்றி எழுதினாலும் அதை அந்தப் பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கையோடு பொருத்திப் பார்க்கும் வாசக மனநிலையும் இன்னும் சொல்வதென்றால் சக படைப்பாளிகளின் அவ்வாறான மனநிலையும் மாறாதவரை.. பெண் படைப்பாளிகள் தங்களின் கருத்தியல் வெளியினை விரிவாக்கிக்கொள்ளவே முடியாது.

### பெரியார் போன்று பெண்ணியத்திற்காகப் போராடும் ஆண்தாய்கள் குறைந்துவிட்டனரா?

இருக்கிறார்கள்.. அவர்கள் நேரம் கிடைக்கும்போது போராடுகிறார்கள் அல்லது பிரச்சனையின் அடிப்படையில் போராடுகிறார்கள். இந்த அவசர உலகில் நீண்டநெடிய சமூகப்போராட்டச் சூழல் யாருக்கும் வாய்க்கவில்லை என்றே நினைக்கிறேன். வாழ்க்கையின் பரமபதத்தின் ஏற்ற இறக்கங்களைத் தாங்கிக்கொள்ளும் அல்லது ஏற்றுக்கொள்ளும் மனநிலை எல்லாநிலையிலும் அருகிப்போய்விட்டது. பொருளாதாரச் சூழலும் இல்லை. எதிர்தாக்குதலுக்குப் பதில் சொல்லும் பொறுமையும் இல்லை. எல்லா நேரமும் சாதகமான சூழ்நிலையே இருக்காது. மனதளவிலும்/அறிவார்ந்த நிலையிலும் எல்லாச் சூழலுக்கும் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்ட பெரியாரை இனி எதிர்பார்க்க முடியாது. இருப்பவர்களைக் கொண்டு எவ்வளவுமுடியுமோ அவ்வளவு உரக்கப் பேசிக்கொள்வோம்.

### இன்றைய கல்வி பெண்களுக்குத் தெளிவைக் கொடுத்துள்ளதா? கருத்துச் சுதந்திரம் என்பது சரியாகக் கையாளப்படுகிறதா?

"உன் கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லைதான்.. ஆனாலும் இந்தக் கருத்தைச் சொல்ல உனக்கிருக்கும் உரிமையை என் உயிரைக் கொடுத்தேனும் காப்பேன்" கருத்துரிமை குறித்த மேலைநாட்டு அறிஞர் ஒருவரின் கருத்து இது. கண்.. காது... வாய் மற்றும் மனது ஆகிய நான்கும் ஒன்றிணைந்து செயல்படும்போது நல்ல கருத்துக்கள் உருவாகும்.. அவ்வாறே நல்ல கருத்துக்கள் ஏற்கப்படும். ஆனால் கண்கள் பார்த்துப் பேசியே நாளாகிவிட்டதே. சொல்பவர் மற்றும் கேட்பவர் இருவருமே "எனக்கு எல்லாம் தெரியும்" என்ற பெரியண்ணன் மனநிலையில் இருப்பதால் கருத்துச் சுதந்திரம் என்ற வார்த்தையே வழக்கொழிந்து போய்விட்டது.

மேலும் இன்றைய கல்விமுறை பெண்களுக்கு நிறைய தெளிவைக் கொடுத்திருக்கிறது. அந்தத் தெளிவும் ஆண் சார்ந்த செயல்பாடுகளில் கிடைத்திருப்பதாக நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பதுதான் அவலம். "மூக்கணாங்கயிறு

மாறுவதால்.. அடிமைத்தனம் மாறிவிட்டதாக நினைத்துவிடக்கூடாது'' என்ற வியட்நாம் முழக்கத்தை இங்கே இந்தச் சூழலில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மகளைக் கொண்டாடும் தகப்பன்கள்.. காதலியைக் குறித்தும், மகளைக் குறித்தும் கவிதை, கட்டுரை, கதை எழுதுபவர்கள், மனைவியைக் குறித்துப் புத்தகம் வெளியிடுவதில்லையே (ஒரு சிலரைத் தவிர) ஏன்?**

படைப்புப் பதிப்பகத்தின் அடுத்த வெளியீடாக வரும் எனது "நிறமி" புத்தகம் மனைவிகளுக்கானது. அவர்களின் துயரமிகு தனிமையை.. அவர்கள் மீதான நிராகரிப்பினை.. அவர்களின் அடிப்படை ஆதங்கம் புறக்கணிக்கப்பட்டதன் சிறுகுறிப்பாக அதனை எழுதியிருக்கிறேன். படைப்புப் பண்பலை நிகழ்வில் சொன்னது போல், பெண் என்பவள் ஒரு ஆணுக்குத் தாய்.. மனைவி... மகள்.. இங்கே தாய் என்பவள் கடவுள்... மகள் என்பவள் இன்னொரு தாய்.. இருவரும் ஆணின் குடும்பச் சமூகத்தில் ஒரு பாதுகாப்பான நிலையில் இருக்கும் நிலையில்.. மனைவி என்கிற பெண்மையின் துயரம் மட்டுமே இங்கு பேசும் பொருளாகியிருக்கிறது. இன்னொரு வீட்டின் இளவரசி இங்கு மனைவி ஆகிறாள்.. தாயாகித் தன் பிள்ளைக்குக் கடவுளாகவும் தெரிகிறாள்... என்பதை ஆண்கள் நினைப்பதில்லை. மீம்ஸ்களிலும்.. சிரிப்புத் துணுக்குகளிலும் மனைவிகளுக்குக் கிடைக்கிற வானளாவிய அதிகாரம் நிஜத்தில் கிடைக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். மனைவிக்குக் கணவன் பயப்படுவதெல்லாம்.. தான் செய்த தவற்றை மனைவி மன்னிக்கும்வரை அல்லது தனது தவறுகளைக் கண்டும் காணாதது போல் இருக்கும்வரை என்றாகிவிட்டது.

கடந்த தலைமுறையில் அப்பாவின் வார்த்தைக்குக் காதுகொடுத்த குழந்தைகள் இந்தத் தலைமுறையில் அம்மாவின் வார்த்தைகளுக்குக் காதுகொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். எனவே கணவன்களும் விரைவில் மாறுவார்கள் என்றே நம்பிக்கையோடிருக்கலாம்.

**பெண் தன் அக வேட்கையைச் சரியாக வெளிப்படுத்த அவர்களுக்கான வெளி அமைந்துள்ளதா?**

இப்போது மட்டுமல்ல எப்போதும் இருந்ததில்லை. இருக்கவும் போவதில்லை. அது முள்மேல் படும் சேலை. பாதிப்பு சேலைக்குத்தான் என்பது சமூகரீதியான.. உளவியல்ரீதியான... உடல்ரீதியான பார்வை. உண்மையும்கூட. ஏனெனில் அவர்களின் அக உள்வெளியில் நிறைந்திருப்பது பல்வேறு முகம்கொண்ட ஒரு ஆணும்.. அல்லது ஒரே முகம்கொண்ட பல்வேறு ஆண்களும்.

**உலகளாவிய பெண்களின் நிலையோடு ஒப்பிடும்போது நம் பெண்கள் எந்த இடத்தில் இருப்பதாக நினைக்கிறீர்கள்?**

உலகளாவிய பெண்கள் நம் பெண்களின் நிலைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதால் ஒப்பீடு சற்று சிரமமாக இருப்பதாகவே உணர்கிறேன்.

**கிராமியப் பெண்கள் நகர்ப்புறப் பெண்கள் இவர்களில் யார் படைப்புலகத்துக்காக அதிகமாகப் பங்களிக்கிறார்கள்?**

நிச்சயமாக, கிராமத்திலிருந்து நகரத்திற்குப் புலம்பெயர்ந்த பெண்கள்தான். கதவுகளற்ற.. சாளரமற்ற திறந்தவெளிச் சூழல் நிறைய எழுதுவதற்கான சூழலைக் கொடுக்கும். கிராமத்துப் பெண்களுக்குக் கிராமப்புற நூலகங்கள் அம்மா வீடு போன்ற பாதுகாப்பைத் தரும்போது இன்னும் நிறையப் படைப்பாளிகள் வெளியே வருவார்கள். ஏனெனில் அவர்களின் மனதுக்குள் வார்த்தையாக மொழிபெயர்க்க முடியாமல் இருக்கும் பக்கங்கள் கணக்கிலடங்காதவை.

**சங்ககாலப் பெண் புலவர்கள் போல் தற்காலக் கவிதாயினிகள் அரசு, அரசியல் குறித்து அவ்வளவாகப் பாடுவதில்லையே.. ஏன்?**

பேசுகிறார்கள்.. பேசவும் முயற்சிக்கிறார்கள். காதுகளற்ற இப்பெருவனத்தில் அவர்களின் பாடுபொருள்கள் காற்றோடு காற்றாகக் கலந்துவிடுகின்றன.

**தங்களின் மகளதிகாரம் கவிதைகள் பிறந்த அனுபவத்தைக் கூறுங்கள்?**

நீ மகளாகப் பிறந்து/ அழுத சத்தத்தில்/ நான் தகப்பனாகப் பிறந்தேன் என்ற உணர்வில் தொடங்கியது மகளதிகாரத்திற்கான என் பயணம். என் மகளின் ஆளுமையிலும் அதிகாரத்திலும் நான் உணர்ந்தவற்றை அப்படியே எழுதி இருந்தேன். உணர்ந்ததை எழுதியதும் எழுதியதை உணர்ந்ததுமே அந்தத் தொகுப்பு.

**உங்களைக் கவர்ந்த பெண் ஆளுமைகள் யார் யார்? ஏன்?**

என் அம்மா... என் மனைவி... என் மகள்.. ஏனென்றால் அவர்களே என்னில் யாதுமாகி நிற்கிறார்கள்.

**மகளிர்க்கான உங்கள் செய்தி..**

கருத்தியல் சார்ந்த உணர்வுகளையும்.. உளவியல் சார்ந்த உணர்வுகளையும் வெளிப்படுத்த ஒரு சாதகமான சூழல் ஏற்படும் என்று காத்திருக்காமல்.. அப்படியொரு சூழலை உருவாக்க முயற்சிக்க வேண்டும். ■

• கவி : நேசமித்ரன்
சித்திரம் : கொ.வடிவேல்

**1**

**சா**தாரண
வலியை வென்றேன்
என்பதைத் தவிர
பெரிய சாதனைகள்
ஒன்றுமில்லை
சகலத்திற்கும் பிறகு
உயிர்த்திருப்பதற்கே
இவ்வளவும்
இதை எந்தக் கல்லறையிலும்
எழுத வேண்டியதில்லை.

**2**

## மௌனத்தின் சுருதி

**பி**யானோ கட்டைகளின் மீதொரு
வண்ணத்துப்பூச்சி
பாரமற்று அமர்ந்து
காலத்தை
இசைக்கிறது. ■



• கோ. பாரதிமோகன்

# இதயத்தை இ(அ)சைக்கும் "மூங்கில் வனம்!"




"இந்தக் காட்டில்

எந்த மூங்கில்

புல்லாங்குழல்?" கவிஞர் அமுதபாரதியின் கவிதை அது.

ஒற்றை மூங்கிலென்ன...?

ஒரு மூங்கில் வனத்தையே புல்லாங்குழலாக்கி இசைக்கவைத்திருக்கிறார், கவிஞர் கூடல் தாரிக்!

அந்த இசையில் ஈரமழை, வாசம்கட்டிக் கனிந்து நிற்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மூத்தகுடி முப்பாட்டனை வழிமொழிந்த வரலாறாய்க் 'குறிஞ்சி' யிலிருந்து 'முல்லை' இறங்கிய தலைமுறைச் சான்றின் வரிசையில் ஒருவராய் வந்து நிற்கிறார், கவிஞர் கூடல் தாரிக். அவர் விளைவித்த

மூங்கில்கள் ஒரு காடாய் அடர்ந்து 'கட்செவிக்குக் களிப்பூட்டுகின்றன. 'மூங்கில் வனம்' தாரிக் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு.

விரல்நுனி பட்டால்கூட முனை வளையும் புல், பூமியை முட்டி முளைத்துவிடும் வல்லமைபோல், அத்தனை இலகுவான சொற்களில் எத்துணைப் பெரிய வலிய கருத்துக்களைத் தரித்து இசைத்து நிற்கிறது இந்த மூங்கில்வனம்!

கண்களால் கடல் காண்பது எதார்த்தத்தின் காட்சி. ஆனால், துளிக்குள் கடல் என்பது ஆன்ம தரிசனம்; ஞானம்! அந்தத் துளி, அன்பின் வசமிருந்து வாய்த்ததெனில் அதுவே பிரபஞ்சம்! ஆதியில் அலைந்து திரிந்த அணுத்துகள்கள் திரண்டு உருண்டு ஒரு படிமமான பின் அதன்மேல் விழுந்த மழைத்துளிகளினாலேயே 'பூமி' எனும் கிரகம் ஜீவகாருண்யம் கொண்டது. அஃதொப்பவே அதை, "அன்பு முதற்றே உலகு" என விளிக்கிறார், கவிஞர் கண்ணகன்.

அன்பின் ஈரப்பெருங்கருணையை யாதென நன்கு உணர்ந்திருப்பதால்தான்,

"மழையின் சாயலில்தான்
இருக்கிறார்கள்
கருணை கொண்ட
மனிதர்கள் யாவரும்" என்று பிரகடனிக்க முடிகிறது தாரிக் அவர்களால்.

மழை, கருணையின் திரவ வடிவம்!

இதன் பேதமற்ற கருணையால்தான் 'எல்லோருக்கும் பெய்யும் மழை' என்கிறான், மூவடிகளால் உலகளந்த மூத்தன்.

'மூங்கில் வனம்' வெகுவாய் நீர்மம் தொட்டு எழுதப்பட்டிருப்பதால், வாசிப்பவர் கண்களும் ஈரம் பூக்குமெனில், அதில் வியப்பொன்று மில்லை. ஏனெனில் இத்தொகுப்பின் ஈர வரிகள் மழைவாசம் மிகுந்தவை.

காலம் ஒரு கற்பனை! அது இரவு பகல் எனும் கட்புலக்காட்சியால் ஆன ஒரு மனக்கணக்கு அவ்வளவே. ஆனால், அந்தக் கணிதம்தான் எல்லையின்மையை எல்லைக்குள் வைத்து வரையறுக்க வசதியான ஒன்றாய் வரித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், வழக்கமான அந்தக் கணக்கின் காது திருகி,

"வெயில் கழித்தல்
மழை கூட்டல்
சமமாகின்றது காலம்" எனப் புதுக்கடிகை காட்டுகிறார் கவிஞர்.

ஈரச் சொற்களால் மழைநெசவு செய்யப் பட்டிருக்கும் இத்தொகுப்பின் ஒவ்வொரு இழையும் ஒரு வண்ணம் கொண்டிருப்பதை உணரமுடிகிறது. வண்ணமும் பார்வையும் வேறாகி நிற்கிறபோதும் பண்பு ஒன்றையே உயர்த்திப்பிடித்து ஒளிர்கிற வரிகள் மொத்தமும் அன்பை அள்ளிச் சுமக்கின்றன. இந்த உலகில் சக உயிரின் அன்பைப் பெறுவதொன்றே வாழ்வின் உன்னதம்; அதுவே வாழ்தலின் அர்த்தமுள்ள அடையாளம்.

கருணை, தன் இதயம் இரங்கிக் கவிஞருக்கு ஒருதுளி தன்னை ஈகிறது. அந்த ஒற்றைத்துளியை இதயமேந்திய கவிஞர், அதனூடாகத் தான் கொண்டதென்ன எனக் கொண்டாடும் அக்கூற்றுக்கு முன் நாம் ஒன்றுமில்லாமல் தொலைவதைத் தவிர வேறு வழியில்லை.

கவிஞர் சொல்கிறார்:

"உன் ஒற்றைத்துளியால்
பெற்ற பிரபஞ்சத்தைத் தவிர
என்னிடத்தில்
வேறெதுவுமில்லை"

எத்துணை எளிய ஞானம்!
உயிர் என்பது ஒரு துளிதான்.
உலகம் என்பதும் ஒரு துளிதான்.
பிரபஞ்சம் என்பதும் ஒரு துளிதான்.
எல்லையற்ற இந்தக் காலவெளியில்

அணுவளவேயான இந்த வாழ்வென்பதும்
ஒரு துளிதான்.
கடலைத்
துளி எனத் திரித்தல் ஊனம்;
துளியைக்
கடல் எனத் தரித்தல் ஞானம்!

இந்த வானத்தின் கீழ் ஊர்ந்தலையும்

உயிர்களனைத்தும் அன்பென்ற ஒற்றைத் துளிக்குத்தான் அலைந்து திரிகின்றன.

அன்பு ஒன்றுதான் உலகின்
இயக்கவியல் விதி.
உண்மையில் அன்பு என்பதில்
துளி என்ன வெளி என்ன?!

•

மௌனம் வெறும் ஓசையற்ற ஒன்றினால் உருக்கொண்டதல்ல. அது மிக அடர்த்தியானது; கட்புலனாவது.

மேலும் அது, நீள அகல உயரங்களைக் கொண்டதும் ஒளிவடிவமானதும் ஒலியாலானதும் கூட!

"நம் மொழிப்பழக்கம்
நம்மை ஏமாற்றுகிறது.
இல்லையென்றால்
கானமே 'புல்பு'லின் மணம்!
மணமே மலரின் கானம்!" என்பார், கவிஞர் இக்பால் என்பதைச் சுட்டிக்காட்டுவார், கவிக்கோ அப்துல் ரகுமான்.

அதுபோலவே மௌனத்தின் பன்முகத் தன்மையை உணர்ந்துகொண்ட கவிஞர், கண்முன் உயர்ந்து விரிந்துகிடக்கும் இறுகிய மலைத்தொடரை நீளமான மௌனம் என்றும், வனத்தில் தவமிருக்கும் துறவியின் மௌனத்துள் உறைந்த மௌனமே பேரருவியின் இரைச்சல் என்றும், நிலவின் தனித்த மௌனம் ஒளியாலானது என்றும் இயம்புகிறார்.

மேலும், கண்ணாடித் தொட்டிக்குள்ளிருந்து மேலேறும் சுவாசக் குமிழ்கள், மீன்களின் மௌனம் என்று தாரிக் அடையாளப்படுத்தும் போது ஆயிரம் அர்த்தங்கள் தம் மௌனத்தை ஓங்கி உடைத்துக்கொள்வதை உணரமுடிகிறது.

கூடுதலாய்,

"பலத்த சப்தத்துடன்
கிளை முறிந்து விழும்
இந்த மரத்தில்தான்
பூவொன்று மௌனமாய்
உதிர்தலும் நிகழ்கின்றது" என்றும்

"வனத்தின் பெருமழை கடந்தும்
கேட்கிறது
உந்தன் மௌனம்" என்றும்

மௌனத்தை மலர்த்திக்காட்டுகிறார்.

•

முழுக்க முழுக்க மழையின் குரல் கேட்கிற தொகுப்பில், மழைக்கு முரணான திசையினைச் சுட்டித் தீட்டுகிற வரிகளில்கூட ஈரச்சாரல் தெறிக்கிறது.

நினைத்தாலே நினைவில் நீர்மம் கட்டும் மண்பானை விற்கும் கிழவியொருத்தி,

தனதன்பே தண்ணீர்த் தடாகமாய் நிலவித் தாகிப்போருக்கெல்லாம் தாயாகி அருள்ந்த உள்ளூர்க்காரி.

அவள், காலம் பிறழ்ந்த பொழுதொன்றில் பிரேதமாகிக் கிடக்கிறாள்.

அதுபற்றி கவிஞர் சொல்கிறார்:

"ஊர்முழுவதும் தாகம் தணித்தவளின்
பிரேதம் குளிப்பாட்டத்தான்
நீர் தேடி அலைகின்றோம்
மழை பொய்த்த பூமியில்"

என்று வெயில் வரிகளால் வெம்மை விளக்குகிறபோதும் கண்களில் கரிப்புத்துளி பனிக்கிறது.

"நீரற்ற கிணற்றில்
உள்ளிறங்கி மேல் திரும்பும்
அப்பறவை அளந்துவிடுகின்றது

இழப்பின் துயரத்தை" என்று மனிதப் பேராசையால் சூறையாடப்பட்ட பூமியின் ஜீவநீர்மத்தைச் சுட்டுகையில், நாம் வெம்மையில் வெந்து பொசுங்கும் காலம் வெகுதூரத்திலில்லை என அபாயமணி ஒலிக்கச் செய்கையில் உயிரில் ஈரம் வற்றுவதை உணரமுடிகிறது.

ஈரம் பற்றிப் பேசும்போதே இன்னபிற வற்றையும் பேசும் இந்நூலின் சொற்கள், திணைகளையும் பருவங்களையும் கொண்டுவந்து நம்முன் நிறுத்துகின்றன. அவற்றில் நனைந்து, உலர்ந்து, மலர்ந்து, கனிந்து கரையேறுகையில் ஒரு பூதானுபவம் பெற்றுச் சிலிர்க்கிறது மனம்.

வானம் ஒரு கரும்பலகை. அதில்தான் எழுதப்பட்டிருக்கிறது உலக உயிர்களுக்கான வாழ்வின் ரகசிய வாசகம், ஆனால் எல்லோருக்கும் புரியும் மொழியில். வெம்மை வெளியிலும் ஈரத்தால் எழுதப்பட்டிருக்கும் அவ்வாசகத்தை,

"ஆதி மனிதன்
கண்டு ரசித்த
அதே விழிகளில்தான்
ஆகாயம் ரசிக்கிறேன்" என்றும்

அதன் பயனை

"பரிசில் பெற்றுத் திரும்பும்
புலவனின் மனநிலையில்
இந்த மழையினை
ரசித்துகொண்டிருக்கிறேன்" என இவர் கண்டது உரைக்கும்போது, கவிஞரின் கண்களை இரவலாகவேனும் யாசிக்கத் தோன்றுகிறது.

•

நூலின் பெயருக்கே ஏற்றவாறு 'கான்'பற்றி எழுதும் கவிஞர், ஆதி வனத்தையும் தற்போது அழிந்துவரும் வனத்தையும் இருவேறு காட்சிகளில் விரித்துக்காட்டுகிறார், இப்படி:

முதலில்,

"வேழம் வளைத்த
மூங்கிலெனச்
சட்டென நிமிர்கிறாள் தலைவி
வனம் முழுவதும்
பிளிர்கிறது அன்பு"

ஆஹா..!

கடுகளவு கவிதை. பொருளடர்த்திக்கு... கானளவுபோதுமா?

பெண்தான் மூலம்; பெண்தான் ஞாலம்.

பெண்தான் நதி; பெண்தான் கதி.

வேட்டைச் சமூகத்தின் விலங்கு விரட்டியாய் அலைந்து திரிந்த மனித மந்தையில் கனி தின்ற விதை விதைத்து அவள்தான் வேளாண்மை கண்டறிந்தாள். பெண்ணின் விழிப்புணர்வில் தான் துளங்கிச் சுழல்கிறது பூமி எனும் பேருண்மைக் குறியீடல்லவா இவ்வரிகள்!

அடுத்து,

"வனத்தையும் வாழ்வையும்
இழந்து
சபிக்கப்பட்ட யானையைத்தான்
ஆசிர்வதிக்க
நிர்ப்பந்திக்கிறான் பாகன்" என்கிறபோது ஒரு உயிரினத்தின் அழிவின் வலியை மட்டுமல்ல.. உலகின் ஒட்டுமொத்த உயிர்களின் பேரவலத்தை வரித்துச் செல்கிற வரிகளாய் இதை உணரமுடிகிறது. கவிதையில் கவிஞர் காட்டும் யானை, வெறும் யானை மட்டுமல்ல.. வனமும் வெறும் வனம் மட்டுமல்ல.. மொழியின் அடர்ப்பொருளுணர்ந்து நோக்கினால் ஆயிரம் அரசியல் தென்படக்கூடும்.

தொடர்க் கவிதைகளின் ஒவ்வொரு கண்ணியும் தனித்தனிப் படிமங்களாகவும் குறியீடுகளாகவும் தொகுப்பு நெடுக்க மழைவரிகளாலான நூலில் வெவ்வேறு நிலங்கள், வெவ்வேறு காட்சிகள், வெவ்வேறு பார்வைகள் எனினும் பண்பு ஒன்றுதான்.

அது ஈரத்தால் ஆனது.

அன்பு எனும் சாரத்தால் ஆனது.

அதனால்தான்

"உனது ஆயுதம்
எதுவாகவும்
இருந்து விட்டுப்போகட்டும்
எனக்குப் பூக்கள்தான் கேடயம்"

என்கிறார் கவிஞர். கவிஞரின் இந்த அன்பு எல்லோருக்குமானது; எல்லாவற்றுக்குமானது. எனவேதான்,

"மூங்கிலின் அழுகையை
புல்லாங்குழலும்
அறிந்திருக்கவில்லை" என்கிறார்.

மூங்கிலின் துயர் நமக்கானதும் அல்லவா?

'என் அப்பாவிடம்
ஒரு குடை இருக்கிறது' என்றொரு கவிதைத் தொடங்குகிறது.

நினைவுகளில் பின்னோக்கி நகரும் இக்கவிதை எல்லோருடைய வாழ்வின் பாதுகாப் புரிமையாலான உயிருலவும் உணர்வுப்படிமத்தை நெஞ்சில் நிறுத்தி நகர்கிறது.

வெயிலோ மழையோ எப்போதும் அப்பாவின் கையிலிருக்கிற குடை, ஒரு போர் வீரனின் துப்பாக்கி என அம்மாவின் குரல்வழி காட்சிப்படுத்துகையில் கையில் குடைகொண்ட அவரவர் அப்பாக்களின் நிழல் ஒரு குடைபோல் நெஞ்சில் விரிகிறது.

அப்பாவின் நினைவு மட்டுமே எஞ்சிநிற்கும் நாளொன்றில் தனக்குப் பெண்மகவு பிறந்த செய்தியை அவரின் குடைமுன் உரக்கச் சொல்ல...

"குடைக்குள்ளிருந்து
பொழியத் துவங்குகிறது
பேரன்பின் பெருமழை" எனக் கவிஞர் கவிதையை முடிக்கிறபோது நம்மையும் நனைத்து இனிக்கிறது சாரல்மழை.

இப்படியாக, தாயன்பின் பெருக்கோடு மழையை முழுக்கமுழுக்க அவதானிக்கிற கவிஞர்,

"முன்கூட்டியே
மழை யூகித்து
மடக்கும் குடையினைக்
கரங்களுக்குள் புகுத்துகிறாள்
அம்மா
திடீர் மழையில்
விரிக்கும் குடையில்
சேர்ந்தே விரிகின்றது பேரன்பும்"

எனும்போது, பேரன்பே மழையாவதைத் தவிர்ப்பதற்கில்லை.

தொகுப்பிலுள்ள கவிதைகளின் அத்தனைக் கண்ணிகளும் கூட்டாகவோ தனித்தோ நின்று வெவ்வேறு பொருள் தந்து, அதன் சாரத்தை ஒன்றாக்கி நம்மை இதய வனத்துள் அழைத்துச் செல்கின்றன.

கவிஞர் கூடல் தாரிக்கின் இந்த 'மூங்கில் வனம்' வளர்ந்து செழித்த ஓர் அறுவடைக் காடு.

தானியம் பு(ப)சிக்கும் ஒவ்வொருவரும்
சின்னஞ்சிறிய சிட்டுக் குருவியே!
மூங்கில் வனம்
இதயத்தின் இசை!

* * *

நூல் : மூங்கில் வனம் (கவிதைகள்)
ஆசிரியர்: கூடல் தாரிக்
அலைபேசி: 994225 30284

*

பதிப்பகம் : ஓவியா பதிப்பகம்
ஸ்ரீராம் காம்ப்ளக்ஸ்,
காந்திநகர் மெயின் ரோடு
வத்தலகுண்டு - 624 202.

கட்டுரை

• ஐசக் பேசில் எமரால்ட்

# நாஞ்சில் என்னும் தேக்க மரம்

செறிவான மரபுப்பின்னணி மற்றும் தொன்மையான பண்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கியது கன்னியாகுமரி மாவட்டம் என்னும் நாஞ்சில் நாடு. இங்கு போலியற்ற அசலான பல அறிஞர்கள் கடந்த தலைமுறையில் உருவாகி இருந்தனர். அவர்கள் குமரி நிலத்தில் வரலாற்றின் தனித்துவக்கூறுகளையும், கலைகளின் பரிணாமங்களையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்த்தனர். இலக்கிய வடிவங்களான கவிதை, நாவல் மற்றும் சிறுகதைகளில், நாட்டார் கலைகளில், நகைச்சுவையில், இசை, நடனம், அரசியல் என அனைத்தையும் விவாதத்திற்கு உட்படுத்தி மிக ஆழமான பார்வையுடன் அணுகுவதற்குப் பல அறிவுசார் பிரதிநிதிகள் இருந்தார்கள். ஏற்பின்மை பெரும்பான்மையாக இருந்தபோதும் நிகழ்த்துதல் நடந்தது.

மானுட வாழ்வில் பொருளியல் மட்டுமே முக்கியக் கருதுகோளாக மாறிய சூழலில் தற்போது முன்னிருந்த சிறுபான்மையான சிறு குழுக்கள் கூட முழுமையாக அழிந்து சிந்தனை அளவில் பொட்டல்காட்டில் வாழ்வது போன்ற நிலைக்கு மாறிவிட்டது. பொருளியலில் அடுத்த நிலைக்கு நகர்ந்து மானுட வாழ்வில் பின்னகர்ந்து தேங்கிப் போகும் நிலையைத்தான் காணமுடிகிறது. சாமானியர் ஒருவரின் இருப்பில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளை ஒப்புமைப்படுத்திப் பார்த்தாலே நிலைமையை அறியலாம். எத்தனை வளர்ச்சி, மாற்றங்கள், சிந்தனைகள் என மாறியபோதும் அந்த மனிதர் இன்றும் அதே இடத்தில் நின்று லுங்கியை மெதுமெதுவாக மெல்ல மேலிழுத்துக் கட்டுகிறார்.

நாஞ்சில் தமிழகத்தின் பிற நிலங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. கேரளத்தின் நிலச்சாயலையும் தமிழின் தொன்மையையும் உள்ளடக்கியது. ஒருபுறம் பிரமாண்ட மலையும் தென்னக எல்லையில் கடலும், இடையில் மலை சார்ந்து கானகமும், கடலை நெருங்கும் இடைநிலப்பரப்பு வயல்வெளி பசுமையும் என எழில் கொஞ்சும். அதைத் தக்கவைக்கும் பொருட்டுத் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழைகள் அதன் பங்கிற்குக் கச்சிதமாக உதவும். நிலத்தின் வழியாக நாகரிகம், அதனிலிருந்து கலை என்பது இங்கு எவ்வாறு தோன்றி வளர்ந்திருக்கிறது என்பதற்குச் சான்றாக நிறைய தொல்லிடங்களைக் காண முடியும். அதற்கான ஆய்வுகள் பல அறிஞர் பெருமக்களால் தொடர்ந்து நடந்துவந்தது. ஆனால் தற்போது மீள் ஆய்வு நிகழாத நிலை.

நாம் உருவாக்கிக்கொண்ட கலாச்சார விழுமியங்கள் சுய பெருமைக்காகவும், போட்டி மனோபாவத்துக்காகவும் படாடோபம் அடைந்துள்ளன. அதை நிறைவேற்ற ஒரு தரப்பு அரசியல், கலை என அனைத்து ஆடைகளையும் களைந்து வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்வைப் பணயம் வைத்து "இதுவே வாழ்வின் அர்த்தம்" எனப் புதிதாக வரையறுத்துள்ள



கோட்பாட்டினை வெல்கிறார்கள். வென்றபின் அதுவல்ல வாழ்வின் பேரின்பம் எனக் காலதாமதித்து உணர்வதும் நிகழ்கிறது. இன்னொரு தரப்பு, முதல் தரப்பைப் போல் தானும் அந்தக் கோட்பாட்டினை வெல்ல முட்டி மோதிப் பார்க்கிறார்கள். ஆனால் தந்திரமின்மை யினால் தோல்வியைத் தழுவும் இவர்கள் முதல் தரப்பினைக் கண்டு வயிற்றெரிச்சல் படுவதும், பின் வயிற்றெரிச்சல் தனக்கில்லை எனத் தன் பாவத்தைக் கழுவி ஏதேனும் மத ஆன்மீக நிலையங்களில் குடியேறித் தன் இருப்பைக் கடவுளின்வழி நிறுவுதலும் நடக்கும். இது ஒரு கலாச்சாரச் சிதைவுசார் உளச்சிக்கல். இன்றைய நுகர்வுக் கலாச்சார முடிச்சில் சிக்கித் தோல்வியடைந்த மனிதனை ஒன்று மதுக்கடையில் காணலாம் அல்லது ஆன்மீக நிறுவனங்களில் காணலாம். கட்டற்ற ஆன்மீகப் போதை சமீப காலங்களில் மனிதர்களின் குதூகல வாழ்வைத் தடுக்கிறது என்றே படுகிறது.

கடந்த இருபத்தைந்து வருடங்களில் கலைசார் தன்மை முற்றிலுமாக அகற்றப்பட்டது. நுகர்வை நோக்கி ஓடியதன் விளைவாகவே இருக்கும். ஓடி, பொருளியல்ரீதியான மகத்துவ வாழ்விற்குச் சென்றபின் அதிலிருக்கும் நிறைகுறைகளைக் களைய ஆன்மீகம் என்னும் அமைப்பிற்குள் தங்களை முழுவதுமாக ஒப்படைத்துவிட்டார்கள். ஏன் அந்த ஆன்மீகக் குழுக்களில் கலைத்தன்மை இல்லையா? என வினவலாம். ஆம், இசை, தியானம் போன்ற சில காரியங்கள் இருப்பினும் அதன் வீச்சு எந்த அளவு மனிதனிடம் சேர்கிறது எனக் கேட்டால் சொற்பமே மிஞ்சும். விஸ்தாரமான கலைகளை மதத்தின் மூலம் சுருக்கி உள்வாங்குவது மேலும் தேக்க நிலையைத்தான் வந்தடையும் என்பதற்கு நாஞ்சில் நாடு நற்சான்று. இந்த வாழ்வியல் முறையிலே காலம் கடந்துவிடுகிறது. கலைகள்வழி வாழ்வில் கண்டடையவேண்டிய மகத்தான தருணங்கள் ரொம்பதூரம் விலகிச் செல்கின்றன.

தேக்க நிலையை அடைந்ததற்கான காரணம் என்ன? எனப் பார்க்கையில் அவர்களாகவே விரும்பி அந்த நிலையை அடைந்துள்ளனர் என்றே படுகிறது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட காலத்தை “இது எங்கள் வாழ்வின் பொற்காலம்” என அறிகின்றனர். அந்த நாட்களின் வாசனை அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போகிறது. அதே வாசத்துடன் அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தையே கடைசிவரை வாழ்ந்து தீர்க்க வேண்டும் என முயல்கிறார்கள். புதிய சிந்தனைகள் மாற்று அரசியல் என எதையும் பரிசோதனை முயற்சி செய்வதில்லை. ஆனால் காலம் அப்படியெல்லாம் உங்களை மகிழ்ச்சியாக இருக்கச் சம்மதிக்க மாட்டேன் என சமர் செய்கிறது. தற்போதைய நெருக்கடிகளும், கடந்த காலத்திற்குச் செல்ல வேண்டிய முனைப்பும்தான் சிந்தனை தேக்க நிலையை அடைவதற்குக் காரணங்கள் எனப் பார்க்கிறேன்.

தற்போதைய நவீன இளைஞர்கள் சொந்த ஊரில் வசிக்காமல் அயல் தேசங்களுக்குப் பணிக்குச் செல்வதும் முக்கியக் காரணம். வெளிநாட்டிற்குச் செல்லும் குமரித் தமிழனின் உடல் மட்டுமே அங்கு வாழ்கிறது. மனம் குமரி மண்ணின் கடந்த காலத்தில்தான் சஞ்சாரம் செய்கிறது. ஐந்து வருடங்கள் வெளிநாட்டில் பணிசெய்து தாய்நிலம் நோக்கி வருபவனில், சிறு துளி அளவிற்கான மாற்றங்கள் கூட நிகழ்ந்திருக்காது. சொந்த மண்ணில் வசிப்பதைக் கனவாக எண்ணும் ஒருவனால் சுயமரபுக்கு உட்பட்டுக் கலாச்சாரரீதியான அடுத்த நகர்விற்குச் செல்வது கடினம். சிந்தனைப் பரிமாணம் என்பது தாய்நிலம் வழி நகர்ந்தால் மட்டுமே சாத்தியமாகும். நிகழ்காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் நடக்கும் யுத்தம்தான் வாழ்வு ஒரு சலிப்பு எனும் வளையத்திற்குள் சிக்குவதன் காரணம்.

மானுட வாழ்வு என்பதே மேம்பாட்டுக் குரியது என உணருகையில் மட்டுமே தற்போதைய இறுக்க நிலையிலிருந்து விடுபட முடியும். இதனைத்தையும் தாண்டி மேம் பாட்டிற்கான சிந்தனையை நோக்கிப் பயணிக்கையில் உடலில் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. நாஞ்சில் நாடு வளமான ஒரு விவசாய நிலம், நான்கு திணைகள் கொண்ட அற்புதம். சூழல் மாசுபடுதல், இயற்கை வளங்கள்

சுரண்டப்படுதல், காற்று மாசுபாடு, தரமற்ற இறக்குமதி உணவு வகைகள் என உடலில் அனைத்து உறுப்புகளையும் தாக்கும் எண்ணற்ற நோய்கள் வந்து சேர்ந்துள்ளன.

மற்ற எந்த நிலப்பரப்பைவிடக் குமரி மாவட்டத்தில்தான் அதிக எண்ணிக்கையிலான ஆபத்தான நோய்கள் காணப்படுகின்றன. காரணம் செழிப்பை நோக்கி மிகப்பெரிய சுரண்டல் நடைபெறுவதன் வினையே. சுரண்டலின் எதிர்வினை நேரடியாக மனிதனின் உடலைப் பாதிக்கிறது. உடல் ஆரோக்கியத்தினால் மனமும் மாசடைகிறது. தற்போது குமரியில் மனநோய் மிக அதிகமாகப் பெருகியுள்ளது. சில குறிப்பிட்ட பகுதிகளில் மிகஅதிகம். அதற்கு அந்தப் பகுதியில் கிடைக்கும் நீரின் வேதியியல் சமமின்மையா? என ஆய்வதற்கு எந்த ஆய்வாளரும் இல்லை. அரசும் இல்லை. இவை அனைத்திற்கும் காரணம் அரசியல்.

தமிழக அரசியல் முதல் உலக அரசியல் வரை தற்போது எந்த நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது? அரசியல், வாழ்வில் எத்தகைய பாதிப்பையும், நன்மையையும் கொண்டு வருகிறது? நம் குடும்பத்தில் நம் சமூகத்தில் நடக்கும் காரியங்களுக்கு மூலகாரணம் எது? ஒரு மனிதனின் இருப்பையே அரசியல்தான் தீர்மானிக்கிறது என்ற எந்த அடிப்படைப் பிரக்ஞையும் அற்றவர்களாகத்தான் தற்போதைய சமூகம் உள்ளது. அரசியலிலிருந்து முற்றிலுமாக அறுபட்ட நிலையும் காணப்படுகிறது. நாட்டின் மிக முக்கிய அரசியல் மாற்றங்கள் நிகழ்கையில் கூட ஆன்மீகச் சேனல்கள் பார்த்துக்கொண்டு வேற்றுக்கிரகவாசி போல் வாழும் நிறைய வீடுகளை அறிவேன்.

மரபுசார் விவாதங்கள் முடிவடைந்துவந்த காலகட்டங்களில்கூட குமரி மக்கள் முகத்தில் ஒரு மலர்ச்சி தென்படும். அதுவும் இன்று அரிதாகிவிட்டது. வாழ்விற்கான மகத்தான தருணங்களை அறிந்துகொள்ளும் நுண்ணுணர்வைப் பெற்ற மக்கள்தான் குமரி நிலத்தினர். ஆனால் அந்த நுண்ணுணர்வை நோக்கிச் செல்லும் தளம் மிகச் சிறுபான்மையாக இருப்பதை எண்ணிச் சலிப்புடன் பெரும் பான்மையாக இருந்துகொள்ளலாம் எனத் தங்களைத் தாங்கள் கட்டுப்படுத்திக்கொள் பவர்களும் அதிகம். இப்போது நம்மை மீள்தகவு செய்து நமக்குரிய நிலத்தின் தன்மைகளை மீட்பது காலத்தின் அவசியம். நம்மை மீட்டெடுக்கும் பொருட்டுச் சிந்தனையை மேம்படுத்த அமைப்பு சார்ந்து இயங்க ஊருக்கு ஒரு அறிவுசார்குழு தேவைப்படுகிறது. அதன்வழி கலையை, அறிவியலை, இலக்கியத்தை, மேம்போக்கான அரசியல் நிலைப்பாடுகளைக் களைந்து அரசியல் குறித்த நுண்பார்வையை உருவாக்கும் ஆரோக்கிய விவாதங்களை முன்னெடுப்பது என அமைப்புசார் இயக்கங்களினால் செயல்படுத்த வேண்டிய பணி எக்கச்சக்கம் உள்ளது. ஊருக்கு ஊர் நூலகம், உலகின் செவ்வியல் திரைப்படங்களை அறிமுகம் செய்யும் திரை அமைப்புகள் (Film Club) எனத் தேவைப் படுகின்றன. இணையம் இருக்கிறதே என இவ் முன்னெடுப்பை உதாசீனம் செய்தால் தனிநபர் சார்ந்து பெரிய பலன் இல்லாமல் போகும். இதை ஒரு சமூகச் செயல்பாடாக முன்னெடுக்கையில் தான் கூட்டுச் சமுதாயத்திற்கான மேம்பாடு நிகழும். அதற்குக் கேரளம் சிறந்த உதாரணம். இவற்றின் முக்கியத்துவம் அறிந்து செயல்படுத்த, பொருளியல் பலம் வாய்ந்த தன்னார்வலர்களின் உதவியும் மிக முக்கியம்.

எதன்வழி நம்மை நாம் இழந்தோம் என அறிதல்தான் முதலில் முக்கியம். அந்த அறிதலில் இருந்து தேக்க விழுமியங்களைக் களைவதற்கான முயற்சிகள் தொடர வேண்டும். அது ஒன்றும் நாஞ்சில் மக்களுக்கு அரிதான காரியம் இல்லை. “தேக்க” மரமாக இருக்கும் நாஞ்சில் நாடு தேக்கு மரமாக மாறி இவ்வுலகில் தன்னிருப்பை நிலைநிறுவ மேலெழும்பி வருதல் நிகழ வேண்டும். நாஞ்சில் நாட்டுக்காரன் என்ற முறையில் அதற்கான பொறுப்புணர்வுடன் சிறு மாற்றங் களையும் எதிர்நோக்கிக் கொண்டாடத் தயாராகிறேன். மேலும் இந்த நிலை குமரி அல்லாத பிற மாவட்டங்களுக்கும் பொருந்தலாம் என்றே நினைக்கிறேன். ■

வெளிச்சத்தின் முகவரி

சுகன் நினைவுகள்

• பரமக்குடி பா.உஷாராணி



# கண்ணீரால் துயரங்களின் விஷத்தைக் குடித்துவிட முடியாது

சுகன் குறித்து எழுத வேண்டும் எனும்போதே கண்கள் தளதளத்துவிடுகின்றன... மனசின் கேவலுடன்தான் எழுதத் தொடங்குகிறேன்.

சுகன் சாரின் நட்பு கிடைத்தது, இந்த வாழ்வில் நான் செய்த பெரும்பேறு.

"நல்ல சொல் ஒன்றுக்காகக் காத்திருப்பதும் பெறுவதும் மனிதனின் முக்கியமான கடமை" என்கிறார் விதுரன். அவ்வாறான வார்த்தைகள் சுகனிடமிருந்து கிடைத்தன எனக்கு. அந்த வார்த்தைகள் எனக்கான கைவிளக்கை ஏந்திக்கொண்டிருந்தன.

எத்தனை அற்புதமான மனிதர் அவர். என்னைப் போல எழுத வருபவர்களுக்கு உற்சாகமூட்டுகிற பத்திரிக்கையாசிரியர் கிடைப்பது வரம். அவரும் பேராளுமை கொண்ட படைப்பாளியாய் இருப்பதும், பிறரது எழுத்துக்களை விருப்பமாய் வாசித்து, அவற்றை நேர்த்தியாய் வெளியிடும் ரசனை கொண்டவராய் இருப்பதும் மகத்தான வரம். அப்படிப்பட்ட சுகன் சுற்றங்களில் நானும் ஒருத்தி என்னும் அழகான கர்வம் எப்போதும் எனக்குள்ளிருக்கிறது..

தொண்ணூறுகளின் மத்தியில் தினமலர் வாரமலர் டிவிஆர் நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்று எனது எழுத்துப்பயணம் துவங்கியது.

தொடர்ச்சியாக அமுதசுரபி, கோகுலம்கதிர், லேடீஸ் ஸ்பெசல் என வெகுஜன இதழ்கள் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசுகள் கிடைத்தன.

97ஆம் ஆண்டு கல்கி சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு கிடைத்தபோது என் முகவரி கல்கியில் பிரசுரமானது.. அதைத் தொடர்ந்து நிறைய சிற்றிதழ்கள் என்னுடைய முகவரிக்கு வரத் தொடங்கின. அப்படி வந்ததுதான் சுந்தரசுகன் இதழ்..

"சுகன் வாசகர்களின் இரசனைக்கேற்ப வடிவமைக்கப்படும் இதழ் அல்ல. வாசகனுக்குப் புதுப்புது இரசனையைத் தோற்றுவிக்கும் இதழ். பக்க வடிவமைப்பு தனி அழகியல்தான்.. சுகன் பக்கவடிவமைப்பைக் கருத்தில் கொள்வதில்லை. எவ்வளவு செய்திகளைக் கொடுக்க முடியும் என்பதை நோக்கமாகக் கொண்டது."

இந்த வரிகள் மனசில் பசக்கென ஒட்டிக் கொள்ள சுகனை வாசித்து முடித்த அடுத்தகணமே சந்தா கட்டிவிட்டேன்.

இவைதான் எழுத்து என என் இதயத்திற்குள் போய் அமர்ந்தது சுகன். கவிஞர்.விக்ரமாதித்தன் சொல்வாரே "இலக்கியம் என்பது புத்தியல்ல. மனசு" என்று. அவ்வகையான உணர்வு சுகன் இதழ் வாசிப்பில் கிட்டியது.

சிலிர்ப்பைத் தரும் தஞ்சைப் பிரகாஷின் எழுத்துக்கள், தன் பேனாவை வலிமைமிக்க பேராயுதமாய் நிறுத்துகிற சுகனின் எழுத்துக்கள், வித்தியாசமான களங்களில் கவிதைகள் என்று உறுமீன்கள் நீந்துகிற நதியின் கம்பீரத்தோடு இருந்தது சுகன். அது ஒரு ஆண்டுமலர் என நினைவு..

இதழ் அனுப்பியமைக்கு நன்றி சொல்லி ஆசிரியருக்குக் கடிதம் எழுதினேன். படைப்புகள் அனுப்புங்கள் என்று சுகன் சாரிடமிருந்து வந்த பதில் கடிதம் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது . ஆம் ஒரு பத்திரிக்கையாசிரியரிடமிருந்து வந்த முதல்கடிதம் என்னளவில் முற்றிலும் புதிது.

இதழில் பங்கேற்குமளவிற்கு வீச்சான படைப்புகளை எழுத முடியுமா என்கிற தயக்கத்தில் வாசகராக மட்டுமே இருந்தேன். மேலும் நான் அதிகம் எழுதும் சுபாவ மில்லாதவள். முதுகலைத் தமிழ் இலக்கியத்தைப் படித்துக்கொண்டிருந்த நேரம் அது. பரிசுப் போட்டிகளில் பங்குபெற்றதோடு எழுத்தும் நின்றுபோய்விட்டது.

ஆனால் சுகன் சார் சந்தா நினைவூட்டும் கடிதங்களின் கீழ்ப்பக்கத்தில், 'எழுத்தை விட்டுவிடாதீர்கள். எழுதுங்கள்' என விடாமல் உற்சாகப்படுத்திக்கொண்டேயிருந்தார்.

நானும் சுகனில் கவிதைகள் எழுதவந்தேன். 'அருமையாக வந்திருக்கிறது. தொடருங்கள்' என்று சாரிடமிருந்து அஞ்சலட்டை வரும். அவ்வாறு பாராட்டு பெறும் கவிதைகள் முன் அல்லது பின் அட்டைகளில் அழகாய்ப் பிரசுரமாகியிருக்கும். அதைப் பார்க்கையில் எழும் துள்ளலான குதூகலத்திற்கு ஈடு இணை வேறேதுமில்லை எனலாம்..

பிற இதழ்களில் வெளியாகும் படைப்பு களுக்கும் சுகன் சாரிடம் கிடைத்த பாராட்டு வரிகள் எல்லாம் எனக்கான உரம்.

அதற்கும் மேலாக எ.எ.தி. பக்கத்தில் தனக்குப் பிடித்த கவிஞர்கள் பட்டியலில் என் பெயரையும் சேர்த்திருக்க, தலை கிறுகிறுத்துப்போனது. அந்த நிமிஷத்தின் திகைப்புக் கொண்டாட்டம் இப்போதும் என்னுள் பசுமையாய்க் கிளை விரித்துக்கொண்டிருக்கிறது.

சுகன் என்னும் மாமனிதர், தான் எழுதுவதோடு, என் போல் எழுத வருபவர்களின் ஆற்றலை, ஊதிஊதிப் பெரிதாக்க முயற்சித்துக் கொண்டேயிருந்தார்.

'நீங்க சுகன்ல எழுதறவங்கதானே' என்றபடி என்னோடு அறிமுகமான தோழமைகள் ஏராளம்.

பதினைந்து வருடங்களுக்கு முன் ஒருவர் சுகனிடம், தொலைபேசியில் என்னுடைய முகவரியைக் கேட்டிருக்கிறார்.. 'நீங்கள் யாரென்றே தெரியாமல் அவரது முகவரி யெல்லாம் தர முடியாது' என முற்றாக மறுத்துவிட்டாராம்.

அந்த நண்பர் வேறிடத்தில் முகவரி பெற்று என்னைச் சந்திக்க வந்தவர், எவ்வளவோ கேட்டும் சுகன் முகவரி தர மறுத்த விஷயத்தைச் சொல்ல நெகிழ்ந்து போனேன். அந்த அக்கறை மிகவும் கசிய வைத்தது. இத்தனைக்கும் சுகனை நான் நேரில் பார்த்ததில்லை (கடைசி வரைக்கும்) அலைபேசியில் கூட பேசியதில்லை.

"பெண் எழுத வருவதே பல்வேறு இன்னல்களுக்கு இடையேதான். அதற்கு நடுவில் எழுதுவது அரிது. தொடர்ந்து எழுதுதல் என்பது அதனினும் அரிது. எழுத்தென்னும் பெருநெருப்பை அணையவிடாமல் வைத்திருங்கள். கூடவே இறுதிவரை வாசிப்பைக் கைவிடாதீர்கள்..." இதைத்தான் சுகன் தொடர்ந்து கடிதங்களில் வலியுறுத்தியபடி இருந்தார்.

பெண் எழுத்தை வரவேற்றுக் கொண்டாடிய மனசு அவருடையது. சக்தி அருளானந்தம், நிலாமகள், கிருஷ்ணப்ரியா என இன்னும் பலரும் சுகனில் எழுதிக்கொண்டிருந்தோம்.

வா.மு.கோமு, ஷாராஜ், வெற்றிப்பேரொளி, ஜெயதேவன், சிவக்குமார் முத்தையா, நெய்வேலி பாரதிக்குமார், இலக்குமிகுமாரன் ஞான திரவியம், தஞ்சாவூர்க் கவிராயர், நா.விச்வநாதன், வளவ.துரையன்.. இன்னும் ஏராளமான படைப்பாளுமைகளின் எழுத்துக்கள் வகைவகையாக வாசிக்கக் கிடைத்தன. இறப்பிற்குப் பின்னும் தஞ்சை பிரகாஷ் போன்ற அபூர்வங்களைக் கடித இலக்கியம் வழியே வாசகர்களுடன் பேச வைத்தது சுகன். பல்துறை அறிஞர்களோடு சுகன் எடுக்கும் நேர்காணல்கள் அபாரமானவை. அவர்களிடம் தொடுக்கும் கேள்விகளே சுகனின் அளப்பரிய ஞானத்தைப் பறைசாற்றுபவை.

இனி இப்படியொரு இதழ் வழியாகச் சுகன் நம்மைச் சந்திக்க வரமாட்டார் என்னும் உண்மை குரூரமாய் நெஞ்சைத் தாக்குகிறது. என் தாயின் மரணத்தைப் போலவே சுகனின் அந்தத் திடீர் மரணம் என்னை நிலைகுலையச் செய்துவிட்டது.

வேரற்ற இருப்பாய் ஆன வேதனை மட்டும் மூச்சு போலக் கூடவே வருகிறது. பிரிவென்பது வாழ்வின் நிச்சயமென்று தெரிகிறபோதும் மனசை ஆற்றிக்கொள்ள இயலவில்லை..

"கண்ணீரால் துயரங்களின் விஷத்தைக் குடித்துவிட முடியாது" என்று எழுதிய சுகனின் கவிதை வரிதான் நினைவில் மோதுகிறது.. என்ன செய்வது காலத்தின் கனத்த வீச்சுக்கு முன்..

சுகன் இதழின் விழாக்கள் நடக்கும்போ தெல்லாம் சுகனிடமிருந்து அழைப்பு வரும். நேரில் போய்ச் சந்திக்கும் வாய்ப்பு இறுதிவரை கிட்டாமலேயே போய்விட்டது.

ஆயினும் வானம்பாடி காலம், சரஸ்வதி காலம், எழுத்துக் காலம் என்பது போல், சுகன் காலம் என்கிற பெருமைமிகு பரம்பரையில், எனது படைப்புகளும் சிறு பூக்களெனப் பூத்திருந்தன என்பதில் பெருமிதம் கொள்கிறேன். ■

# பேரோடை மங்கை

• கவிஜி
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்




ராஜி மீண்டும் மீண்டும் முயற்சி செய்துகொண்டே இருந்தாள். அவள் முகமெல்லாம் காலை நேர வெயில் படபடத்தது.

"என்ன ராஜி, சீட்ல இல்லாம வராண்டாவுல நின்னு பதற பதற வேலை பார்த்துட்டு இருக்க...?" பதிலுக்குக் காத்திராமல் உள்ளே சென்றார் உல்லாஸ்.

உள்ளே சென்றவர், போன காலோடு வேகமாய் வெளியே ஓடிவந்தார்.

"அப்டியா..! என்னாச்சு....?" என்று பதறினார்.

"ஆமா சார்.. ஸ்ரீ க்கு போன் பண்ணிச் சொல்லிருக்கா... ஸ்ரீ எனக்குக் கூப்ட்டான். அதான் நான் ட்ரை பண்றேன். ஆனா எடுக்க மாட்டேங்கறா..." ராஜி நிஜமாகவே பதறினாள். அவளுக்கு இந்த அலுவலகத்தில் கிடைத்த நல்ல தோழி... மங்கை.

அதற்குள் வை ஃபை வசதியில் அலுவலகம் முழுக்க விஷயம் பரவிவிட்டது. ஆளாளுக்குக் கன்னத்தில் கை வைத்து.. உச் கொட்டி... பரஸ்பரம் பரிதவித்து.. என்னென்னமோ செய்தார்கள். எதுவும் செய்ய இயலாதவர்கள் இப்படித்தான் என்னென்னவோ செய்வார்கள்.

"இந்த வாழ்க்கை இப்டித்தான்.. எப்போ போட்டுத் தாக்கும்னு சொல்லவே முடியாது..." என்ற கௌதம், இல்லாத தாடியைத் தடவி தன் சோகத்தை வெளிப்படுத்தினான். மீண்டும்மீண்டும் மாற்றிமாற்றி போன் அடித்துக்கொண்டே இருந்தார்கள் அலுவலக சகாக்கள்.

"பேசாம வீட்டுக்குப் போயிப் பார்த்திடலாமா.....?" என்ற யோசனையை உடனே மறுதலித்தார்கள். மறுதலிப்புக்கு மிக எளிமையானது அலுவலகத்திற்கு விடுமுறை எடுப்பது. அது எல்லாவற்றுக்கும் மேலான தனியார் மைய தாளகதி. போனால் போகட்டும் என்று விட்டுவிடவும் முடியாது. அவளிடம் கத்திரிக்காய்க் கூட்டு வாங்கிச் சாப்பிட்டவர்கள் இவர்கள். அவளிடம் ஐநூறு ஆயிரம் என்று கடன் வாங்கியவர்கள் இவர்கள். பெர்மிசன் கூடப் போட முடியாத துர்பாக்கிய நிலையை நொந்துகொண்ட இயந்திரக் கூட்டம், மனதுக்குள் தடுமாறினாலும்.... உடல் அனிச்சையாகத் தானாகச் செய்யவேண்டிய வேலைகளைச் செய்துகொண்டுதான் இருந்தது.

ஆழ்மனம் போட்டுக்கொண்ட விலங்கின் காதுகளுக்குக் கண்கள் ஒருபோதும் இருந்ததில்லை. ஆனாலும் அவ்வப்போது ராஜி அழைத்துக்கொண்டே இருந்தாள்.

பொள்ளாச்சி தாண்டி ஒரு இருபது கிலோமீட்டர் தொலைவில் ஒரு கிராமம்.

அங்கே ஏரிக்கும் சேராத ஆற்றுக்கும் சேராத குளத்துக்கும் சேராத.. வந்து தேங்கி வழிந்து ஓடும் ஒரு பேரோடை இருக்கிறது. நிறைய படங்களில் கூட இந்த இடம் காதல் செய்ய ஏதுவாய் வந்திருக்கிறது. சுற்றிலும் தென்னை மரங்களும் பச்சை வயல்களும் உடல் விரித்துக் கிடக்க.. இடையில் சலசலத்து ஓடும் இப்பேரோடைக்கு ஆங்காங்கே இருந்து வரும் இளம் மனிதர்கள்.. கோடையைத் தவிர்த்து குளு குளு மனங்களால் நிரம்பியவர்கள். ஒரு பன்றியின் சுதந்திரத்தில் நீருக்குள் புரண்டுக்கொண்டிருப்பது வானுயர்ந்த சோலைகளின் நடுவே சொர்க்கம்தான். சொர்க்கம் மதுவிலே என்பது போல சொர்க்கம் நீரிலே. அங்குதான் அந்தக் கரையில்தான்... மங்கையின் ஹேண்ட் பேக், துப்பட்டா, செருப்பு வைக்கப் பட்ட நிலையில் அவளின் அலைபேசியும் சிணுங்கிக்கொண்டே இருக்கிறது.

நீரில் ஊறி வெளுத்து நடந்து நின்ற ஒரு ஜோடிப்பாதங்கள் கைக்கு இடம் மாறிக் குனிந்து அலைபேசியைப் பார்த்தது.

"இந்த போன்தான் அடிச்சிட்டேருந்துச்சா.... எங்கிருந்துடா சத்தம் வருதுன்னு யோசிச்

சேன்"ன்னு.... முணங்கிக்கொண்டே, அதே நேரம் நீருக்குள் பார்த்து, "அக்கா உன் போன் அடிச்சிட்டே இருக்கு..." என்று கத்தினான் ஒரு மானுட மீன் போல இருந்தவன்.

சற்று நொடிகளில் நீருக்குள் இருந்து ஒரு கடல்கன்னியைப் போல வெளியேறினாள் மங்கை.

உடல் முழுக்க நீரால் செய்யப்பட்ட சிற்பம் சொட்டியது. தேஜஸ் கூடிய கண்கள் சற்று முன் மேலெழும்பிக் கீழே நீருக்குள் புகுந்த மீன்களின் கற்பனையை ஒத்திருந்தது. தலையில் இருந்து வழிந்து ஒழுகும் பச்சை நீரில் வாழ்வின் கசடுகள் துடைக்கப்பட்டிருக்கலாம். நம்பின அவள் சிமிட்டல்கள்.

கையைத் துப்பட்டாவில் துடைத்துவிட்டு போனை எடுத்து ஆன் செய்து காதுக்குக் கொடுத்தாள்.

மறுமுனையில் ராஜி பதறினாள். "என்னாச்சு... இப்போ எப்படி இருக்கு.. எங்க இருக்கீங்க....? வரணுமா.....?"

"காலைல நெஞ்சு வலிக்குதுன்னு சொன்னார்.. அடிச்சுப் பிடிச்சு பி ஜி ஆஸ்பிட்டல் போய்ட்டோம்.. மைனர் அட்டாக்குனு சொன்னாங்க... ட்ரீட்மென்ட் போயிட்டுருக்கு. பயப்படுற மாதிரி ஒன்னும் இல்லன்னு டாக்டர்ஸ் சொல்லிருக்காங்க.. நானே அப்புறமாக் கூப்பிடறேன்.... ராஜி.." போனைத் துண்டித்தவளை அந்த மானுட மீன் பையன் கண்கள் விரியப் பார்த்தான்.

மங்கை புருவம் தூக்கிச் சிரித்தாள்.

"என்னக்கா.... யார்க்கா நீ... வந்த.... துப்பட்டாவைக் கழட்டிப் போட்ட.... பேக்கை வெச்ச.. போனைத் தூக்கிப் போட்ட.. பட்டுன்னுத் தண்ணிக்குள்ள குதிச்சு அந்த நீந்து நீந்தற... கத்தற..... குதிக்கற.. இத்தனை பசங்க இருக்காங்களேன்னு ஒரு பயம்.. ஒரு வெக்கம்.. எதுமே இல்லை.. குறுக்க வந்த தண்ணிப் பாம்பை அசால்ட்டாப் பிடிச்சுத் தூக்கி வீசற... நீ பாட்டுக்கு செமயா என்ஜாய் பண்ற.. அதும் ஹஸ்பண்டுக்கு ஹார்ட் அட்டாக்குனு வேற சொல்ற.. நாம பழகி ரெண்டு மணி நேரம்தான் ஆகுது. ஆனாலும் ஒரு மாதிரி அக்கா தம்பியா செட் ஆகிட்டோம்ல.. அதான் கேக்கறேன்.." என்றான் அவன்.

இன்னும் மிரட்சியில் இருந்து வெளிவராமல் வெயிலில் காய்ந்து நின்றிருந்தது அவன் தோற்றம்.

"காலைல அஞ்சு மணிக்கு எந்திரிச்சு... கோலம் போட்டு.. காபி போட்டு... டிபன் செஞ்சு.. ரெண்டு வகை சட்னி செஞ்சு.. மாமனாருக்கு மாமியாருக்கு வேற டையிப் தோசை.. பையன் புள்ளைக்கு வேற டையிப் இட்லி... அவர்க்குக் கல்லு தோசை.... மதியத்துக்கு எல்லாருக்கும் சாதம்... குழம்பு கூட்டு பொரியல் ரசம்... கூட மோர்... இதுக்கிடையில மாவாட்டிக்கணும்.. தண்ணி புடிச்சுக்கணும்... துணியும் துவைச்சுக்கணும்... பாத்திரம் கழுவிக்கணும்.. வீட்டைப் பெருக்கிக்கணும்... இத்தனையும் தாண்டி ஆபிஸ் வேற போகணும். அங்க சொல்லவே வேண்டாம். சாயந்தரம் 6.30 வரை ஒரு இயந்திரமா இருந்துட்டுத் திரும்பவும் பஸ் பிடிச்சு வீட்டுக்கு வரும்போது மணி 8.30 ஆகியிருக்கும். அதுக்கப்பறம்.... விடுடா.... அது ஒரு தொடர்கதை..... இதெல்லாம் சொன்னாப் புரியாது. செஞ்சுப் பாக்கணும். இதுதான் தினமும்.. தினமும்ன்னா தினமும்தான். ஒருநாள் லீவு கேட்டா உலகப் பொருளாதாரமே நின்னுடும்ங்கிற மாதிரி அந்தக் கேனயன் அதான் எங்க பாஸ் கத்துவான். அதெல்லாம் மீறி ஒருநாள் லீவுல வீட்டுல இருந்தா.... "வீட்டுப் பொம்பள இப்டித்தான் பகல்ல தூங்கறதா... வீடு விளங்குமா"ன்னு என் மாமியாரும் பக்கத்து வீட்டு மாமியாரும் பேசுவாங்க. வேற வழியே இல்லை. பாட்டி செத்துருச்சு.. தாத்தா போய்ட்டார். மாமாக்கு நெஞ்சுல வலி.. பெரியம்மா மர்டர்ன்னு எது சொன்னாலும் நம்ப மாட்டானுங்க... புருசனுக்கு ஹார்ட் அட்டாக்னா நம்பித்தான ஆகணும். அதான்.. போட்டேன் ஒரு பொய்யை. வீட்டைப் பொறுத்தவரை ஆபிஸ்ல இருக்கேன்... ஆபீஸ பொறுத்தவரை ஹாஸ்ப்பிட்டல்ல இருக்கேன்.. ஹா ஹா ஹா..." என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே ஓடிச் சென்று மீண்டும் நீருக்குள் குதித்தாள்.

நீருக்குள் குதித்து அடங்கியபோது அத்தனை நேரம் வளைந்த.. கொப்பளித்த சலனங்கள் எல்லாம் அடங்கி எதுவுமில்லாத தோற்றத்தைக் காட்டியது அந்த இடம். சூரியன் தகதகத்துக்கொண்டிருந்த அந்த வெற்றுப் பரப்பில்... சலனமற்ற அந்த ஓடைக்குள்ளிருந்து ஒரு தங்க மீனைப் போல மேல் எழும்பி மீண்டும் நீருக்குள் விழுந்தாள். இம்முறை சலனம் அடங்க வெகு நேரமானது.

அந்த சலனங்கள் மீண்டும் மீண்டும் தங்க நிறத்தில் அந்த நாளை அவளுக்கு அர்ப்பணித்துக் கொண்டேயிருந்தன. ■

உலகம் தழுவிய போட்டி...
திறமைகளுக்காக திறந்திருக்கும் மேடை...
விரைவில்....

# MEDAI

*The Stage is yours*



## படைப்புப் பதிப்பகம் வெளியீடுகள்

**நூல்களைப் பெற - 97908 21981**

